உ
அம்பாள் துணை

# கும்பாபிஷேக மலர்





மிருசுவில் கோவிற்குளம்

அருள்மிகு (கொட்டிகை) அம்பாள் ஆலயம்

# அன்பளிப்பு

எமது தேவஸ்தான வெளியீடான மகா கும்பாபிஷேக மலரினை திருவாளர் புலவர், புலவர்மணி, வை. க. சிற்றம்பலம் அவர்களிற்கு அன்பளிப்பாக வழங்குகின்றோம்.

- நன்றி

அறங்காவலர் / தலைவர்

4/3/2014

பரிபாலன சபை
மிருசுவில் (கொட்டிகை) கோவிற்குளம்
அம்பாள் தேவஸ்தானம்
மிருசுவில்
பதிவு இல: MA/5/JA/316

உ

சிவமயம்

# மகா கும்பாபிஷேக மலர்

மிருசுவில் [கொட்டிளை] கோயிற்குளம்
அம்பாள் தேவஸ்தானம்

**மகா கும்பாபிஷேக தினம் - 09.02.2014**

**மண்டலாபிஷேக பூர்த்தியும்**

**மலர் வெளியீடும் - 04.03.2014**


தொகுப்பு :


க.கயிலைவாசன் B.A (Hons)
மிருசுவிலூர் இளஞ்சைவப் புலவர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொல்லியல் திணைக்களம்
யாழ்ப்பாணம்.

| | |
|---|---|
| நூலின் தலைப்பு | : மகாகும்பாபிஷேக மலர் |
| தொகுப்பு | : க.கயிலைவாசன் B.A(Hons) |
| மொழி | : தமிழ் |
| பக்கங்கள் | : 90 |
| பதிப்பு | : முதற்பதிப்பு 2014 |
| வெளியீடு | : தென்மராட்சி மிருசுவில் (கொட்டிகை) கோவிற்குளம் அம்பாள் தேவஸ்தானம் |
| புள்ளி | : 12 |
| அச்சிட்ட பிரதிகள் | : 400 |
| அச்சுப்பதிப்பு | : சிவகஜன் பதிப்பகம் கொடிகாமம். |

# பொருளடக்கம்



| விடயம் | பக்கம் |
|---|---|
| 01. அருளாசிச் செய்தி | iii-xii |
| 02. அணிந்துரை | xiii-xv |
| 03. நூலாசிரியரின் உள்ளத்திலிருந்து | xvi-xviii |
| 04. மிருசுவில் (கொட்டிகை) கோவிற்குளம் அம்பாள் தேவஸ்தான திருப்பணி மற்றும் வரலாற்றுச் சுருக்கம் | 1 - 7 |
| 05. யாழ் மிருசுவிலூர் (கொட்டிகை) கோயிற்குளம் மகேஸ்வரியன்னை திருப்பொன்னூஞ்சல் | 8 - 13 |
| 06. மிருசுவிலூர் (கொட்டிகை) கோவிற்குளம் மகேஸ்வரியம்மை திருவிருத்தம் | 14 - 16 |
| 07. நலம் தரும் நவக்கிரக வழிபாடு | 17 - 27 |
| 08. ஆலயங்களில் தெய்வீகத்தை வளர்ப்போம் | 28 - 35 |
| 09. கண்ணகி வழிபாட்டின் தோற்றமும் இன்றைய நிலையும் | 36 - 42 |
| 10. அஷ்டலட்சுமிகளின் உண்மைப் பொருள் தத்துவம் | 43 - 51 |
| 11. தென்மராட்சியின் மரபுரிமை சின்னமாகத் திகழும் மிருசுவில் கொட்டிகை அம்மன் ஆலயம் | 52 - 60 |
| 12. முக்கிய குறிப்புக்கள் | 61 - 71 |
| 13. நன்றியுரை | 72 |



மிருசுவில் (கொட்டிகை) கோவிற்குளம் அம்பாள் ஆலய
முன்னாள் அறங்காவலர்
அமரர்கள் அ.செல்லத்துரை (விதானையார்) அவர்கள் துணைவியாருடன்



மிருசுவில் (கொட்டிகை) கோவிற்குளம் அம்பாள் ஆலய
பிரதம அறங்காவலர்
அ.குமாரசாமி (J.P) அவர்கள் துணைவியாருடன்



ஆலய நித்திய குரு



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
முதலாவது குருமஹா சந்நிதானம்
ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்தாபிதம் : 1966

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

021 222 2870



## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்மந்த பரமாச்சாரிய சுவாமிகள்

(இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஆதீன முதல்வர்)

## *அருளாசிச் செய்தி*

*அம்பிகை அடியார்களுக்கு!*

மிருசுவில் பிரதேசத்தில் கோவிற்குளம் கண்ணகி அம்மனாக எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் அம்பிகைக்கு பல கட்டிட நிர்மாணங்களுடன் அமையப்பெற்ற ஆலயம் இன்று மகாகும்பாபிஷேகம் நடை பெறுகிறமை மகிழ்ச்சியைத் தருகின்றது. இதை ஆவணப்படுத்தும் வகையில் மலர் வெளியிடுவது வரலாற்று நிகழ்ச்சியாகும். **"வேண்டுவார் வேண்டுவதை ஈவதற்கு"** உலகத்திற்கு தாயாகிய அன்னை கண்ணகா மகேஸ்வரியாக எழுந்தருளியிருந்து சிறப்பு செய்வது எல்லோருக்கும் புனிதத்தைத் தருவதாகும். **"கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்"** எனும் இந்து சமய வாக்கியத்திற்கு அமைய **"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"** என்றும் **"நித்தலும் எம்பிரான் கோயில் புகுதல்"** என்றும் நம் சமயம் உணர்த்துகின்ற நெறியை நம் முன்னவர்கள் நீர் வளமும் நில வளமும் இயற்கையழகும் ஒருங்கேயமைந்த கொட்டிகை எனும் ஊரில் சட்டத்தின் தலைவியாகிய கண்ணகி அம்பாள் இவ்வாலயத்துக்கு பல சிறப்புக்களை செய்கின்ற மூர்த்தமாக எழுந்தருளியிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சியைத்தருகின்றது. பல சிரமங்களுக்கு மத்தியிலும் இவ்வாலயத்தின் வளர்ச்சியில் பல பணிகளைச் செய்து வரும் திரு.அ குமாரசாமி உள்ளிட்ட தர்மகத்தா சபையினரை வாழ்த்திப் பாராட்டுகிறோம் இக்கும்பாபிஷேகத்தினை அனைவரும் தரிசித்து **"மண்ணில் நல்லவண்ணம் வாழ"** அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*



# மிந்திரன் கண்ணகை அம்மன் தேவஸ்தானம்

நா.சிதம்பரப்பிள்ளைக் குருக்கள், S.இந்திரராஜக்குருக்கள்
பரம்பரை பூசகரும் தர்மகர்த்தாவும்

துன்னாலை,
கரவெட்டி.



## சக்தி உபாசகதீரர், கிரியாதிலகம் சிதம்பர இந்திரராஜ குருக்கள்

(மேற்படி தேவஸ்தான குருவும் கும்பாபிஷேக பிரதம குருவும்)

## *ஆசிச்செய்தி*

அன்னை வேறு அப்பன் வேறு அன்று. ஒரே தத்துவத்தின் இணைபிரியாத இரண்டு அம்சங்கள் ஆகும். சைவர் சிவன் என்றும் கூறுவர். சக்தி என்பது ஆற்றல். ஆற்றல் சக்தி மூவா மூர்த்திகள் எல்லாவற்றிற்கும் முதல் சக்தி. அவள் ஆதி சக்தி. ஆதி சக்திக்கு துணை ஆதி சிவன். ஆதிசிவன் மகேஸ்வரர் என்றும் அவரின் சக்தி மகேஸ்வரி. இது சதாசிவ மூர்த்தத்தில் ஒன்று. சதாசிவத்திருமேனியில் இருந்துதான் ஏனைய மூர்த்தங்கள் தோன்றின என்பர். மகேஸ்வரி சக்தி வடிவமாய் அமைந்து மிருசுவிற் கோவிற்குளம் கொட்டிகை மகேஸ்வரி ஆலயத்தில் அன்னை பரார்த்தமாய் இருந்து அருள்பாலித்தருள்வாள்.

புராணங்கள் பிரபஞ்ச உற்பத்தி தொடர்ந்துவந்த வம்சங்கள், மனுக்களின் விபரம், அரசர்களின் விபரம், மன்வந்தரம் அரசவம்ச பரம்பரை முதலியவற்றைச் சொல்வன. முதல் மூன்றும் சமயம் சார்ந்தவை. பின்னிரண்டும் வரலாறு சார்ந்தவை.எதையும் எல்லாவற்றையும் பற்றி சொல்வன ஐந்தாம் வேதம் எனப்படுவன. சக்தியின் வடிவம் பற்றியும் மகேஸ்வரியின் வடிவம்பற்றியும் மார்க்கண்டேய புராணம் தேவிபாகவதம் தேவிமான்மியம் எடுத்தியம்புகிறது

அன்னை அக்னிவடிவம் அன்னை நவாக்கினியாகி மகேஸ்வரி வடிவத்தில் அமைந்து ஆசிதந்தருளுகின்றாள் மாயவடிவம்தாண்டி சக்தி மண்டல வடிவமாக திகழ்ந்துஅருள் தரும் ஆனந்தவடிவமாய் ஆனந்தரூபியாக அருள்பாலித்திடும் அம்பிகையை வணங்கி ஆசிவழங்குகிறோம்.

கும்பாபிஷேகத்திற்கு வந்து உதவி வழங்கிய சைவக்குருமார்களுக்கும் சிறப்பித்த குருமார்களுக்கும் திருப்பணிக்கு உதவியவர்களுக்கும் தர்மகர்த்தா சபையினருக்கும் மண்டலாபிஷேகம் செய்த அடியார்களுக்கும் கும்பாபிஷேகத்திற்கும் மண்டலாபிஷேகத்திற்கு வந்து உதவிய ஏனையோருக்கும் மகேஸ்வரி அம்பிகை அடியார்கள் அனைவருக்கும் கோயில் ஐயாவிற்கும் அம்பாளின் நல் ஆசி வேண்டி நிற்கிறேன்.

*நீலாம் சுகாபத்த நிதம் பிம்பாம்*
*தாநீத வேனார்பித கர்ணபூஷாம்*
*மத்லீ மதா கூர்ணித் நேத்ர பத்மாம்*
*கனஸ் தனீம் மகாசம்புவ தாம் நமாமி*



**சிவஸ்ரீ.வை.வேலாயுதம் ஐயா**
(மிருசுவில் (கொட்டிகை) கோவிற்குளம் அம்பாள்
தேவஸ்தான நித்திய குரு)

## *ஆசியுரை*

சகல வளங்களும் சிறந்தோங்கும் இலங்கைத்தீவின் யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்மராட்சிப்பதியில் ஆத்மிகம் மணம் கமழப் பொலிந்து விளங்குவதும் மிருசுவில் கொட்டிகை அம்பாள் தேவஸ்தானம் தற்பொழுது இவ்வாலயம் புனரமைப்புச் செய்யப்பட்டு புதுப் பொலிவு பெறுகின்றது. இவ் அறச்சேவையோடு தம்மை இணைத்துக்கொண்டு தொண்டு செய்து வருபவர்கள் அறங்காவலர் மதிப்புக்குரிய அம்பலவாணர் குமாரசாமியும் அவரது சமூகத்தவரும் அம்பிகை அடியவர்களும் ஆவர்.

இவ்வாலயத்தில் கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர் அடியேன் நித்திய பூசைகளை மேற்க்கொண்டு வந்துள்ளேன். அது போன்று தற்பொழுதும் இவ்வாலய நித்திய பூசைகளை மேற்கொள்வதற்கு இறையருள் கிடைத்துள்ளமை அடியேனுக்கு கிடைத்த பாக்கியம் என்றே கருதுகின்றேன்.

மகா கும்பாபிஷேக நிகழ்வினையொட்டி கும்பாபிஷேக மலர் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது. மேலும் அறப்பணி பல்லாயிரம் ஆண்டுகள் தொடரவும், ஆன்மீகம் ஓங்கவும், இறை அடியார்கள் அனைவருக்கும் மனவுறுதியையும், உடல் பலத்தையும், நீண்ட ஆயுளையும் கொடுக்கவேண்டுமென அம்பிகையை வேண்டி "மண்ணில் நல்லவண்ணம் வாழ" ஆசிகூறி அமைகின்றேன்.

- சுபம் -

சிவமயம்

"வேதாகம சிவசூரி" பண்டிதர்

# "கலாநிதி" து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் (சமாதான நீதவான்)

(நல்லை ஆதீன சிவாச்சாரியார்)



.....................201.......

## ஆசியுரை

## ஆத்ம பலமே ஆதாரபலம்

உடற்பலம், மனோபலம், ஆத்மபலம் ஆகிய மூன்றும் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வும் சிறப்பாக அவசியமானவை ஆகும். இன்று நாம் அனைவரும் கல்வியில் மேன்மை அடைந்திருக்கலாம். செல்வத்தில் மேன்மை அடைந்திருக்கலாம். பதவிகளில் மேன்மை அடைந்திருக்கலாம். ஆனால் ஆன்மீக ஒழுக்கமில்லையே, போதமில்லையோ அதைப் பெற்றால் இவை அனைத்தும் செயல்படும். ஆன்மீக ஒழுக்கநெறியில் வாழ்ந்தால் அனைவரும் ஆன்மீக வழிக்கு இட்டுச் செல்லப்படுவார்கள். மேலே குறிப்பிட்ட அனைத்தும் நாம் தேடிச் செல்ல வேண்டிய அவசியமில்லை. அனைத்தும் எம்மைத் தேடி வரும்.

ஆன்மீக ஒழுக்க நெறி வாழ்க்கையின் அடி அத்திவாரமாக நிலைநாட்டப்படுகின்றது. அது இருக்குமானால் எந்த வாழ்வும், எந்தப் புலனும், எந்த மாயையிலும் சிக்காமல் அவர்கள் நல்லதொரு வழியில் செல்லக் கூடியதாக இருக்கும். எந்தவொரு ஆண்களும், பெண்களும் சமய தீட்சை பெற்று இருக்க வேண்டும்.

இறைவணக்கமும், ஆலய வழிபாடும் தியானமும் நல்வாழ்விற்கு முக்கியமாகும்.ஆன்மீக வழியில் செல்வோமானால் நல்லதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும். அருள்மிகு மிருசுவில் (கொட்டிகை) கோயிற்குளம் அம்பாள் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெறுவது ஒவ்வொருவரினதும் ஆன்மீக பெலத்திற்கு வழிவகுக்கும்.

குறிப்பாக கண்ணகை அம்பாள் பிரதிஷ்டையும் நவநாயகர் வழிபாடும் அனைவருக்கும் சகல சௌபாக்கியத்தையும் கொடுக்கும். ஸ்ரீ அம்பாள் அருள் ஆசியால் கும்பாபிஷேக தெய்வீகப் பணியில் ஈடுபடும் தர்மகர்த்தா, பரிபாலனசபையினர், உபயகாரர் அனைத்து மக்களும் அறுபத்து நான்கு கலைகளையும் பெற்று வாழ்க வளமுடன், வாழ்க வளமுடன் வாழ்க வையகம், திருவருளால் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

"தேசமான்ய", "கலாநிதி" சிவஸ்ரீ து. கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்
J.P (இந்து சமய பிரதமகுரு)

"அன்பான பேச்சு வெற்றியைத் தரும்"

ஸ்ரீராம ஜெயம்
Srirama Jeyam

வேதாகமகிரியா கலாபூஷணம் பிரதிஷ்டா கிரியாபானு
ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ. க.ச.சோமாஸ்கந்தக்குருக்கள்
பிரதமகுரு. பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்
Vedakama Kiriya Kalapusanam, Pirathisda Kiriyabanu
Sri Vishnu Sri K.S. Somaaskanthakurukkal
*Chief Priest, Ponnalai Sri Varatharajapperumal Thevasthanam*

பொன்னாலை,
சுழிபுரம்.

Ponnalai,
Chulipuram.




அம்பாள் துணை

## ஆசியுரை

அம்பாள் அடியார்களே!

சிவபூமியாம் ஈழமணி திருநாட்டின் சிரசென விளங்கும் யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும் தழைத்து இயற்கை வளமும் சூழ்ந்த நெல்வயல்களுக்கு மத்தியில் மிருசுவில் கோவிற்குளம்-கொட்டிகை ஸ்ரீ கண்ணகை அம்பாள் திருக்கோயில் மிக பழமை வாய்ந்த புராதனமான திருவருள் மிகுந்த ஆலயம் முதலில் கண்ணகை மூலஸ்தானமாக மீளிர்ந்து பின்பு ஆகம சிற்ப சாஸ்திர பிரகாரம் ஸ்ரீமகேஸ்வரி அம்பாள் பிரதிஷ்டை செய்யப்பட்டு இந்த ஆலயம் மிகவும் கீர்த்தியும், திருவருளும் நிறைந்துள்ளது. பாலஸ்தாபனம் செய்து புதுப்பித்து வர்ணம் தீட்டி மகாகும்பாபிஷேகம் நிகழ இருப்பது மிகுந்த மகிழ்ச்சி. இப்பெரும் சாந்தியினை ஆலய பரிபாலன சபை அடியவர்கள் அனைவருக்கும் அம்பாள் பரிபூரண அருட்கடாட்சமும் கிடைக்க ஆசி கூறி அமைகிறேன்.

2000ம் ஆண்டு இக்கும்பாபிஷேகத்தை அடியேன் செய்ததை இவ்விடத்தில் நினைவு கூருகின்றேன்.

- சுபம் -

குருக்கள் மாவடி வீரகத்திப்பிள்ளையார் கோவில்
KURUKKAL MAVADY VEERAKATHI PILLAIYAR KOVIL
பதிவு இலக்கம் :HA/JA/5/279

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

Mirusuvil North,
Mirusuvil.



**க.சுவாமிநாதன்**
(மிருசுவில் குருக்கள்மாவடி வீரகத்திபிள்ளையார் ஆலய தர்மகர்த்தாவும் நித்திய அர்ச்சகரும்)

## *ஆசியுரை*

மிருசுவில் வடக்கு கோயிற்குளம் அம்பாளுக்கு (கொட்டிகை) மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு அதன் நிமித்தமாக கும்பாபிஷேக மலர் வெளிவருவதுபற்றியும் நான் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.இவ்வூர் மக்கள் அனைவரும் பெரும் பங்களிப்புச்செய்து புனருத்தாரண பணிகளை பூரணமாக நிறைவு செய்துள்ளமை போற்றப்பட வேண்டியதாகும்.

மிருசுவிலில் வீற்றிருக்கும் அம்பாள் ஆலயம் தனிச்சிறப்பு வாய்ந்தது. இந்த ஆலயம் ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததற்கு சான்றுகள் உள்ளன. இங்குள்ள தேர் 160 ஆண்டுகளுக்கு முன்பே தென்மராட்சியில் மரத்தினால் செய்யப்பட்ட சிறப்பு அம்சங்கள் பொருந்தியதாகும். 175 ஆண்டுகளுக்கு முன்பே வைரக்கற்களால் கட்டப்பட்ட சிறப்புமிக்க ஆலயமாகும். இதனை அந்த நேரத்தில் முகாமையாளராக இருந்த கிராம விதானையார் அமரர். கயிலாயர் ஐயம்பிள்ளை (சின்னப்பு விதானையார்) என்பவரே பொறுப்பாளராக நின்று அழகான கோயிலாக அமைத்தவராவர். இவரின் சந்ததியினரே தற்போது தர்மகத்தாவாக இருந்து கோயிலை நல்லமுறையில் நிர்வகித்து வருகின்றார்கள்.

இப்பெருவிழாவினை சிறப்புற நடாத்துவதற்கு துணைபுரிந்த தர்மகர்த்தா சபையினருக்கும், நிதியினை வாரிவழங்கிய வள்ளல்களுக்கும், ஆலயத்தை சிறப்புற அமைத்த கலைஞர்களுக்கும், சரியைத்தொண்டுகள் செய்த தொண்டர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் அம்பாளின் அருள்கிடைக்க நல்லாசிகள் கூறுகின்றேன்.

***வணக்கம்***

## யாழ் தென்மராட்சி மிருசுவிலில் கோயிற்குளம் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கண்ணகா மகேஸ்வரி ஆலயத்தின் கும்பாபிஷேக மலருக்கான ஆசியுரை



*முது பெரும்புலவர், கலாபூஷணம், புலவர்மணி - இணுவில் -*
*வை.க.சிற்றம்பலம்*

---

பொன்னொடு மணிகலந்து பொலிந்திடும் மிருசுவிலூர்
முன்னிலை வகிப்பதற்கு மூலகாரணமா யமைந்த
அன்னையாம் கண்ணகா மகேஸ்வரி அருளே யென்று
மன்னிடும் உலகங் கூறும் வாசகம் வாழ்வில் கண்டோம்

ஆலயப் பொறுப்பை ஏற்ற அறங்காவல் குமாரசுவாமி
சாலவும் நித்திய நைமித்திய பூசைகள் செய்வித்தின்று
காலமெல் லாம்விளங்க கோயிலை புதுக்கியே பொலியச் செய்து
மேலுமே நவக்கிர மண்டபம் புதிதாய்ச் செய்வித்தார்

அடுத்தவர் கோயிற்கும்பாபிஷேகத்தைச் செய்வித்து
தொடுத்ததற் கடையாளமாய் மலரொன்றும் வெளிவரவும்
எடுத்தகா ரியங்க ளெல்லாம் தேவிதுணையால்
முடிந்ததில் மேன்மை யுற்றார் உதவி நிர்வாகம் ஒன்றாக

### ஆசியுரை

மூலகா ரணமாயுள்ள மூர்த்தியாம் தேவி தன்னை
சாலவும் வேண்டிக் கும்பாபிஷேகத்தை நிறைவு செய்த
சீலமார் வேதாகம கிரியா பூஷணக் குருக்களும் பூசகரும்
கோலமாய் பல்லாண்டு வாழ குறித்தாசி வழங்கினேனே

அனைத்திலும் கவனஞ் செல்லும் அறங்காவலர் குமாரசுவாமி
வனப்புடைக் கும்பாபி ஷேக மலரது ஆசிரியர்
அனைத்துமே வாரியீந்த இந்தவூர் பிறவூரன்பாளர்
நினைத் தன்னை பாதமேத்தி வாழ்த்தி நல்ல ஆசியும் உரைத்தேனே

வந்தனை யோடு கும்பாபிஷேக மலரினைப் பெற்றுதவும்
சிந்தனைச் செல்வரோடு தினந்தினம் தொண்டு செய்வோர்
மங்கல மிசைப்போர் மலருடன் மாலைகள் புனைந்து ஆன
செந்தண்மையாளர் பல்லாண்டு வாழ ஆசியுமுரைப்பேனே

வணக்கம்



சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர்
**மு.திருஞானசமபந்தப்பிள்ளை**
*தலைவர்*
*அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்*

## ஆசியுரை

மிருசுவில் (கொட்டிகை) கோவிற்குளம் அம்பாள் ஆலய புனருத்தாரண திருப்பணிகள் பல நிறைவுபெற்றும் கண்ணகை அம்பாளுக்கு உள்வீதியில் கிழக்கு வாசலாக ஒரு தனி ஆலயமும் நவக்கிரகங்களுக்குரிய பிரதிஷ்டையும் அமைக்கப்பெற்றும் சிறப்பாக எதிர்வரும் தைமாதம் அம்பிகையின் திருவருள் துணைகொண்டு மகா கும்பாபிஷேக நிகழ்வு நடைபெறுவதுடன் அவ்வமயம் கும்பாபிஷேக மலர் ஒன்றினை வெளியிட உள்ளதை அறிந்து மிக மகிழ்வடைகின்றோம்.

"திருக்கோயில் இல்லாததிருவில்லூர் அடவிகாடே" என்பது அப்பர் பெருமான் அருள்வாக்கு இதனை உணர்ந்த எம்முன்னோர் "கோயிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் வழிமொழிந்து தாம் குடியேறும் இடங்களில் எல்லாம் தவறாது வழிபாட்டிற்குரிய ஆலயம் ஒன்றையும் முன்னோடியாகவே அமைத்து செந்நெறியில் சென்றனர். இதன் மரபாகவே மிருசுவில் அம்பிகை ஆலயம் எம்முன்னோரால் அமைக்கப்பெற்றது.

அருமையும், பெருமையும், அற்புதமும் வாய்ந்த இவ்வாலயம் பழம்பெரும் வரலாறு உடையது. சரித்திர நிகழ்வுகள் பல நடைபெற்ற திருத்தலம். அடியவர்களுக்கு அவ்வவர் வேண்டுதல்களை தவறாது சுரந்தளித்த அம்மை அருளாட்சி செய்யும் திருமுன்னிலையுடையது.

ஆலயத்தின் வரலாறு, சிறப்புக்கள், திருப்பணிகளின் முன்னேற்றங்கள் சைவசமயக்கொள்கைகள் நெறிமுறைகள் உயர்வுகள் என்றின்னோரன்னவற்றை மக்கள் அறிந்து கொள்ளவும் எதிர்காலத்தில் பேணப்பட வேண்டிய ஆவணமாகவும் கும்பாபிஷேகமலர் மிளிரவேண்டும் என அம்பிகையின் திருவடிகளைப் போற்றி ஆசிவேண்டி அமைகின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்"

**திரு.க.முத்துலிங்கம்**
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி,
சாவகச்சேரி.

**திரு.க.முத்துலிங்கம்**
அருணோதயம்
மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.
09.02.2014

## ஆசிச்செய்தி

மிருசுவில் (கொட்டிகை) கோயிற் குளம் அம்பாளின் அருளாட்சியோடு உருவாகும் கும்பாபிஷேக மலரிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டில்லாத மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்மராட்சிப் பிரிவில் சகல வளங்களையும் கொண்டமைந்த அழகியதோர் கிராமமாக விளங்கும் மிருசுவில் பதியில் தனித்துவம் பெற்று விளங்குகின்ற பழம் பெரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க அம்பாள் ஆலயமாகிய கோயிற்குளம் அம்பாளின் மகிமையை அறியாதோர் இங்கு எவருமில்லை. அம்பாள் அருளாட்சியினாலே, அன்னையின் திருவருட் சிறப்பினாலே இந்த ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு 09.02.2014 அன்று கும்பாபிஷேகம் நிகழ இருப்பது அடியவர்களாகிய எமக்கு கிடைத்தற்கரிய பெரும் பேறாகும்.

வடபகுதியில் கண்ணகி அம்மன் வழிபாடு தோன்றிய காலத்தில் கற்புக்கரசி கண்ணகி பழம் பெரும் புகழ்வாய்ந்த வற்றாப்பளைக்குப் போகும் வழியில் பாரிய பாலைமர நிழலில் தங்கி இருந்து அருள் பாலித்துச் சென்ற இடங்களில் ஒன்றாயும் இவ்வாலயம் சிறப்புப் பெற்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுவது மகிமைக்குரியதாகும்.

காலங்காலமாக இவ்வாலய தர்மகத்தாப் பொறுப்பினை ஏற்று அம்பாளின் அடிபணிந்து தொண்டர்களாகி நிற்கும் அடியார்களின் அரும் பெரும் முயற்சியினால் ஆலயத்தின் அழகும், நிர்மாண வேலைகளும் வளர்ந்தோங்கி வருகின்றன. மூலமூர்த்தியாக மகேஸ்வரி அம்பாள் ஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளதுடன் கண்ணகி அம்பாளுக்கு தனியாக கோபுரத்துடன் கூடிய ஆலயமும் இங்கு காணப்படுவது தனித்துவமான சிறப்பம்சமாக உள்ளது.

இவ்வாலயத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சித்திரத் தேர் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கும் தேர்களில் மிகவும் பழமை வாய்ந்ததும் உயரமானதுமாகும். 1874 ஆம் ஆண்டிலே இத் தேர் உருவாக்கப்பட்டுவிட்டதை நோக்கும் போது இவ் ஆலயத்தின் பழமையும் பெருமையும் நன்கு தெளிவாகும். இன்று அம்பாள் எழுந்தருளி வீதி உலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கும் அற்புத தேர் வடிவமைக்கப்பட்டு அழகுற காட்சி தருவது அம்பாளின் அருட்கடாட்சமாகும். முருகப்பெருமான், விநாயகப்பெருமான் ஆகிய தெய்வங்களுக்கென தனித்தனி ஆலயங்களும் இங்கு சிறப்புற அமைக்கப்பட்டு வழிபாடியற்றப்படுவது சிறப்புக்குரியதாகும்.

ஆனி மாதத்தில் இவ்வாலய மகோற்சவம் சிறப்பாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. ஆடிப்பூரம், நவராத்திரி முதலிய பெருவிழாக்களும் நடைபெறுவதுடன் ஆடிப்பூரத்திற்கும் மானம் பூத்திருவிழாவின் போதும் அம்பாள் மிருசுவில் கிராமம் தோறும் ஊர்வலமாக உலா வந்து அருள் பாலிப்பது இந்த ஆலயத்தின் விசேடமான அம்சமாகக் காணப்படுகிறது.

இத்தகைய சிறப்புப் பொருந்திய வரலாற்றுப் புகழ் மிக்க கோயிற்குளம் அம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேக மலருக்கு ஆசியுரை வழங்கும் பேறு அடியேனுக்கு கிடைத்திருப்பதும் அம்பாளின் அனுக்கிரகமே ஆகும். அம்பாளின் பாதக்கமலங்களை பணிந்து கும்பாபிஷேக மலர் சிறப்புற ஆசிகூறி அமைகின்றேன்.

*- சுபம் -*

*க.முத்துலிங்கம்*



**அ.குமாரசாமி (J.P)**
(பிரதம அறங்காவலர்/தலைவர்)

*அம்பிகை துணை*

**மிருசுவில் [கொட்டிகை] கோவிற்குளம் அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தாவின்**

# அணிந்துரை

“கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்”எனும் கூற்றுக்கமைய எங்கள் எல்லோரையும் ஆலய சூழலில் வளர்த்து ஆளாக்கிவிட்ட செம்மல் திரு.சின்னப்பு விதானையாரின் திருப்பாதங்களை மனதார வணங்கி இந்த கும்பாபிகே மலருக்கான அணிந்துரையை எழுதுகின்றேன்.

அடியார்களின் அன்புடனும் பெருமதிப்புடனும் பரிபாலனம்செய்து வந்த திரு. அ.செல்லத்துரை அவர்கள் 2003ம் ஆண்டு மகோற்சவதினத்தின் முதல் நாள் (04. 07. 2003) இறைபதம் அடைந்துவிட அம்பாள் அடியார்களின் அன்புடனும் பேராதரவுடனும் ஆலய நிர்வகத்தினை பொறுப்பேற்று நடத்திவருகின்றேன். இன்று இவ் ஆலயத்தில்பலரது ஆதரவுடன் பல்வேறு திருப்பணிவேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. கும்பாபிஷேகம் என்பது குறிப்பிட்ட வருடங்களிற்கு ஒரு முறை இடம் பெற வேண்டும் என்பதே நியதி அதுவும் உத்தராயணத்துக்குள்( தை முதல் ஆனி மாதத்துக்குள்) கும்பாபிஷேகம் செய்வதையே ஆகமங்கள் உத்தமமாகக் கூறுகின்றன. அந்தவகையில் 2014ம் ஆண்டு தை மாதம் 27ம் திகதி (09.02.2014) இக் கும்பாபிஷேகம் நிகழ்வதற்கு அம்பிகையின் திருவருள் கை கூடியுள்ளமையை இட்டு பூரிப்படைகின்றேன். அத்துடன் எனது மேற்பார்வையின் கீழ் திரு. ச. யோகேஸ்வரன் என்பவரினால் நிர்வகிக்கப்பட்டு வந்த நிர்வாகம் தற்போது எனது பெறாமகன் நமசிவாயம் கமலேந்திரனால் (சந்திரா)அவர்களின் வழிகாட்டலில் கோவில் நிர்வாகம் சிறப்புற நடைபெறுகின்றது.

இங்கு இடம்பெற்ற மிகவும் முக்கியமான திருப்பணியாக 1925ம் ஆண்டு கட்டப்பட்ட அர்த்த, மகா மண்டபம் முழுமையாக இடித்து மிகவும் அழகான முறையில் சிறப்பாக அமைத்து தந்த அராலியூரைச்சேர்ந்த ஆலய கட்டட (கலாநிதி) வல்லுனர் திரு.ஆர். ரகு அவர்களுக்கும் அவரை சார்ந்தவர்களுக்கும் இவர்களை எங்களுக்கு

அறிமுகம் செய்து கட்டிடவேலைகளை சிறந்தமுறையில் செய்வித்து குறித்தகாலத்திற்குள் நிறைவுபெறச் செய்த திரு.அ.நமசிவாயத்தின் மருமகன் எம். தவநாதன் அவர்கட்கும் நாங்கள் மிகவும் நன்றியுடையவர்களாகவும் எங்களின் மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றோம். மேலும் இத் திருப்பணிகளுக்கும் மகா கும்பாபிசேகத்திற்கும் தேவையான பெரும் நிதி சின்னப்பு விதானையாரின் சந்ததியினராலும் அவ்வூர் மக்களினாலும் மற்றும் அம்பிகை அடியார்களினாலும் வழங்கப்பட்டது. இதனைக் கொண்டு புதிய பல கட்டிடங்களும் மற்றும் வெளி மண்டப மேல் கோப்பியம் பிரித்து பழைய வளைகள், சிலாகைகள் மாற்றி புதிதாகப் போடப்பட்டது. மின்சார இணைப்புகள் வர்ணம் பூசுதல் இன்னும் பல்வேறுசெலவுகள் அம்பாள் அடியார்கள் தந்த பண உதவியுடன் செய்யப்பட்டுள்ளது. இதன் வரவு செலவு விபரங்கள் இம்மலரின் பின்பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

சிறப்பாக இத்திருப்பணியை 2013ம் ஆண்டு ஆனி மாதம் பாலஸ்தாபனத்துடன் ஆரம்பித்த போது "தம்பி நீ வேலைகளை தொடங்கு அம்பாள் அருளும் பணமும் நம்பிக்கையாக் கிடைக்கும்" என்ற ஆசிமொழிகளைக் கூற வேலைகளை ஆரம்பித்து வைத்த எங்கள் ஆலய மகோற்சவ பிரதமகுரு சக்தி உபாசகதீரதிலகம் சிவஸ்ரீ சிதம்பரப்பிள்ளை இந்திரராசா குருக்கள் (துன்னாலை இந்திரன் அம்பாள் ஆலய தர்ம கர்த்தாவும் பிரதம குருவும்) அத்துடன் சகல திருப்பணிகளும் சிறப்பாக நிறைவுற்று இன்று (09.02.2014) மிகவும் சிறப்பாக மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தை மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மகாகும்பாபிஷேகத்தின் பிரதம குருவாக இருந்து சிறப்பாக யாவற்றையும் நிறைவு செய்ததற்கும் நாங்கள் யாவரும் மிகவும் அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.அத்துடன் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு அரிய தொண்டாற்றிய இவருடன் ஏனைய சிவாச்சாரியார்கள் அனைவருக்கும் அவர்களுக்கு உதவிய தொண்டர்களுக்கும் எங்கள் உள்ளம் கனிந்த நன்றிகள்.

மேலும் இவ்வாலயத்தின் குருவாக இருந்து அடியார்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று தினமும் இருகாலப் பூசைகள் செய்து கொண்டும் ஆலய வளாகத்தில் பூந்தோட்டம் அமைத்து நல்ல முறையில் பராமரித்து சிறந்த சேவைகளை செய்து கொண்டிருக்கும் எங்கள் ஊர் தியாக செம்மல், ஒழுக்க சீலர் சிவஸ்ரீ வை. வேலாயுதம் ஐயா அவர்களை பாராட்டாமலும் மனமார்ந்த நன்றி கூறாமலும் இருக்கமுடியாது.

இவ்வாலயமகோற்சவ காலங்களில் குறிப்பாக தேர் உற்சவ காலங்களில் எழுந்தருளி அடியார்களுக்கு ஆசி உரை கூறும் நல்லை ஆதீனம் இரண்டாவது குருமகா சன்னிதானம் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களை அன்புடன் நன்றி கூறி வணங்குகின்றோம்.

இவ்வாலயத்திற்கு அரிய பல தொண்டுகள் குறிப்பாக கட்டிடங்கள் முதலிய கட்டுவித்த மேலும் இத்திருப்பணிகளுக்கும் மகா கும்பாபிஷேகத்திற்கும் பண உதவி புரிந்த அத்தனை அடியார்களுக்கும் அன்புடன் நன்றி கூறுகின்றோம்.

இவ்வாலயத்தில் மிகவும் சிறப்பான முறையில் மின்னிணைப்புகள் செய்த மின்னிணைப்பாளர் மட்டுவில் திரு. எ. பிரேமதாஸ் அவர்களுக்கும், அவரது குழுவினர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள். மேலும் இவ்வாலயத்தில் முகவாசல் பகுதியில் வெல்டிங்வேலைசெய்து அழகுபடுத்திய திரு.ரதன் அவர்களுக்கும் நன்றிகள்.

இம் மலரிற்கு ஆசி உரை வழங்கிய சகல பெருந்தகைகளிற்கும் எங்கள் அன்பார்ந்த நன்றிகள்.

ஆலய களஞ்சிய பொறுப்பாளராக இருந்து சகல வேலைகளையும் திறம்பட செய்து சிவாச்சாரியார்களுக்கு உடனுக்குடன் அவர்கள் கேட்ட பொருட்களை கொடுத்து மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற சகல வழிகளிலும் உதவிய திரு.து.சண்முகம் (துரை) அவர்கட்கும் அவருடன் இருந்து செயற்பட்ட அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

மங்கள வாத்தியம் வழங்கிய கைதடி திரு.பவளம் குழவினருக்கும் மாலைகள், பூக்கள் தேவையான பொழுது எல்லாம் தரமாகக் கொடுத்து உதவிய திரு.க.ஜெகன் அவர்கட்கும் எங்கள் நன்றிகள்.

இம் மலரின் ஆசிரியராக இருந்து சகல வழிகளிலும் எல்லா விபரங்களையும் எடுத்து ஒரு சிறந்த மலராக வெளிவர முக்கிய பங்கு எடுத்த யாழ் பல்கலைகழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சியாளராக பட்டம் பெற்ற எங்கள் ஊர் வளர்ந்து வரும் இளம் கலைஞன் இளம் சைவப்புலவர் திரு.க.கயிலைவாசன் B.A(Hons) அவர்களை நாங்கள் போற்றாமல் நன்றி கூறாமல் இருக்க முடியாது.

மேலும் இம் மலரை திறம்பட பதித்து உரிய நேரத்தில் தந்து உதவிய சிவகஜன் பதிப்பகத்தினருக்கும் எங்கள் நன்றிகள்.

இறுதியாக இந்த ஆலய திருப்பணிகளிலும் மகாகும்பாபிஷேகத்துடனும் தொடர்பு உள்ள அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள். அவர்கள் சிறப்புடன் என்றும் வாழ அம்பாளை பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

- சுபம் -

## நூலாசிரியரின் உள்ளத்திலிருந்து.........



**க.கயிலைவாசன்** *B.A (Hons)*
(மிருசுவிலூர் இளஞ்சைவப்புலவர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொல்லியல் திணைக்களம்
யாழ்ப்பாணம்)

இறைவழிபாட்டிலே அம்பிகை வழிபாடு மிகப்பழமையானது இருக்கு வேதகாலத்திற்கு முன்னர் பழைய உலகத்தின் முக்கிய தேவதையாக தேவி வழிபாடு இருந்தது. மொகஞ்சதரோ நாகரிகம் பற்றிய தொல்பொருள் ஆய்வுகளிலே கிடைத்த சரித்திரச் சின்னங்கள் இதற்கு சான்று பகர்கின்றன. அந்த நாகரிகத்திலே பிரபலமாக இருந்த அம்பா தேவி வழிபாடு (mother goddess) பாரசீகத்திலிருந்து கிறீஸ்வரை கூட அப்போது பரவியிருந்தது என்றும் சரித்திர ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அந்தவகையில் இலங்கையின் வடமாகாணத்தில் தென்மராட்சிப் பதியின் மிருசுவில் கிராமத்தில் கொட்டிகை எனும் பிரிவில் 200 வருடங்கள் பழமைவாய்ந்த ஆலயமாக விளங்கும் மிருசுவில் (கொட்டிகை) கோயிற்குளம் அம்பிகை தேவஸ்தானம் பல வரலாற்றுச் சிறப்பு மிக்க அம்சங்களை தன்னகத்தே கொண்ட ஆலயமாக விளங்குகிறது. இவ்வாலயத்தில் பாரிய திருப்பணி வேலைகள் இடம்பெற்று குறிப்பாக ஆதியில் மூலவராக இருந்த கண்ணகை அம்மனுக்கு தனியாக கிழக்கு வாசல் நோக்கிய ஆலயம் உட்பிரகாரத்தில் அமையப்பெற்றுள்ளது. மற்றும் நவக்கிரக ஆலயம் என்பன அமைக்கப்பட்டதோடு ஏனைய பல திருத்த வேலைகளும் இடம் பெற்றுள்ளன. இத்திருப்பணிவேலைகள் பாலஸ்தாபனத்துடன் ஆரம்பித்த போது அறங்காவலர் சபைத்தலைவர் அவர்கள் "வேலைகளைத் தொடங்கிவிட்டோம் பணத்திற்கு என்ன செய்ய...." என யோசித்துக் கொண்டிருக்கும்போது அம்பிகையே அவரது யோசனைக்கு முற்றுப்புள்ளி வைத்து இனிதாக இத்திருப்பணிகள் நிறைவுபெற வழிசமைத்துத் தந்துள்ளார்.தேவஸ்தானத்தில் பல திருப்பணி வேலைகள் இடம்பெற்று 2014ம் ஆண்டு தை மாதம் 27ம் திகதி (09.02.2014) மகாகும்பாபிஷேகம் நிகழ திருவருள் கை கூடியுள்ளது. இக் கும்பாபிஷேகத்தினையொட்டி ஓர் மலர் வெளியிடவேண்டும் எனவும் அந்த மலரின் ஆசிரியராக இருந்து நீங்கள் செயற்பட வேண்டும் எனவும்

அடியேனை ஆலய பரிபாலன சபைத்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டபோது அம்பிகையே இவ் உத்தரவை வழங்கியதாக எண்ணி மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.

நான் எழுத உட்காரும் போதெல்லாம் நான் எழுதுவதாகவே எனக்குத் தோன்றவில்லை. ஏதோ ஓர் சக்தியும் உத்வேகமும் என்னை ஆட்கொள்கின்றன. சில புதிய வார்த்தைகள், புதிய உவமைகள் வந்து விழும் போது தலை முதல் கால் வரையில் ஒரு புது உணர்ச்சி ஏறுகின்றது. என்னையறியாமல் மயிர் கூச்செடுக்கிறது சொல்ல சொல்ல சுகமாக இருக்கின்றது. அது அம்பிகையின் அருள் என்றே அடியேன் கருதுகின்றேன்.

1814ம் ஆண்டு தொடக்கம் அம்பிகை கோயில் பலரது பரிபாலனத்திலும் பல்வேறு வளர்ச்சிகளைக் கண்டுள்ளது குறிப்பாக 1985ம் ஆண்டு மாசி மாதம் தொடக்கம் இவ்வாலயத்தின் நிர்வாகம் மிருசுவில் கண்டாவளை ஆகிய பிரதேசங்களில் கிராமசேவகராக இருந்த அமரர் அம்பலவாணர் செல்லத்துரை அவர்களின் கீழ் வந்தது. அன்று தொடங்கி 2003ம் ஆண்டு வரை இவரது பரிபாலனம் ஊர் நன் மக்களின் ஆதரவுடன் இடம்பெற்றது இவருடைய காலத்தில் ஆலய நிர்வாகம் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டது. இவரது நிர்வாகப் புலமையினால் வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாலய வரலாற்றில் இவரது காலம் ஓர் உன்னதகாலமாக போற்றப்படுகிறது. இவரது பரிபாலனத்திலயே இவரது தம்பியார் திரு.அம்பலவாணர் குமாரசாமி அவர்கள் அண்ணனின் பணிக்கு அர்ப்பணிப்பான சேவை செய்யும் தம்பியாக விளங்கினார்.2003ம் ஆண்டு 07ம் மாதம் 04ம் திகதி திரு.அ.செல்லத்துரை அவர்கள் இறைபதம் அடைந்துவிட அன்று தொட்டு இன்று வரை அறங்காவலர் சபைத்தலைவராக இருந்து தொண்டாற்றும் திரு.அம்பலவாணர் குமாரசாமி அவர்களின் பணி ஆலய வளர்ச்சியில் ஓர் மைக்கல் ஆகும்.இவரது முகாமைத்துவம், திட்டமிடல், வழிகாட்டல் என்பன இவ்வாலய வளர்ச்சியை பல படி நிலைகளில் தூக்கி நிறுத்தி உள்ளது என்பதில் சந்தேகமில்லை மேலும் பல வேலைப்பளுக்களுக்கு மத்தியில் கும்பாபிஷேக மலர் ஆக்கம் பெறுவதற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து மலர் மணம் வீசபங்களித்தமை என்றும் நினைவில் கொள்ளத்தக்கது. இவர் தமக்கு கிடைக்கும் ஓய்வு நேரத்தில் கூட தேவஸ்தான வளர்ச்சி பற்றியே சதாகாலமும் சிந்தித்துக் கொண்டிருப்பார் இவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்

மேலும் இத்திருப்பணி புனருத்தாரண வேலைகளில் இவரது மகன் பெறாமக்கள் மற்றும் மருமக்கள் உதவியுடன் ஆனி மாதம் (2013) பாலஸ்தாபனத்துடன் ஆரம்பிக்கப்பட்ட திருப்பணி வேலையானது ஐப்பசிமாதத்தில் (2013) கட்டுமானப் பணிகள் குறிப்பாக ஐந்து மாதத்திற்குள் பாரிய வேலைகள் நேர்த்தியாகவும் சிறப்பாகவும் அழகாகவும் நிறைவு பெறுவதற்கு இவர்களது திட்டமிடலும் நெறிப்படுத்தலுமே காரணமாகும் இவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இம்மலரின் இதழ்கள் வண்ணம்பெற வாழ்த்துரை வழங்கியோர், ஆசிகள் பகன்றோர், ஆக்கம் தந்தோர், செவ்வை செய்தோர் எனப் பலரது முயற்சிக்கும் அம்பிகையின் திருவருள் கடாட்சம் கிட்டுவதாக. மேலும் தேவைப்படும் பொழுதெல்லாம் வேண்டிய ஆலோசனைகளை மனம் கோணாது வழங்கிய மிருசுவிலைச் சேர்ந்த இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர் நல்லை ஆதீன ஆலோசகர் சின்னத்தம்பி கணேசன் அவர்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகள். அத்துடன் எதுவித பிரதியுபகாரமும் கருதாது கையெழுத்துப் பிரதியை கணனியில் வடிவமைத்துத் தந்த தொல்பொருள்திணைக்கள உத்தியோகத்தர் மிருசுவில் திரு.திருசுபாஸ்கரன் அவர்களுக்கும் அம்பிகை அருள் என்றென்றும் உண்டு. இவற்றுடன் இம்மலரினை அழகுறப் பதித்து தந்த கொடிகாமம் சிவகஜன் பதிப்பகத்தாருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

அம்பிகை அடியார்களே இம்மலரை இறைவியின் அனுக்கிரகப் பொருள்போல் பெற்று வாசித்து இன்புறுவதுடன் என்றும் உங்கள் அகங்களில் வைத்திருந்து பேணவேண்டும் என்பதே எமதுபிரார்த்தனை. நாம் சக்தி இயக்கும் கருவிகளேயன்றி நடந்த நடக்கின்ற, நடக்கும் எல்லாச் செயல்களும் அம்பிகை சித்தமே என்று கூறி "குறை களைந்து குணம் கொள்க" என்ற பணிவான வேண்டுகையுடன் "மலர் மொட்டவிழ்ந்தது"

*"அம்பிகையைத் தொழுவார்க்கு ஒரு தீங்குமில்லையே"*

**மிருசுவில்**
**இலங்கை**
**09.02.2014**

***க.கயிலைவாசன்***



பிரதம சிவாச்சாரியாரை யாகசாலைக்கு அழைத்து வருதல்



கும்பாபிஷேக கிரியைகளின் போது



கும்பாபிஷேக சிவாச்சாரியார்களும் உபயகாரர்களும்



கும்பாபிஷேக உபயகாரர்கள்



ஆலய அறங்காவலர்க்கு காப்பு கட்டுதல்



ஆலய பிரதான வாசலில்
நந்திக் கொடி ஏற்றல்



ஆலய அறங்காவலர் அவிப்பாகம்
சொரிதல்



நேயம், சமூக நிலையத்தினரின்
நடன நிகழ்ச்சி



நேயம், சமூக நிலைய மாணவிகளின்
நடன நிகழ்ச்சியுடன்
பூரண கும்ப வீதிவலம்



நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி உரையின் போது



பூரண கும்பங்கள் வீதிவலம் வரும் போது




கும்பாபிஷேக பிரதம சிவாச்சாரியாருக்கு பட்டம் வழங்கி கௌரவித்தல்



பிரதம அறங்காவலர்க்கு ஆதீனகுரு முதல்வர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்



மூலஸ்தான தூபி அபிஷேகத்தின் போது



மூலஸ்தான மகேஸ்வரி அம்மனுக்கு
அபிஷேகம்



கோ பூசை



எழுந்தருளி விக்கிரகங்கள் உட்பிரகாரத்தில் வலம் வருதல்



புதிதாக அமைக்கப்பெற்ற
கண்ணகை அம்மன்
உபயகாரர்களுடன்



திருத்தியமைக்கப்பட்ட
நாகதம்பிரான்


விநாயகருக்குரிய
ஆலயம்
புதிதாக அமைக்கப்பெற்ற
கண்ணகி அம்மன் கோவில்
வள்ளி தெய்வானை சமேத
முருகன் கோவில்



புதிதாக அமைக்கப்பெற்ற நவக்கிரக கோவில்



உள்மண்டபத் தோற்றம்

*அம்பிகை துணை*

## யாழ் மிருசுவில் (கொட்டிகை)கோயிற்குளம் அம்பாள் தேவஸ்தான ஆலய திருப்பணி மற்றும் வரலாற்றுச் சுருக்கம்

இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் சகல வளங்களும் நிறைந்தது மிருசுவில் கிராமம் இக்கிராமத்தில் ஒரேயொரு அம்பாள் ஆலயமாகவும் நான்கு நூற்றாண்டுகளிற்கு மேல் பழமை வாய்ந்த ஆலயமாகவும் இவ்வாலயம் விளங்குகின்றது. வட பகுதியில் கண்ணகை அம்மன் வழிபாடு தோன்றிய காலத்தில் கற்புக்கரசி கண்ணகி பெரும் புகழ் பெற்ற வற்றாப்பளைக்கு போகும் வழியில் பாரிய பாலை மர நிழலில் தங்கியிருந்து அருள்பாலித்த இடங்களில் ஒன்றாகவும் சிறப்பு பெற்றது.

இவ் ஆலயம் தொடர்பான கர்ண பரம்பரைக் கதைகள் இவ் ஊர் மக்களிடம் நிலவி வருகின்றது. அந்த வகையில் மந்தைகள் நிறைந்த இக் கிராமத்தில் தற்போது ஆலயம் இருக்கும் இடமருகே இடைச் சிறுவன் ஒருவன் மாடு மேய்த்து கொண்டிருக்கும் போது அருகே வந்த தலை நரைத்த மூதாட்டி ஒருவர் "தம்பி தாகமாக இருக்கிறது தண்ணீர் தருவாயா?" என வினாவியதாகவும் அதற்கு இடைச் சிறுவன் பாட்டி இங்கு கிணறு இல்லை அருகில் தோட்டம் இருக்கிறது அதில் வத்தகைப்பழம் உண்டு எடுத்து வந்து தருகின்றேன் அதை உண்டு உன் தாகத்தை தீர்த்துக்கொள் எனக் கூறிவிட்டு வத்தகைப்பழம் எடுத்து வந்து கொடுத்த போது "தம்பி தலையில் பேன் கடிக்கின்றது கொஞ்சம் பார்த்து விடு" எனக் கூறவே இடையனும் தலையை நோக்க தலையில் ஆயிரம் கண்கள் தென்பட்டதாகவும் பாட்டி என்ன இது? என்று வினாவ அவர் மறைந்து விட்டார். இச் சம்பவத்தை இடையன் ஊர்ப்பெரியவராக இருந்த கயிலாயர் என்பவரிடம் எடுத்து கூற அவர் இதை உணர்ந்து பாலையின் கீழ் கொட்டில் அமைத்து வழிபட்டதாக அறிய முடிகின்றது.

மேலும் இன்னொரு விதமாக அக்காலத்தில் கால்நடையாக செல்லும் வேறுசிலர் இக்குறிப்பிட்ட வீதியால் செல்லும்போது கைதட்டும் சத்தம் கேட்பதாகவும் இது இவ்வாறு பலமுறை நிகழ்ந்தமையினால் உண்மை அறியும்பொருட்டு தெய்வபக்தர் ஒருவர் ஓசைகேட்கும் திசை நோக்கிச் சென்றபோது பாரிய பாலைவிருட்சத்தின் கீழ் சிலம்பும் அம்மானையும் இருப்பதைக்கண்டதாகவும் கூறப்படுகின்றது அதை இன்றும் கயிலாயர் பரம்பரையில் வந்தவர்கள் பேணி வருகின்றனர் இதனால்தான் இவ்வூருக்கு கொட்டிகை எனும் பெயர் வந்ததாகவும் கூறப்படுகின்றது. அதாவது கைகொட்டி என்பது மருவி கொட்டிகை என்று அழைக்கப்படலாயிற்று எனவும் நம்பப்படுகின்றது.

எவ்வாறு எனினும் 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஊர்பெரியார் திரு.ஐயம்பிள்ளை கயிலாயர் அவர்களால் பாலை, மருது, கொன்றை மரங்கள் செறிந்த சோலைகள் சூழ்ந்த அந்த பாரிய பாலை விருட்சத்தின் கீழ் கண்ணகி தேவியை ஸ்தாபனம் செய்து ஒரு சிறுகோயிலையும் அமைத்து மக்கள் வழிபட வழிசெய்தார் அவர்காலத்தில் சாஸ்திர ரீதியாக கோபுரம் அமைக்கப்பட்டு மகாமண்டபமும் கட்டிமுடிக்கப்பட்டது. 1814ம் ஆண்டு இத்திருப்பணிகள் நடந்ததாக மகாமண்டப வாயிற்படிக்கல்லில் பொறிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணமுடிகின்றது.

பின்பு 1925ம் ஆண்டு திரு.கயிலாயரின் மகனும் (சின்னப்பு விதானையார்) என்று எல்லோராலும் போற்றி அழைக்கப்பட்டவரும் சைவப்பெரியார் திரு கயிலாயர் ஐயம்பிள்ளை அவர்களின் பரிபாலன காலத்தில் வெளிமண்டபம, வசந்த மண்டபம் முதலியனவும் 1939ம் ஆண்டு சுண்ணாம்பு கட்டடங்களாக இருந்த ஆலயம் இடிக்கப்பட்டு வைரக்கற்களால் கோபுரத்துடன் கூடிய மூலஸ்தானமும் வைரவ ஆலயமும் அமைக்கப்பட்டது. 30.08.1939 ல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

மேலும் இவர் காலத்தில் இவரின் மருமகன் அமரர்.திரு.அப்பாப்பிள்ளை பேரம்பலம் அவர்கள் ஊரில் சிறந்த புராணம் படிப்பவராகவும் பயன் சொல்பவராகவும் ***"என் பணி ஆலயப்பணி"*** என்ற நோக்குடன் மாமனாருடன் தோழோடு தோழாக நின்று ஆலயங்களில் நடைபெறும் விஷேடதினங்களிலும் உற்சவ காலங்களிலும் செயற்பட்ட ஓர் சைவ ஆசார சீலர். இவரினால் மணிக்கோபுரமும் வெளி மண்டபத்தில் இரு பக்கமும் இரு கொட்டகைகளும் தனது செலவில் அமைத்து கொடுத்த தியாக செம்மலை நாங்கள் என்றும் மறக்க முடியாது.

இவ்வாலயம் சின்னப்பு விதானையார் அவர்கள் 27-05-1950ம் ஆண்டு அமரத்துவம் அடைவதற்கு சில காலங்களுக்கு முன்பே ஆலயத்தை தனது பெருமகனாகிய அமரர்.திரு.ஞா.இளையதம்பியிடம் ஒப்படைத்துள்ளார்கள். திரு.ஞா.இளையதம்பி அவர்கள் பிரபல சைவசிவச்சாரியார்களினால் சிவதீட்சை (2ம் தீட்சை) வைக்கப்பட்டு ஆலய பரிபாலனத்துடன் ஆலய நித்திய பூசைகள் முதலியவற்றையும் அடியவர்களின் அன்பும் மதிப்பும் பெற்று செய்து வந்தவர். மேலும் ஆலயத்தின் மூல மூர்த்தியாக இருந்த கண்ணகியை பிரபல வேதாகம சிவாச்சாரியார் பிரம்ம ஸ்ரீ குமாரசாமிககுருக்கள் அவர்களின் ஆலோசனையின் பேரில் அவரின் ஆசியுடனும் மகேஸ்வரி அம்பாளை மூலமூர்த்தியாக பிரதிஸ்டை செய்வித்து நீண்டகாலமாக தடைப்பட்டு நடைபெறாமல் இருந்த அலங்கார உற்சவத்தை கொடி ஏற்றத்துடன் ஆனிமாத பூரணையை தீர்த்தமாகக் கொண்டு 10 நாட்கள் மகோற்சவத்தை ஆரம்பித்து வைத்தவர். அது இப்பொழுதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. பல முன்னேற்றங்களையும் அதாவது ஆலயத்திற்கு ஒரு சகடையும் செய்துகொடுத்துள்ளார். அனைவராலும் மதிக்கப்பட்டு ஆலயத்தின் முன்னேற்றத்திற்கு பல வழிகளிலும் சேவை செய்து வந்த இவர்கள் மறைந்த பின்பு இவரின் பெருமகனாகிய அமரர் திரு. தம்பு ஐயம்பிள்ளையின் கீழ் ஆலய பரிபாலனம் வந்தது. இக்காலப்பகுதியில் இவரின் மேற்ப்பார்வையின் கீழ் மிருசுவில் திரு. கந்தையா சுப்பிரமணியத்தினால் ஆலய நிர்வாகம் சிறப்பாக நடைபெற்று வந்தது மகா கும்பாபிேகமும் நடை பெற்றது.

1985ம் ஆண்டு மாசிமாதம் தொடக்கம் இவ்வாலய நிர்வாகம் மிருசுவில், கண்டாவளை ஆகிய பிரதேசங்களில் கிராமசேவகராக இருந்த சின்னப்பு விதானையாரின் பேரன் அமரர். அம்பலவாணர் செல்லத்துரை அவர்களின் கீழ் வந்தது. இவரின் காலத்தில் இவர் அடியார்களின் நன்மதிப்பையும் அன்பையும் ஆதரவையும் பெற்று சிறந்த முறையில் பரிபாலனம் செய்து வந்துள்ளமையினால் இவருடைய நிர்வாக காலம் கொட்டிகை அம்மன் வரலாற்றுக்காலத்தில் ஒரு *பொற்காலம்* என குறிப்பிடக் கூடியளவுக்கு அமைந்திருந்தது.

தனது குடும்ப அங்கத்தவர்களினதும் அம்பாள் அடியார்களதும் உதவியுடன் பல திருப்பணிகள் இவர் காலத்தில் நடைபெற்றன. அவற்றில் கீழ் குறிப்பிட்ட திருப்பணிகள் முக்கியம் பெறுகின்றன.

* செல்லத்துரை அவர்களின் இராண்டாவது மகள் விசாலாட்சி கணபதிப்பிள்ளை குடும்பம் கொடிமரத்திற்கு வெள்ளியினால் ஆகிய கவசங்களையும் உள்மண்டப நிலத்திற்கு சீமெந்து காறை போடப்பட்டது.

* மிருசுவில் (கொட்டிகை) திரு. செல்லையா வேலுப்பிள்ளை அவர்களின் குடும்பம் வெளிமண்டப நிலத்திற்கு சீமெந்து காறை போட்டார்கள்.

* திரு. அப்பாக்குட்டி பாலசுப்பிரமணியம் அவர்களால் 1987ம் ஆண்டு சுண்ணாம்புக்கற்களால் கட்டப்பட்டிருந்த வசந்த மண்டபம் இடித்து புதிதான அழகான வசந்த மண்டபம் கட்டப்பட்டது.

* திரு.அ.செல்லத்துரை அவர்களால் அம்பாள் வீதி உலா வருவதற்கு இவரின் சொந்தப்பணத்தில் ஓர் அழகிய சின்ன சிம்மாசனமும். 1847ம் ஆண்டு செய்யப்பட்ட தேருக்கு முன்பு இருந்த வடம் பழுதடைந்தமையால் பல ஆயிரம் ரூபா செலவில் ஓர் புது வடமும் வாங்கி கொடுத்துள்ளார்.

* மிருசுவில் வடக்கு சுப்பிரமணியம் பாஸ்கரன் ஒலிபெருக்கி வாங்கிக்கொடுத்துள்ளார்.

மேலும் பாவிக்க முடியாது இருந்த பழைய வாகனங்களை அகற்றி அம்பாள் அடியார்களின் உதவியுடன் புது வாகனங்கள் பல இலட்சம் ரூபா செலவில் செய்வித்தார். அதன் விபரங்கள் வருமாறு

- குமாரசாமி சூரியகுமார் (கனடா) குதிரை வாகனம்
- 5ம் திருவிழா உபயகாரர் அமரர். மெம்பர் வே. செல்லையா எருதுவாகனம்
- 8ம் திருவிழா சப்பற உபயகாரர் லண்டனில் வசிக்கும் திரு.திருமதி எஸ். சிவனருட் செல்வன் ராணி குடும்பம் காராம்பசு வாகனம்
- அம்பாள் உள்வீதி உலாவர தேர்வடிவில் ஒரு சிறிய சகடை லண்டனில் வசிக்கும் திரு. செல்வநாயகம் துஷ்யந்தன்
- எனது நிர்வாகத்தின் போது சிலகாலம் ஆலய பரிபாலனத்தை திறம்பட செய்து வந்த மிருசுவில் ச. யோகேஸ்வரநாதன் (இரத்தினம்) அவர்கள் கந்தருவிய வாகனம்

மேலும் அமரர் செல்லத்துரையின் பெருமுயற்சியால் களஞ்சியம் குருக்கள் அறை வாகனசாலை முதலியன கட்டப்பட்டுள்ளது.லண்டனில் இருக்கும் இவரின் பேரன் திரு.செல்வநாயகம் துஷ்யந்தன் அவர்களால் உள் வீதியில் விநாயகப் பெருமானுக்கு ஒரு தனி ஆலயம் கட்டப்பட்டு எங்கள் முன்னாள் மகோற்சவ குருவாகிய மட்டுவிலைச் சேர்ந்த கலா பூஷணம் பிரம்ம ஸ்ரீ ச. சோமஸ்கந்தா குருக்கள் அவர்களினால் 2000ம் ஆண்டு பிரதிஸ்டை செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடந்தேறியது.

இன்னும் கனடாவில் இருக்கும் எனது மகன் திரு.கு.சூரியகுமார் அவர்களால் உள்வீதியில் முருகனுக்கு ஓர் ஆலயம் கட்டப்பட்டு இதற்கு ஏற்ற வள்ளி, தெய்வானை சமேத முருகன் சிலைகள் இந்தியா அவினாசி லட்சுமி கலைக்கூடத்தில் இருந்து நேரடியாக தருவிக்கப்பட்டு 2003ம் ஆண்டு பண்டிதர், சித்தாந்த கலாநிதி, சிவஸ்ரீ. து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் அவர்களால் பிரதிஸ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது.

இவ்வாறு ஆலயத்திற்கு அடியார்களின் அன்புடனும் பெருமதிப்புடனும் பரிபாலனம் செய்த திரு.அ.செல்லத்துரை அவர்கள் 04-07-2003 ம் ஆண்டு இறைபதம் அடைந்து விட்டார். 2003ம் ஆண்டு மகோற்சவ தினத்தின் முதல்நாள் அவரின் மறைவின் பின் அம்பாள் அடியார்களின் அன்புடனும் ஆதரவுடனும் ஆலய நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றேன். அம்பாள் அடியார்களின் நன்மை கருதி அவர்களின் அன்பளிப்பு நிதியுடன் ஒரு மாதத்தில் ஓர் அழகான அன்னதான மண்டபம் கட்டுவித்து 08-06-2010ம் ஆண்டு அப்போதைய எங்கள் ஊர் கிராம சேவையாளர்(J/335) திரு.எஸ்.நாகதேவன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு தற்பொழுது பத்து திருவிழாக்களிலும் மற்றும் விசேட தினங்களிலும் சிறப்பாக அன்னதானம் நடைபெற்று வருகின்றது.

மேலும் மிகப் பழமை வாய்ந்து காணப்பட்ட அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்பன முழுமையாக இடிக்கப்பட்டு ஆகம விதிகளுக்கு அமைவாக புதுப் பொலிவுடன் ரமேஸ்குமார் ரகுவினால் அழகாகக் கட்டுவிக்கப்பட்டது. இதற்கான முழுச் செலவினையும் சின்னப்பு விதானையார் பரம்பரையில் வந்த அமரர். செல்லத்துரை விதானையார் குடும்பம், அ.குமாரசாமி குடும்பம், அ.நமசிவாயம் குடும்பம், அ.பாலசுப்பிரமணியம் குடும்பம் மற்றும் க.இராசரத்தினம் சரஸ்வதி குடும்பம் ஆகியோர் ஏற்றுக் கொண்டனர்.

பல சிவாச்சாரியார்களினதும் ஊர் அடியார்களினதும் நெடுநாள் வேண்டுகோளாகிய கண்ணகை அம்பாளுக்கு கிழக்கு வாசல் ஆலயம் ஒன்று அமைக்க வேண்டும் என்பதை அமரர் செல்லத்துரையின் மகள் விசாலாட்சி கணபதிப்பிள்ளை குடும்பம் பல இலட்சம் ரூபா

செலவில் உள் வீதியில் கண்ணகை அம்பாளுக்கு ஓர் ஆலயம் அமைத்து தந்துள்ளார்கள்.

தற்பொழுது பாவனையில் உள்ள செங்கற்களால் கட்டப்பட்ட யாகசாலையை இடித்து மிகவும் அழகாக பல இலட்சம் ரூபா செலவில் அமைத்து தந்துள்ளார்கள் லண்டனில் இருக்கும் அமரர்.செல்லத்துரையின் மூத்த மகளின் மகன் செ.துஷ்யந்தன் குடும்பம். அத்துடன் ஆலய உள் வீதி மதிலும் கட்டுவித்து இருக்கின்றார்கள்.

மிகவும் சிறிய ஆலயமாக வசதிகள் இல்லாது இருந்த நாகதம்பிரான் ஆலயத்தை முழுமையாக இடித்து விசாலமாக அழகாக பல இலட்சம் ரூபா செலவில் அமைத்துத் தந்துள்ளார் எனது மகள் திரு.திருமதி.பீ.சிவமோகன் சுமதி குடும்பம்.

மேலும் மிருசுவில் (கொட்டிகை) திரு. தம்பையா பாலேந்திரனின் பெருமுயற்சியால் யாகசாலைக்கு பின் பக்கமாக ஒரு பெரிய கிணறும் அதற்கு வசதியாக பெரிய தண்ணீர் தொட்டியும் அதற்கேற்ப குழாய் தண்ணீர் வசதிகளை மிருசுவில் எஸ்.கே.ரீ.முருகானந்தம் குடும்பமும் செய்து கொடுத்துள்ளார்கள்.

மேலும் 2011ம் ஆண்டு 8ம் திருவிழா (சப்பறம்) உபயகாரர்களாகிய லண்டன் திரு.திருமதி.எஸ்.சிவனருட் செல்வன் ராணி குடும்பமும் மிருசுவில் திரு.திருமதி.எஸ்.கே.ரீ.முருகானந்தம் சாந்தி குடும்பமும் சகடையில் பூட்டி வீதிவலம் வரக்கூடிய ஓர் அழகான சப்பறத்தை செய்வித்து தந்துள்ளார்கள். இச்சப்பறத்தை கொடிகாமம் ரதன் வெல்டிங் ஸ்தாபன உரிமையாளர் திரு க.பகீரதன் அவர்களால் செய்யப்பட்டது. மேலும் முருகானந்தன் சுதாகரன் (சுவிஸ்) என்பவர் மூலம் அவ்வூர் மக்களின் காதுகளில் மணியோசை சிறந்த முறையில் கேட்கும் வண்ணம் ஒரு புதிய காண்டா மணியும் இவரினால் வழங்கப்பட்டது.

இதுவரை காலமும் ஊர் மக்கள் நவக்கிரக ஆராதனைக்காக வெளி இடங்களிற்கு பல கஷ்டங்களிற்கு மத்தியில் சென்று வந்துள்ளார்கள். இவர்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு தற்பொழுது லண்டனில் வசிக்கும் திரு.திருமதி.எஸ்.சிவனருட் செல்வன் ராணி குடும்பம் ஒரு நவக்கிரக ஆலயத்தை பல லட்சம் ரூபா செலவில் கட்டி தந்துள்ளார்கள். இதற்கு ஏற்ற 14" உயரமான அந்தந்த வாகனங்களுடன் இந்தியா அவினாசி லட்சுமி கலைக்கூடத்தில் செதுக்கப்பட்டு நேரடியாக இங்கு தருவிக்கப்பட்டுள்ளது.

இவற்றை எனது உற்ற நண்பரும் இந்தியா பேரூர் ஆதீனத்தின் யாழ் கிளை பொறுப்பாளர் திரு.பாலசுப்பிரமணியம் ஜெயரட்ணம் அவர்கள் மூலம் தரப்பட்டுள்ளது.

மிகவும் பழமை வாய்ந்த பாவிப்பதற்கு கஷ்டமாக இருந்த மடப்பள்ளியை (ரூபா 407,000) நாலு இலட்சத்து ஏழாயிரம் ரூபா செலவில் தற்பொழுது கனடாவில் இருக்கும் திரு.திருமதி.கே.தட்சணாமூர்த்தி பூமகள் குடும்பம் ஓர் அழகிய விசாலமான சகல வசதிகளும் பொருந்திய புது மடப்பள்ளியை அமைத்து தந்துள்ளார்கள்.

2ம் திருவிழா உபயகாரர் மிருசுவில் (கொட்டிகை) அமரர் திரு.கந்தசாமியின் மனைவி பொன்னம்மா (மணி) தனது வெளி நாட்டில் இருக்கும் பிள்ளைகளின் உதவியுடன் கண்ணகை வாசலில் ஒரு மண்டபம் நிறுவியுள்ளார்கள்.

சண்டேஸ்வரற்கு ஒரு தனி ஆலயம் இல்லாது இருந்த குறையை 5ம் திருவிழா உபயகாரர் அமரர் திரு.வேலுப்பிள்ளை செல்லையா(மெம்பர்)இன் குடும்பத்தினரினால் பல இலட்சம் ரூபா செலவில் கட்டி தந்துள்ளார்கள்.

இவ்வாறு காலத்திற்கு காலம் தேவஸ்தானத்தில் பல்வேறு திருப்பணிகளை அம்பாள் அடியார்களும் தனவந்தர்களும் தாமாகவே முன்வந்து மனப்பூர்வமாக அருந்தொண்டுகள் ஆற்றியுள்ளார்கள். அம்பாள் அடியார்களிற்கு அம்பிகையின் அருட்கடாட்சம் கிட்டுவதாக.

- சுபம் -

**மிருசுவில்**
இலங்கை

**அ.குமாரசாமி** (J.P)
ஆலய பிரதம அறங்காவலர்/தலைவர்

## திருப்பொன்னூஞ்சல்

### விநாயகர் காப்பு

சீரோங்குமீழவள நாட்டின் மேலாம்
சிகரமாய் விளங்கி யாழ் தென்மராட்சி
பேரோங்கு வளமிகுந்த மிருசுவிலூர்
பென்னம் பெரும் கோயிற்குள கொட்டிகைசேர்
பாரோங்கு பராபரியாம் மகேஸ்வரிமேல்
பைந்தமிழால் யானினிய வூஞ்சல் பாட
காரோங்கும் ஆனைமுகக் கற்பகமாம்
கணபதியேஎன்றென்றும் காப்பதாமே

### நூல்

வேதங்கள் நான்கும் பவளக் காலாய் நாட்டி
விரிந்த உபநிடதமாம் விட்டம் பூட்டி
ஓதுமா கமங்கள் தாம்புக் கயிறாய் மாட்டி
உயர்ந்த திருமுறைகளாம் பலகை நீட்டி
ஆதி பிரணவ பீடத் தமர்ந்திருந்து
அரியதாம் மிருசுவிலூர் கோயிற்குளம்
சோதி கொட்டிகை யம்மே யாடீருஞ்சல்
சுபாஜினி மகேஸ்வரியே யாடீர் பொன்னூஞ்சல்

சங்கமொடு மங்கலங்கள் ஆர்ப்ப ஆர்ப்ப
சதுர்மறையந் தணர்பாடி ஆர்ப்ப ஆர்ப்ப
மங்குல் தவழ் மேகம் மின்னி ஆர்ப்ப ஆர்ப்ப
மண்ணவரும் விண்ணவரும் ஆர்ப்ப ஆர்ப்ப
தங்கமென மிருசுவிலூர் கோயிற்க் குளஞ்சேர்
தாயாரே கொட்டிகை சேர்தழைக்கும்
அங்கயற்கண் மகேஸ்வரியே யாடீர் பொன்னூஞ்சல்
அருஞ்சோலை நாயகியே யாடீர் பொன்னூஞ்சல்

தங்க முடி மணிகளசைந் தாட ஆட
தளிர் காதுக் குண்டலங்கள் ஆடஆட
பங்கெனவே கழுத்து மாலை ஆட ஆட
பலபதக்கம் மார்பினிலே ஆட ஆட
அங்கை வளை காற்சிலம்பு ஆட ஆட
அழகு மிளிர் மிருசுவிலூர் கோயிற்குளம்
எங்களை வளர்க்கு மன்னே ஆடீரூஞ்சல்
எழில் கொட்டிகை மகேஸ்வரியே ஆடீரூஞ்சல்

அலங்கார மண்டபமே ஒளிர்ந்து மின்ன
அழகுடை சூரியசந்திரர்க ளேந்த
இலங்குமலர்ப் பொற்தட்ட மிந்திரனே தாங்க
இனியதென்றல் சாமரை மேயிசைந் தசைக்க
துலங்கு பனி நீர் வருணன் எங்கும் சிந்த
சுருதி நாரதர் கிம் புருடர் பாட
கலந்து கோயிற்குளம் அம்மே யாடீரூஞ்சல்
கண்ணே கொட்டிகை மகேஸ்வரியே ஆடீரூஞ்சல்

உலகமெல்லா முணர்ந் தோதற் கரியதான
உத்தமியே பார்பதியே உமையம்மையே
குலவு மண்ட கோடியுயிர் அனைத்தும் நல்கி
கோதிலாதவை நடத்தெம் குலதெய்வமே
அலகிலா நாமமா யிரமும் உள்ளாய்
அரியநல் மிருசுவிலூர்க் கோயிற்குளம்
நிலவுகின்ற பொற்கொடியே யாடீரூஞ்சல்
நிமலி கொட்டிகை மகேஸ்வரியே யாடீரூஞ்சல்

செந்திருவும் கலைமகளும் வடந்தோட்டாட்ட
சேர் துர்க்கைமுதல் மாதர் வடந்தொட்டாட்ட
முந்திமுந்தி இந்திராணி வடந்தொட்டாட்ட
முன்போற்றிச் சப்தமாதர் வடந்தொட்டாட்ட
விந்தைசேர் குஞ்சரிவள்ளிவடந் தொட்டாட்ட
மேவியடி யாரெல்லாம் வடந்தொட்டாட்ட
நந்திக் கோயிற்குளத் தம்மே யாடீரூஞ்சல்
நாளும் கொட்டிகை மகேஸ்வரியே யாடீரூஞ்சல்

தனுகரண புவனபோகம் அருளியெம்மை
தகவுறவே பம்பரம்போ லெமையே யாட்டும்
நினைநாமும் பொன்னூஞ்சல் ஏற்றியன்பால்
நெஞ்சுருகி மிருசுவிலூர் எல்லாம் ஓங்க
அனைவருமே ஒன்றாக யுனை நா மேத்தி
அரியதாம் பொன்னூஞ்சல் பாட்டுப்பாடி
மனைமிக்க கோயிற் குளத்தாய் ஆடீரூஞ்சல்
மகிழ் கொட்டிகை மகேஸ்வரியே ஆடீரூஞ்சல்

மிருசுவிலூர் கோயிற்குளச் சோலையின் கண்
மிக்கவொரு கிழவியாய் வேடந்தாங்கி
ஒருபெரிய பாலைநிழல் அமர்ந்திருந்தே
ஓயாது கை கொட்டிகுரலெழுப்பி
அரிய இடைச் சிறுவனிடம் தலைக் கண்காட்டி
ஐயம்பிள்ளை கைலாயரின் பூசைஏற்றாய்
குலவுசிலம் பாலணைவாய் ஆடீரூஞ்சல்
கொட்டிகைசேர் மகேஸ்வரியே யாடீரூஞ்சல்




மூலமூர்த்தி




கண்ணகி




ஆலயப் படிக்கட்டில் தமிழ் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ள ஆண்டு



புதிதாக அமைக்கப்பட்ட சண்டேஸ்வரர் ஆலயம்



ஆலய கட்டிட ஆசாரி றமேஸ்குமார் ரகு அவர்களிற்குப் பட்டம் வழங்கி கௌரவித்தல்

செந்தமிழும் பிறமொழியும் படிக்க வைத்தே
சீராக எமையுலகில் வாழவைத்தாய்
அந்தரமொன்றில்லாகம புலங்கள் செழித்தே
அள்ளித்தரப் பூமியெமக் களந்தாய் தாயே
விந்தையுற அன்றுபோலின்று காணும்
மிருசுவிலூர் மேன்மையுற வைத்த அம்மே
வந்தித்தோம் வாழ்த்தினோம் ஆடீரூஞ்சல்
வாழும் கொட்டிகை மகேஸ்வரியே ஆடீரூஞ்சல்

ஓசையுடன் ஒளியானாய் ஆடீரூஞ்சல்
உலகமெலாம் நிறைந்தவளே யாடீரூஞ்சல்
பாசமெல்லாம் நீக்கியெமைப் பரிபாலித்தே
பாத்திரமாய் காப்பவளே ஆடீரூஞ்சல்
நேசமுற மிருசுவிலூர் கோயிற்குளம்
நிலைத்திருக்க வைப்பவளே ஆடீரூஞ்சல்
ஈசனிடம் அமர்பவளே ஆடீரூஞ்சல்
இனிதுகொட்டிகை மகேஸ்வரியே ஆடீரூஞ்சல்

அந்தணரும் அருமறையும் வாழிவாழி
அரசுசெங்கோல் ஆநிரைகள் வாழிவாழி
செந்தமிழும் திருநீறும் உருத்திராக்கம்
சிறந்ததாம் ஐந்தெழுத்துச் சைவம் வாழி
கந்தமலர்ச் சோலை மிருசுவிலூர் வாழிவாழி
காலமழை மகளிர் கற்பு வாழிவாழி
சந்ததமும் கோயிற்குள கொட்டிகைசேர்
தயாபரியே மகேஸ்வரியே வாழிவாழி

### *எச்சரிக்கை*

அகிலவுல கெலாம் நிறைந்த அம்மே எச்சரிக்கை
ஆதிபரஞ் சோதியிடம் அமர்ந்தாய் எச்சரிக்கை
முகில்போல் குழல் முகமே மதியுடையாளெச்சரிக்கை
முன்னோர் ஏத்தும் மிருசுவிலூர் முதல்வி எச்சரிக்கை

தலையைக் காட்டி கண்ணைக் காட்டும் தாயே எச்சரிக்கை
தளிர்த்த பாலை நிழலமர்ந்த தாயே எச்சரிக்கை
நிலைசேர் ஐயம் பிள்ளை கயிலாயர் கோயில் சேர்
மலையே கொட்டிகை மகேஸ்வரியே எச்சரிக்கை

### *பராக்கு*

ஆறு முகரைக் கந்தாவென அணைத்தாய் பராக்கு
அமாவாசையில் பூரணை காட்டிய அருட்சக்தி பராக்கு
முறுவலுடன் செந்துவர் வாய் வாணி முதல்வியான
முத்துநகை கோயிற்குள முதல்வி பராக்கு

சோமவாரம் ஆடிப்பூரம் பங்குனி உத்தரமும்
சுமங்கலிப் பூசை சக்கரப்பூசை சோதி பராக்கு
சேமமாக மிருசுவிலூர் கோயிற்குளக் கோயில்
தேவி பராசக்தி உமாமகேஸ்வரியே பராக்கு

### *லாலி*

கல்விச் செல்வம் காணி பூமிதந்தாய் லாலிலாலி
கனிந்தெம்மை உயரவைத்த கரும்பே லாலிலாலி
வல்லமகிடனைத் தடிந்தமாதே லாலிலாலி
வாழ எம்மை வைத்த தாயே மகேஸ்வரி லாலிலாலி

மரபுயரவாழ்வுதந்தமணியேலாலிலாலி
வருடமெல்லாம் அடியார் மகிழவைப்பாய் லாலிலாலி
தரமுயரமிருசுவிலூர் தழைக்கவைத்தாய் லாலிலாலி
தங்கக் கோயில் மகேஸ்வரியேலாலிலாலிலாலி

*மங்களம்*

மங்களமே மங்களமே நித்திய சுப
மங்களம் மங்களமே மங்களம்

ஆதி வரலாறு உடைய அரும்பெரும் மிருசுவிலூர்
சோதி சொரூபியான மகேஸ்வரிக்கு மங்களம்

நல்ல புதுமை காட்டிநாளும் அருள் பாலிக்கும்
எல்லையில் அருட்சக்தியாம் ஈஸ்வரிக்கு மங்களம்

அன்பர் ஐயம்பிள்ளை கைலாயர் பூசைசெய்ய
எந்தன் அடியாரென்ற மகேஸ்வரிக்கு மங்களம்

போற்றி விளக்கை ஏற்றும் பூசுரர் அடியாருக்கும்
ஆற்றிஅருளும் அன்னை மகேஸ்வரிக்கு மங்களம்

குடிசையான ஆலயத்தை குலாவவைத்தாய் மங்களம்
வடிவழகாம் கொட்டிகை மகேஸ்வரியே மங்களம்

மங்களம் ஜெயமங்களம் மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம் மங்களம் மங்களம் மங்களயுமே

ஆக்கம் - இணுவையாசிரியர், அளவைவாசர்
*முதுபெரும்புலவர், கலாபூசணம், புலவர்மணி*
ஆசிரியர் - **வை.க.சிற்றம்பலம்**

## மிருசுவிலூர் கோயிற்குளம் கொட்டிகை மகேஸ்வரியம்மை

### திருவிருத்தம்

ஆதி அந்தம் இல்லாத அரனார் பாகம்
அதிலிருந்து உலகனைத்தும் ஆளுமன்னே
சோதி சொருபனாய் நின்ற சிவனாருடனே
சேர்ந்திருக்கும் செம்பொருளே தவிநீயே
பேதியாது உலகுயிரைப் பெறாதுபெற்ற
பெருந்தேவி பலநாமம் பெற்றதாமே
நீதியுள்ள மிருசுவிலுஸர்க் கோயிற்குளம்
நிறைந்த கொட்டிகை மகேஸ்வரியே சரணம் நானே

அன்புடையீர் சின்னத்தம்பி கணேசனோடு
அரியசிறான் கயிலைவாசனும் வந்து
உன்புகழை ஒவ்வொன்றாய் விரிக்கக் கேட்ட
ஒப்பில்லா உவமையுடன் உயர்வும் பெற்றேன்
முன்புனையே சிவகாமியெனும் பெயராற் சொல்ல
முதலிலுனைக் கோயிலிலே வணங்கி வந்தேன்
இன்புடனே யுனையின்று பாடவைத்தாய்
என் அன்னே உன்னாடலிருந்தவாறே

ஒழுக்கமுடன் எங்கிருந்தும் உள்ளேவைகி
ஒயாதுவாக்குச் சொல்லால் உண்மையுள்ள
விருப்பமுடன் அந்தஅன்பர் சொல்லக் கேட்டு
விருப்புடனேநான் போற்ற எந்தனுள்ளே
பழுத்த கனிபோல் மகிழப்பாவையாகி
பச்சை உடையுடுத்தென் மன் நின்றாயம்மா
செழிப்புமனம் கண்ணார்க் கண்டுகழித்தேன்
தேவி மிருசுவிலூர் தெய்வத் தாயே

மிருசுவிலூர் கோயிற்குளம் வழி செல்வோர்கள்
விரும்பிடவே கைகொட்டி குரல்கொடுத்தாய்
ஒருமறையோ பலமுறையோ பன்னாளாக
இவ்வண்ணம் கைதட்ட அன்னை நீயே
மருவிய நன் னிழல் செய்யும் பாலையின் கீழ்
வந்த ஒரு மாடு மேய்க்குஞ் சிறுவனிடம்
திருமகனே வாவென்று கிழவியாக
செப்பியதை அச்சிறுவன் செவிற்கேட்டே

தலையைப் பார் பேனைப்பார் என்றே அன்னை
செப்பிடவே சிறுவன் அன்னை தலையைப் பார்த்தான்
பலவாகக் கண்ணன்றிப் பேனேயில்லை
பாட்டி யென்று சொல்லியதும் பாட்டி சொன்னாள்
உலையாமல் தண்ணீர் கொண்டா எனவே பையன்
ஊரெங்கும் காணானாய் வத்தகப் பழத்தை
அலையாமல் கொண்டுவந்தேன் உண்டால் தீரும்
அதைக் கண்ட கிழவியம்மா மறைந்தாளன்றே.

திரிபுரத்தை சிவனுடன் சேர்ந் தெரித்துவிட்டாய் உன்
சிறாருக்கும் பழம் காட்டி போட்டிவைத்தாய்
அரியயனும் தெரியாமல் சோதியாய் நின்றாய்
அறுசிறுவர் நீயணைக்க முகமானார்
செறிதில்லை நாதனுடன் நடனமாடி
செல்வம் செறி மிருசுவிலூர் கோயிற்குளம்
உறுகோயில் அமைந்திருந்த மகேஸ்வரியே
உன்பாதம் சரணடைந்தேன் உமையேதாயே

ஊரொன்றும் இல்லாமல் உலகம் வாழ்த்தும்
உயர்ந்ததாம் மிருசுவிலூர் இருக்கும் மாதர்
சீரொன்றாய் குடும்ப விளக்காகி அந்த
குலம் வளர உனதுகடைக் கண்ணால் பார்ப்பாய்
பேர்படைத்த சக்தி ஆலயங்கள் சூழ்ந்த
பேரூர் எல்லாம் பெண்கள் உனதுஅ ருளினால்
நேர் படைத்த மரபுய்ய மக்களை வளர்த்து
நிறை செய்யும் உனதருளை நினைந்தேனம்மே

ஆனி உத்தரம் ஆடிப் பூரம் அன்றி
அரும் பெரியபங்குனி உத்தரமும்
தேனினிய நவராத்திரி சிவராத்திரி
திங்களிலும் கேதார நோன்பினிலும்
தானினிதாம் பூரணை சக்கரபூசை
தக்க திருவெம்பாவை அருள் பாலிக்கும்
மானினியே மிருசுவிலூர் கொடடிகைசேர்
மகேஸ்வரியே உன் ஆடல் மகிமைஒன்றோ

திருநாளாம் அமாவாசை நாளில் மன்னன்
திதியின்றைக் கெது வென்ன பௌர்ணமி என்ற
ஒருபட்டர் இடம் இனிறதனைக் காட்டாய் என்ன
உருகியவர் அபிராமி உனையே பாட
அருவாக தன்காதில் தோட்டை வீச
அதுசென்று நிலவெறிக்க அரசனேத்தும்
திருவாடல் செய்த மகேஸ்வரியே உன்தன்
திருவிளையாடல மறவோம் தேடுகின்றோம்

பச்சைநிற உடையோடு என்முன் நின்ற
பார்வதியே மிருசுவிலூர் பதியே கொண்டாய்
இச்சையுடன் நேரமெல்லாம் உன்னைப் போற்றி
என்னுள்ளம் கண்டேத்தி வாழுகின்றேன்
அச்சமில்லை மிருசுவிலூர் கோயிற்குளம்
அம்மையே கொட்டிகை மகேஸ்வரியே
இச்சகத்தில் நான் செய் புண்ணியம்தான் என்னே
எம்பிராட்டி நின்னருளைப் பெற்றேன் யானே

*கொட்டிகை அன்னை மகேஸ்வரியே*
*வணக்கம் அம்மா*

புலவர்மணி - **வை. க. சிற்றம்பலம்**

சிவஸ்ரீ ச.மயூரவதனசர்மா B.B.A (Spl) Mgt,
அபிவிருத்திஉ த்தியோகத்தர்,

ஸ்ரீ சண்முகசோதிடஆராய்ச்சிநிலையம், கடற்கரைவீதி,
களுவாஞ்சிக்குடி.

தொ.பே.இல. 077-5384666

தலைவர்/செயலாளர், கொட்டிகையம்பாள் ஆலயம்,

கோயிற்குளம்,

மிருசுவில்.

ஐயா!

## கும்பாபிஷேக மலருக்குஆக்கம் அனுப்புதல்

மேற்படி விடயம் தொடர்பாக கும்பாபிஷேகத்தில் பங்குகொண்டு அம்பாளின் அருளைப் பெற்றேன். இதன் பயனாய் என்னால் எழுதப்பட்ட"நலன்தரும் நவக்கிரகங்கள்"என்றதலைப்பில் ஓர் ஆக்கத்தினை எழுதி அனுப்பி வைக்கின்றேன். இதனையும் தங்கள் மலரில் சேர்த்துக் கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

கும்பாபிஷேக நேரத்தில் தங்களால் எடுக்கப்பட்டVedio, Photo போன்றவற்றையும் கும்பாபிஷேக மலரையும் மேற்சொன்ன முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

*இங்ஙனம்,*

*சிவஸ்ரீ ச.மயூரவதனசர்மா*

# நலந்தரும் நவக்கிரக வழிபாடு

**தொகுப்பு: சிவஸ்ரீ ச.மயூரவதனசர்மா (BBA (spl) Mgt.**

அண்டவெளியில் அற்புதமாய் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்ற நவக்கிரகங்களை எமது மூதாதையர்கள், ரிஷிகள் கண்டுகொண்டு அவைகள் எங்களது வாழ்க்கைச் சக்கரத்தில் பல்வேறு மாற்றங்களைத் தந்தவண்ணம் இருப்பதாகக் கூறியுள்ளார்கள். மேலும் நவக்கிரகங்களின் தன்மைக்கேற்பவே நமது வாழ்வில் இன்பமோ அல்லது துன்பமோ நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

எங்களுக்குச் சுகமோ, துக்கமோ அல்லது நன்மையோ, தீமையோ எதுஏற்பட்டாலும் நவக்கிரகங்களை வணங்கியே தீரவேண்டும்.

நவக்கிரகங்களால் எமக்கு நன்மை வந்தால் அதற்காக நன்றி செலுத்துவதற்காக வணங்குகின்றோம்.

அதேபோல அசுபபலனால் தீமை விளைந்தால் அதனைக் குறைத்துக் கொள்வதற்காகவும் நவக்கிரகங்களைச் சாந்தப்படுத்துவதற்காக வணங்குகின்றோம். அப்படி வணங்குவதன் மூலம் பாவங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

நாம் ஒவ்வொருவரும் செய்து கொண்ட வினைப் பயனுக்கேற்பவே இப்பிறவியினை எடுத்துள்ளோம். எமக்குப் பிரம்மதேவரினால் பிறவி எடுக்கும் போது என்ன விதிக்கப்பட்டதோ அதனைஅ னுபவித்தே தீரவேண்டும்.

நவக்கிரகங்களின் அசுபபிடியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு அவைகளுக்குப் பிடித்த பொருட்களைக் கொடுத்து உரியவர் தோசபரிகார சாந்திகள். தேவாரங்களைப் பாடி மனமிரந்து நவக்கிரக சந்நிதியில் வணக்குவதனால் நற்பலன்களைப் பெற்றுக் கொள்ளலாம். அவற்றால் ஏற்படுகின்ற துன்பங்களைத் தாங்கிக் கொள்ளும் சக்தியையும், மனப் பக்குவத்தினையும் அவற்றிலிருந்து மீளக்கூடிய மனோதைரியத்தினையும் நமக்குத் தருவார்கள்.

நவக்கிரகங்களின் சஞ்சாரத்தினால் ஒவ்வொரு நாட்களும் நமக்கு மாற்றங்கள் வாழ்விலேயே ஏற்படும். இவற்றின் நன்மையினையும் பெற்றுக் கொள்வதற்கு வழிபாடே மிக முக்கியமாகும்.

நவக்கிரக ஆலயத்தினைச் சுற்றிவணங்கும் போது ஒன்பது முறை சுற்றி வணங்குதல் வேண்டும். இதில் முதல் 7 முறைவலமாகச் சுற்றவும், இறுதி இரண்டுசுற்றும் அப்பிரதஷணமாக (இடமாக) சுற்றுதல் வேண்டும். இதற்கான காரணம் ராகு, கேது போன்ற இரு கிரகங்களும் கிரகமண்டலத்தில் இடப்புறமாகச் சுற்றுவதனால் தான் அப்படிச் சுற்றி வணங்குதல் வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

நவக்கிரக வழிபாட்டில் மிகச் சிறந்த இடத்தினை வகிப்பது "நவக்கிரககேல" வழிபாடாகும். இந்த வழிபாட்டினைப் பெண்கள் செய்வது சிறப்பானதாகும்.

வீட்டுத் துப்பரவுள்ள பெண்கள் அறிகாலையிலே எழுந்து நீராடி கோலம் போடுகின்ற இடத்தினை (இது சுவாமி அறையாக இருந்தால் நல்லது) பசுஞ்சாணத்தினால் தெளித்துச் சுத்தப்படுத்திமெழுகிக் கோலமிட்டு குத்துவிளக்கேற்றி வழிபடுவதினால் குடும்பம் முழுவதற்கும் நற்பலன்கள் அதிகமாகக் கிடைக்கும்.

நவக்கிரக கோலங்களில் ஸ்ரீ ஆதிசங்கரரின் ஸ்ரீ சௌந்தர்யலஹரி ஸ்லோகங்களை அடிப்படையாகக் கொண்ட மந்திரங்கள் அதில் அடங்கியுள்ளது சிறப்புக்குரியதாகும்.

இந்தவகையான கோலங்களை அரிசிமாவைக் கொண்டு அந்தந்தக் கிழமையில் அந்தந்தக் கோலங்களைப் போட்டு அந்தந்த நவக்கிரங்களை நினைத்து வழிபாடு செய்வதனால் சகல சௌபாக்கியங்களும் நன்மைகளும் நம்மை வந்துசேரும்.

1. ஞாயிற்றுக்கிழமை

இது சூரியபகவானை வணங்கப் பொருத்தமான நாளாகும். சூரியனுக்கு விருப்பமானவைகள்

1. மலர்கள் - செந்தாமரை
2. தானியம் - கோதுமை
3. சமித்து - எருக்கு (வெள்ளை)
4. நிறம் - சிவப்புவர்ணம்
5. நவரத்தினம் - மாணிக்கம்
6. உலோகம் - தம்பாக்கு
7. வாகனம் - தேர் அல்லதுமயில்
8. நைவேத்தியம் - சர்க்கரைப் பொங்கல்
9. கோலம்




ஓம் சூரியாய நம
ஓம் சூரியனே போற்றி!

10. ஸ்துதி

காசினியிருளை நீக்கும் கதிரொளியாகியெங்கும்
பூசனையுலகோர் போற்றப் புசிப்பொடுசுகத்தை நல்கும்
வாசியேழுடைய தேர்மேல் மகாகிரி வலமாய் வந்த
தேசிகாவெனை ரட்சிப்பாய் செங்கதிரவனே போற்றி.

02. திங்கட்கிழமை

இதுசந்திரபகவானைவணங்கப் பொருத்தமானநாளாகும். சந்திரனுக்குவிருப்பமானவைகள்

1. மலர்கள் - வெவ்வலரி
2. தானியம் - பச்சரிசி
3. சமித்து - முருக்கு
4. நிறம் - வெள்ளைவர்ணம்
5. நவரத்தினம் - முத்து
6. உலோகம் - ஈயம்
7. வாகனம் - முத்துவிமானம்
8. நைவேத்தியம் - நெய்சாதம் /பாயாசன்னம்

9. கோலம்




ஓம் சந்திராய நம:
ஓம் திங்களே போற்றி!


10. ஸ்துதி

அலைகூட லதனின்று மன்று வந்துதித்த போது
கலைவளர் திங்களாகிக் கடவுளென் றெவருமேத்துஞ்
சிலைநுத லுமையாள் பங்கன் செஞ்சடைப் பிறையாய்மேரு
மலைவலமாக வந்த மதியமே போற்றி போற்றி.

03 செவ்வாய்க் கிழமை

இது செவ்வாய் பகவானை வணங்குவதற்குப் பொருத்தமான நாளாகும் செவ்வாய்க்கு விருப்பமானவைகள்.

1. மலர்கள் - சண்பகம்
2. தானியம் - துவரை
3. சமித்து - கருங்காலி
4. நிறம் - சிவப்பு
5. நவரெத்தினம் - பவளம்
6. உலோகம் - செம்பு
7. வாகனம் - அன்னப்பட்சி
8. நைவேத்தியம் - சம்பாசாதம்
9. கோலம் -




ஓம் அங்காரகாய நம :

ஓம் செவ்வாயே போற்றி!


10. ஸ்துதி

வசனைநற் றைரியத்தோடு மன்னவர் சபையில் வார்த்தை
புசபல பராக்கிரமங்கள் போர்தனில் வெற்றியாண்மை
நிசமுட வைரவர்க்கு நீணிலந் தனிவளிக்குங்
குசனில மகனாஞ் செவ்வாய் குறைகழல் போற்றி போற்றி!

04 புதன் கிழமை

இது புதபகவானை வணங்குவதற்குப் பொருத்தமான நாளாகும். புதனுக்கு விருப்பமானவைகள்.

1. மலர்கள் - வெண்காந்தன்
2. தானியம் - பச்சைப் பயறு
3. சமித்து-நாயுறுவி
4. நிறம் - பச்சைவர்ணம்
5. நவரெத்தினம் - மரகதப் பச்சை
6. உலோகம் - பித்தளை
7. வாகனம் - குதிரை
8. நைவேத்தியம் - பால் சாதம்
9. கோலம் -




ஓம் புதாய நம:
ஓம் புதபகவானே போற்றி!

10. ஸ்துதி

மதனநூல் முதலா நான்கு மறைபுகழ் கல்விஞானம்
விதமுட வைரவர்க்குவிஞ்ஞைகளருள் வோன்திங்கள்
அதன் பலசு பாசுபங்கள் சுகம்பல கொடுக்கவல்லன்
புதன் கவிப்புலவன் சீர்மால் பொன்னடிபோற்றிபோற்றி!

## 05 வியாழக் கிழமை

இது குரு பகவானை வணங்குவதற்குப் பொருத்தமான நாளாகும். குருவுக்கு விருப்பமானவைகள்.

1. மலர்கள் - முல்லை
2. தானியம் - கடலை
3. சமித்து-அரசு
4. நிறம் - மஞ்சள் வர்ணம்
5. நவரெத்தினம் - புஸ்பராகம்
6. உலோகம் - பொன்
7. வாகனம் - யானை
8. நைவேத்தியம் - தயிர் சாதம்
9. கோலம்




ஓம் குருவே நம:
ஓம் வியாழபகவானே போற்றி!

10. ஸ்துதி

மறைமிகு கலைநூல்வல்லோன் வானவர்க் கரசன் மந்திரி
நரைசொரி கற்பகப் பொன் னாட்டினுக்கதி பனாகி
நிறைதனஞ் சிவிகைமண்ணினீடுபோகத்தை நல்கும்
இறைவன் குரு வியாழ மிருமலர்ப் பாதம் போற்றி!

## 06 வெள்ளிக் கிழமை

இது அக்கிர பகவானை வணங்குவதற்குப் பொருத்தமான நாளாகும். சுக்கிரமனுக்கு விருப்பமானவைகள்.

1. மலர்கள் - வெண்தாமரை
2. தானியம் - மொச்சை
3. சமித்து – அத்தி
4. நிறம் - வெள்ளைவர்ணம்
5. நவரெத்தினம் - வைரம்
6. உலோகம் - வெள்ளி
7. வாகனம் - கருடன்
8. நைவேத்தியம் - வெல்லம்
9. கோலம் -




ஓம் சுக்கிராய நம:
ஓம் வெள்ளிபகவானே போற்றி!

10. ஸ்துதி


மூக்கவான் சூரன்வாணன் முதலினோர் குருவாய்வையங்
கார்க்கவான் மழைபெய்விங் கவிமகன் கனகமீவோன்
தீர்க்கவானவர்கள் போற்றச் செத்தவர் தமையெழுப்பும்
யார்க்கவான் சுக்ராசாரி பாதபங்கயமே போற்றி

07 சனிக்கிழமை

இது சனிபகவானை வணங்குவதற்குப் பொருத்தமான நாளாகும். சனிக்கு விருப்பமானவைகள்.

1. மலர்கள் - கருங்குவளை
2. தானியம் - கறுப்புஎள்ளு
3. சமித்து–வன்னி
4. நிறம் - கறுப்புவர்ணம்
5. நவரெத்தினம் - நீலம்
6. உலோகம் - இரும்பு
7. வாகனம் - காகம்

8. நைவேத்தியம் - எள் சாதம்
9. கோலம் -




ஓம் சனைச்சராய நம :
ஓம் சனிபகவானே போற்றி!

10 ஸ்துதி

முனிவர்கள் தேவரேழு மூர்த்திகண் முதலினோர்கள்
மனிதர்கள் சகலவாழ்வுன் மகிமையல்லாதுண்டோ
கனிவுளதெய்வம் நீயேகதிர்சேயே காகமேறுஞ்
சனியனேயுனைத் துதிப்பேன் தமினேற்கருள் செய்வாயே.

08 இராகுபகவான்

இராகு பகவானை செவ்வாய்க் கிழமையில் வணங்குவதற்குப் பொருத்தமான நாளாகும். இராகுக்கு விருப்பமானவைகள்.

1. மலர்கள் - மந்தாரை
2. தானியம் - உழுந்து
3. சமித்து - அறுகு
4. நிறம் - நீலவர்ணம்
5. நவரெத்தினம் - கோமேதகம்
6. உலோகம் - கருங்கல்
7. வாகனம் - ஆடு
8. நைவேத்தியம் - சித்ரான்னம்
9. கோலம் -




ஓம் ராகுவே நம :
ஓம் ராகுபகவானே போற்றி!

10 ஸ்துதி

வாகுசேர் நெடுமான் முன்னம் வானவர்க் கமுதம்யப்
போகுமக்காலையுன்றன் புணர்ப்பினாற் சிரமேயற்றுப்
பாகுசேர் மொழியாள்பங்கன் பரன்கையில் மீண்டும் பெற்ற
ராகுவேயுனை துதிப்பேன் ரட்சிப்பாய் ரட்சிப்பாய்

09. கேதுபகவான்

கேது பகவானை சனிக்கிழமையில் வணங்குவதற்குப் பொருத்தமான நாளாகும். கேதுவுக்கு விருப்பமானவைகள்.

1. மலர்கள் - செவ்வளரி/செவ்வள்ளி
2. தானியம் - கொள்ளு
3. சமித்து – தர்ப்பை
4. நிறம் - சிவப்புவர்ணம்
5. நவரெத்தினம் - வைடூரியம்
6. உலோகம் - துருக்கல்
7. வாகனம் - சிங்கம்
8. நைவேத்தியம் - சித்ரான்னம்
9. கோலம் -




ஓம் கேதுவே நம :

ஓம் கேதுபகவானே போற்றி!

10 ஸ்துதி

மாதுசேர் நெடுமால் முன்னால் மகாகிரிவலமேபோந்து
நீதிநெறிநடுவகுத்துநிறைதனந்தந்தையம் தீர்க்கும்
மாதுசேய் கதிர்விழுங்கும் சிவன்கையில் சிரமேபெற்ற
கேதுவேயுனை துதிப்பேன் கீர்த்தியாய் ரட்சிப்பாயே

*தொகுப்பு "தேவிசாதகப்பிரியன்"*

*சிவஸ்ரீ ச.மயூரவதன சர்மா **BBA (SPI) mgt,***

*அபிவிருத்தி உத்தியோகத்தர்*

*ஸ்ரீ சண்முகசோதிட ஆராய்ச்சி நிலையம்*

*கடற்கரை வீதி, களுவாஞ்சிகுடி.*

# ஆலயங்களில் தெய்வீகத்தை வளர்ப்போம்



வரணியூர் சைவப்புலவர் **சி.கா.கமலநாதன்**
B.A (Hons) History, M.A (Jaffna)
சைவப்பிரச்சார அமைச்சர்,
சைவபரிபாலனசபை.
*ஆசிரியர் யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி மட்டுவில்.*

ஆலயம் என்பது ஆன்மா லயப்படும் இடமாகும். பரந்துபட்ட பல சிந்தனைகளைக் கொண்டிருப்பவர்கள் அவற்றை எல்லாம் தெய்வீக நிலையில் ஒரு நிலைப்படுத்தி உயர்ந்த பரம்பொருளை அடைவதற்கு ஆலயங்கள் உதவுகின்றன. எம்மையெல்லாம் செயற்படுத்துகின்ற உயர்ந்த இறைவன் பூமியிலே பேருளுடன் விசேடமாக உறைந்திருக்கின்ற இடம் கோயில் ஆகின்றது. துன்பப்பட்டு மன உளைச்சலுக்கு உள்ளாகி வேதனைப்படுகின்ற மக்களுக்கு மனச்சாந்தியைக் கொடுத்து ஆறுதல் அளிக்கின்ற இடம் ஆலயமாகின்றது. இவற்றை எல்லாம் கருத்திற் கொண்டு தான் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றார்கள் முன்னோர். மனச் சாட்சியைக் கட்டியெழுப்பி மக்களை ஒழுக்க நெறிக்குட்படுத்தி கர்மத்தின்படி அவர்களை வாழவைப்பதில் ஆலயங்களுக்கு முக்கிய பங்குண்டு. ஒருவனிடம் மாதா, பிதா என்பவர்களிடம் ஏற்படும் பக்தி குரு பக்தியாக தெய்வீக பக்தியாக தொடர்ந்து வளர்ச்சியடைந்து அந்த பக்தியின் உயர்ச்சியால் இறைவனை ஞானக்கண்ணால் பார்த்து எல்லா நன்மைகளையும் கிடைக்கச் செய்பவை ஆலயங்களாகும்.

இவ்வாறு பலவகையிலும் முக்கியத்துவம் பெறும் இந்து ஆலயங்களின் இன்றைய நிலைப்பாடு என்ன என்பதை நாம் எல்லோரும் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய நிலையில் உள்ளோம். முன்னைய காலங்களிலே கோயில்களில் பல அற்புதங்கள் நிகழ்ந்ததை கர்ண பரம்பரைக் கதைகள் ஊடாகவும் வரலாறுகள் மூலமும் அறிகின்றோம். ஆனாலும் இன்றைய இந்து ஆலயங்களில் நிலமை மற்றும் பல பிரச்சினைக்குரிய அம்சங்களும் ஆலயங்களில் இடம் பெறுகின்றன. சிலர் இதை கலியுக காலத்தின் நிலை இதுவென்று ஒரே சொல்லாகக் கூறிவிடுகின்றனர். இது பொருத்தமானதா என்று சற்றுச் சிந்திக்க வேண்டும்.

நாங்கள் விடுகின்ற தவறுகளை காலத்தின் பெயரில் சாட்டி விடுவது பொருத்தமானதா என யோசிக்க வேண்டும்

எமது ஆலய நிலைகளின் அடிப்படையிலே பல தவறுகள் இருப்பதை ஒவ்வொருவரும் நன்கு உணர வேண்டும். அதனால் தான் ஆலயங்களில் தெய்வீகத் தன்மை அகன்று அற்புதங்கள் நிகழ முடியாத இடமாக அவை மாறுகின்றன. முதல் நிலையிலே ஆலயத்தை அமைக்கின்ற போது சரியாக சிந்தித்து நாம் செயற்பட வேண்டும். நாம் நினைத்தபடி ஆலயங்களை அமைக்க முடியாது. இறைவனும் இறைவனுடன் நேரடித் தொடர்பு கொண்ட முனிவர்களும் சித்தர்களும் வேதாகமங்களையும், சிற்ப சாஸ்திர நூல்களையும் படைத்துள்ளார்கள். அவை கூறுகின்ற அளவுப் பிரமாணங்களுக்கு ஏற்ப மயிரழவுகூட வித்தியாசப்படாத அளவில் கோவிலை அமைக்க வேண்டும். அப்போது தான் அங்கே தெய்வீகம் இருக்கும். ஆகம முறைப்படாத நிலையில் ஆலயங்கள் அமைந்தாலும் அதற்கு பிரமாணங்கள் உள்ளன. அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். இன்று எல்லாமே வியாபாரமாக வந்துவிட்டதால் ஒவ்வொருவரும் தமது இஷ்டப்படி எதையும் செய்து விடலாம் என நினைக்கிறார்கள். அது மாபெரும் தவறாகும். சூரிய, சந்திரன் இருக்கும் வரை நிலைத்திருந்து எல்லா உலகத்திற்கும் அருள்பாலிக்கப் போகும் ஆலயத்தை நாம் நினைத்தபடி அமைக்க முடியாது. திருவருளின் நோக்கறிந்து அமைப்பது முக்கியமானதாகும். முதல் அடித்தளம் போடும் போது சரியாக ஆராய்ந்து அந்தந்த தெய்வீகத்துக்கு பொருத்தமான நாளிலே அதைச் செய்ய வேண்டும். அளவுப் பிரமானங்கள் நன்றாகத் தெரிந்தவரைக் கொண்டு ஆலயத்தை அமைக்க வேண்டும். அத்துடன் ஆலயத்தை அமைக்கின்ற நிர்வாகத்தினரும் அளவுப் பிரமானங்கள் பற்றிய பூரண அறிவைப் பெற்றிருக்க வேண்டும். அவர்கள் எப்போதும் நின்று கண்காணித்து வரவேண்டும். ஏனென்றால் அடித்தளத்திலோ அல்லது கட்டுமானங்களிலோ பிழைகள் ஏற்பட்டால் அவற்றை எப்போதும் பின்பு திருத்த முடியாது பிழையாக அமையும் அளவுப் பிரமாணக் கோயிலில் இறைவன் பிரதிஸ்டை செய்யப்படுவானால் அது முழு உலகத்திற்குமே தீங்காக அமையும். தெய்வீகக் கலை முழுமையாகப் பேசாது அதே நேரம் எஜமானர்கள், ஊர்மக்கள், பூசாரிகள் எல்லோருக்கும் பல ஆபத்துக்கள் நேரிடும்.

ஓர் ஆலயத்தைப் புனர்நிர்மாணம் செய்வதற்காக மூலாயத்தில் இருக்கின்ற சுவாமியை உரிய முறைப்படி வெளியிலே எடுத்து பாலஸ்தாபனம் செய்கின்றோம். இந்த வேளையிலும் நாம் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். பாலாலய மண்டபத்தை சரியான இடத்தில் வகுத்துக் கொள்ள வேண்டும். மேலும் பாலஸ்தாபனம் செய்வதற்குரிய நாள் எடுக்கும் போது மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும். கும்பாபிஷேக நாள் மற்றும் ஸ்திரராசியில் எடுக்கக் கூடாது. அசையும் தன்மையுடைய ஸர ராசியில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் செய்ய வேண்டும. இந்த விடயங்களிலும் தவறு விடப்பட்டால் ஆலயத் திருப்பணிகள் நிறைவு பெறாது. நீண்டகாலம் இழுபடும். நிர்வாகத்தினருக்கும், குருமாருக்கும், பூசாரிகளுக்கும், ஊர் மக்களுக்கும் இடையூறு ஏற்படும். நீண்ட காலம் கும்பாபிஷேகம் செய்யப்படாது விட்டால் தெய்வீகம் சிறிது காலம் தல விருட்சத்திலே உறைந்து இருக்கும். அந்த வேளையிலும் கவனிக்கப்படாது விடும் போது சூரியனில் கலந்து அங்கிருந்து தனது தேவலோகத்துக்கு சென்றுவிடும். இவ்வாறு நடப்பதால் அந்தக் காலத்தில் ஊரில் செய்யப்படும் நன்மைக்காரியங்கள் சித்திக்காது போகின்றது. தீமைகள் அதிகரித்துக் கொண்டு செல்லும். தெய்வீகம் குன்றிக் கொண்டு போவதால் பாவ காரியங்கள் அதிகரிக்கும்.

ஆலயங்களினுடைய மூலஸ்தானத்திலே சுவாமியை நிலைநிறுத்துகின்ற போது நாம் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். ஆசனக் கல்லானது எந்தத் தெய்வத்துக்குரியதோ அதற்குரிய சரியான பதத்தில் வைக்க வேண்டும். நிர்வாகத்தினர் இதனைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். ஏனெனில் இந்தப் பதப்பிரிப்பு பிழைத்தால் அந்த மூர்த்தியினுடைய அருள் குறைந்து விடும். மயிரழவு கூட பிசகாத அளவு சரியான பதத்தில் சுவாமியை வைக்க வேண்டும். சில ஆலயங்களில் சரியான பதத்திலே சுவாமியை வைக்காததால் பல தீங்குகள் நடந்திருப்பதை அறிந்துள்ளோம். இதே போல ஆசனக் கல்லின் உயரம் சுவாமியின் உயரம் என்பவையும் சுவாமியின் திருப்பம் ஆகியவற்றையும் நன்கு கவனிக்க வேண்டும். முதலில் ஆலயத்தை அமைக்கின்ற போது கூட திசை நன்கு நோக்கப்பட வேண்டும். தெற்குப் பக்கம் கோயில் திருப்பம் அல்லது விக்கிரத்தினுடைய திருப்பம் இருக்குமாயின் மிகவும் மோசமான பாதிப்புக்கள் காலம் காலமாக ஏற்படும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதே போல கருவறையின் வாசல் அளவை எடுத்து மூன்றாகப் பிரித்து ஒரு பங்கில் ஆசனக்

கல்லும் இரண்டாம் பங்கில் விக்கிரகமும் இருக்க வேண்டும். மாறாக மூன்றாவது பாகத்தில் விக்கிரகத்தின் உயரம் இருக்குமாயின் அந்த ஆலயத்திலும் ஊரிலும் பல குழப்பங்களும் தீமைகளும் நடைபெறும். எனவே இவற்றை எல்லாம் நாம் நன்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆலயத்திலே நடைபெறும் கும்பாபிஷேகம் தெய்வீகத்தின் அருள் கூடுவதற்கு மிக அவசியமாகும். கும்பாபிஷேக நாள் எடுக்கின்ற போது மிகவும் அவதானமாக எடுக்க வேண்டும். குருமாரின் வசதிக்கேற்பவோ அல்லது நிர்வாகத்தினரின் வசதிக்கேற்பவோ நாள் எடுக்கக் கூடாது. திருவருளின் உத்தரவுப்படி காலம் காலமாக அருள் சுரக்கக் கூடிய நாளாக எந்தக் குற்றமும் அற்ற நாளாக எடுக்க வேண்டும். இல்லையேல் இதில் தெய்வீக குறையும் அதிகரிக்கும்.

கும்பாபிஷேகத்தின் போது இன்னொரு விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டும். அது விக்கிரகத்துக்கு உயிரோட்டத்தை கொடுக்கும் யந்திரத்தில் ஆகும். யந்திரபிரதிஷ்டைக்கு முன்பு ஒரு மண்டலம் (48 நாட்கள்) யந்திர பூசையானது உரிய முறைப்படி செய்யப்படும். இதன் போது யந்திரத்தில் கொடுக்கப்படும் உரு ஏற்றம் மிகவும் முக்கியமானது. யந்திர பூசையினுடைய நாட்களின் அளவு குறையுமானால் அந்த ஆலயத்தில் தெய்வீகமும் குறையும். எனவே யந்திர பூசைக்கு மிகவும் முக்கியத்துவம் நாம் கொடுக்க வேண்டும்.

மேலும் கோயிலில் இறைவன் என்றும் நிறைவான கலைகளுடன் எப்பொழுதும் அகலாது இருந்து அருள்புரிவதற்கு பல விடயங்களில் அவதானமாக இருக்க வேண்டும். கும்பாபிஷேகத்தின் போது தெய்வீக கரு கருவறையில் எழுந்தருளச் செய்யப்படுகின்றது. அதனை முறையாக வளர்த்தெடுப்பது 48 நாட்கள் செய்யப்படும் மண்டலாபிஷேகத்திலாகும். பல இடங்களில் இதனை முறையாகச் செய்வதில்லை. வசதிகருதி சுருக்கிக் கொள்வர். விக்கிரகத்தினை சிற்பி செய்ததோஷம், சுவாமியில் மருந்துசாற்றிய தோஷம் போன்றவையெல்லாம் மண்டலாபிஷேகத்தின் போது அகலுகிறது. மேலும் அஷ்டபந்தனம் இறுகி யந்திரத்தின் தெய்வீக அலை விக்கிரகம் முழுவதும் செறிந்து அருள் சுரப்பதற்கு வழிவகுக்கின்றது. எனவே மண்டலாபிஷேகத்தில் குறைவிடுகின்ற போது அக்கோயிலில் தெய்வீகம் குறைவதுடன் அக்கோயிலால் ஊருக்கு நன்மையும் குறைந்து விடும். எப்படியெனில்

ஒரு குழந்தையைப் பிறந்த பின்பு 48 நாட்கள் வளர்ப்பிலே தான் அப் பிள்ளையின் எதிர்காலம் தங்கி இருப்பது போலவாகும்.

அடுத்த நிலையிலே நித்திய பூசையிலும் கவனித்துக் கொள்ள வேண்டிய விடயங்கள் பல உண்டு. தூய்மை பேணுவது மிக மிக முக்கியமானதாகும். ஏனெனில் தேவலோகத்திலே நாம் கற்பனை பண்ண முடியாத அளவிற்கு தூய்மையான இடத்திலிருக்கும் இறைவன் எமது பக்திக்கு இரங்கி பூமிக்கு வருகின்றார். கோயிலிலே குடிகொள்கின்றார். எனவே கும்பாபிஷேகத்தின் போது இருக்கும் தூய்மை எப்பொழுதும் நிலவ வேண்டும் அப்போதே அங்கே தெய்வீகம் நிலைக்கும். சாதாரண மனிதர்களாகிய நாமே தூய்மையான இடத்தையும் தூய்மையான மனிதரையுமே விரும்புகின்றோம். அழுக்கான துர்நாற்றமுள்ள இடத்திலும் கெட்ட எண்ணமுடைய மனிதருடனும் ஒரு நிமிடம் கூட இருக்க விரும்புவதில்லை. எனவே இறைவன் கோயிலில் என்றும் இருக்கக் கூடிய தூய்மை நிலையை நாம் பேண வேண்டும். கருவறையுள் செல்கின்ற குருமார் அல்லது பூசாரிகள் நீராடி தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து மனத்தூய்மையுடன் மிகப் பெரிய பரம் பொருளுக்கு கிட்டே செல்கின்றேன். என்ற உணர்வுடன் செல்ல வேண்டும். இறைவன் பாதத்தை வணங்கி அவருக்குரிய கிரியைகளைச் செய்ய வேண்டும். அப்போதே தெய்வீகம் அங்கே குடிகொள்ளும். மேலும் சுவாமியின் திருவுருவத்தை தினமும் முறையாக சுத்தி செய்வதும் கருவறையைச் சுத்தமாக வைத்திருப்பதும் மிகவும் அவசியமாகும் சில கோயில்களில் கருவறையையும் விக்கிரகங்களையும் பார்க்கும் போது மிக மனவேதனையாக இருக்கின்றது. அங்கே கடவுள் எப்படி இருப்பார் என்ற கேள்வி எழுகின்றது. அழுக்காக இருக்கும் இடங்களில் தெய்வீகம் அகன்றுவிடுகிறது. வெறும் கல்லிற்கே நாம் பூசை வழிபாடுகளைச் செய்து கொண்டிருக்கின்றோம்.

அபிடேகத்திரவியங்கள் தூய்மையானவையா தரமானவையா என்பதில் மிக அவதானமாக இருக்க வேண்டும். ஏனெனில் அவை இறைவனுடைய திருமேனிக்கு பயன்படுத்தப்படுபவையாகும். அவற்றிலே குற்றங்கள் இருப்பின் தெய்வீகம் அகன்றுவிடும். உதாரணமாக மஞ்சள் மாவை சில வேளைகளில் பார்த்தால் எமது கண்ணே எரியும் ஏனெனில் மிளகாய்த்தூள் அரைக்கும் இடத்தில் அரைத்ததோ என்னவோ தெரியாது. அவ்வாறானதை இறைவனுக்கு அபிடேகம் செய்யலாமா என்று சிந்திக்க வேண்டும். இன்று இறைவனுக்குப் பயன்படுத்தும் விபூதி, சந்தனம்,

குங்குமம், பன்னீர் ஏனைய திரவியங்களில் போலிகள் அதிகரித்து விட்டதால் அவை கோயிலில் தெய்வீகத்தை வளர்க்காமல் மாறாக அகற்றுபவையாகவே உள்ளன. எனவே அபிடேக திரவியங்கள் தரமானவையா எனப் பரிசோதிப்பது இந்துக்கள் ஒவ்வொருவருடைய முக்கிய கடமையாகும். அதே போல் இறைவனின் திருமேனியில் சாற்றுகின்ற பட்டுவஸ்திரத்திலும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். நிலத்தில் விழுந்ததோ அல்லது நீண்ட நாட்கள் பாவித்து அழுக்கேறியதையோ பொதுவாக தூய்மையற்றதை சாற்றக் கூடாது. பல இடங்களில் இந்த விடயத்திலும் கவனம் எடுப்பதாகத் தெரியவில்லை. இதில் கவனம் எடுக்காது விட்டாலும் தெய்வீகம் குறையவே வாய்ப்புண்டு. மேலும் ஒவ்வொரு நாளும் பூசை செய்பவர் சுவாமியின் திருவுருவத்திற்கு உருக்கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். திரிகரணசுத்தியுடன் மந்திர ஜெபத்தாலே அதைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்து வரும் போது அக்கோயிலில் தெய்வீகம் குறையாது இருக்கும். இறைவனுக்கு நைவேத்தியம் வைக்கும் போது தூய்மை பேணுவது அவசியம். பாத்திரமாக இருத்தலும் இலைபோட்டு படையல் செய்ய வேண்டும். நைவேத்தியத்திலிருந்து ஆவி மேலெழும் நிலையில் சமர்ப்பிக்க வேண்டும். சில இடங்களில் நைவேத்தியத்தினை மூடுகின்ற பட்டுவஸ்திரத்தின் தூய்மை பேணப்படுவதில்லை. அது நல்லதல்ல. மேலும் இன்று விளக்கேற்றும் போதும் தவறுகளை விடுகின்றோம். கடலை எண்ணெய் விளக்கேற்றுவதற்கு தகாது என்றும் தீமையளிக்கும் என்றும் கூறியிருக்கின்றனர். ஆனால் நாம் இன்று எமது வசதிகருதி பல இடங்களில் இதனைப் பயன்படுத்துகின்றோம். மேலும் கருவறையில் மின்விளக்குகளை அதிகரிக்கச் செய்துள்ளோம். இவைகளும் கருவறையின் தெய்வீகத்தன்மையைக் குறைப்பதாகவே உள்ளன.

ஆலய சூழலில் பக்தி அலை என்றும் வீசக்கூடிய இடமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் பக்தி என்ற ஒன்று தான் தொடர்ந்து இறைவனை தேவலோகம் செல்ல விடாது பூமியில் தடுத்து வைக்கக் கூடிய சாதனமாகும். இதனையே மாணிக்கவாச சுவாமிகள் "பக்தி வலையில் படுவோன் காண்க" என்று குறிப்பிட்டார். எனவே கோயிலில் மங்கள இசைகளும் தெய்வீக இசைக்கருவிகளும் இசைக்க வேண்டும் . முக்கியமாக ஓம் என்ற பிரணவ ஓசையை தருகின்ற சங்குநாதம் எழ வேண்டும் . அது தீமையை அகற்றும். மேலும் புராணங்கள், திருமுறைகள், மந்திரங்கள், அரகரோகரா என்ற பக்தி ஓசைகள் தொடர்ந்து

முழங்க வேண்டும். அவையே கோயிலின் கட்டடங்கள், தூண்கள், மரங்கள், கோபுரங்கள், தூபி வாகனங்கள், மங்களப்பொருட்கள், எல்லாவற்றிலும் தெய்வீகம் உறைந்து சுவாமியில் அது பன்மடங்காக பெருகி ஆன்மலயத்தை உண்டுபண்ணும் அவ்வாறான கோயிலை விட்டு இறைவன் அகலமாட்டான் . பக்தர்களுடைய மனநிலையும் தூய்மையடையும் . ஆனால் இன்று மாறாக கோயிலில் சினிமாப் பாடல்கள், வியாபாரக்கடைகள் , கேளிக்கைக் கூத்துக்கள் , வாலிபர்களின் அடாவடித்தன்மைகள், எல்லாம் அதிகரித்து விட்டன. எப்படி தெய்வீகம் குடி கொள்ளமுடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் ஒவ்வொருவரும் நினைத்தால் இவற்றைக் கட்டுப்படுத்தலாம். உதாரணமாக எனது குரு அருட்கவி சீ. விநாசிதம்பிப் புலவரது அளவெட்டி நாகவரத நாராயணர் கோயிலில் நாதஸ்வரக் கலைகளில் எவரும் சினிமாப்பாடல்கள் இசைப்பதில்லை. என்பதை இன்றும் காணலாம், எனவே பக்தி எனும் காந்த அலை வீசும் இடமாக கோயிலை மாற்றினோமானால் அங்கே தெய்வீகம் கோடி சூரிய பிரகாசத்துடன் இருக்கும் அற்புதங்கள் தினமும் நடக்கும்.

கோயில் கருவறை சுவாமி, ஏனைய விக்கிரகங்களை புகைப்படங்கள் வீடியோ எடுத்தல் போன்றவற்றை நிறுத்த வேண்டும் . இது நான் கூறவில்லை. எனது குருநாதர் சுவாமி தண்டனை தந்து கூறிய அருள் வாக்காகும். ஏனெனில் அவை ஒளிப் படங்கள் அதாவது ஒளிபட்டு தெறித்து வரும் பிரதி விம்பங்கள் அவற்றை நாம் கொண்டு சென்று அசௌசமான வேளைகளிலும் தூய்மையற்ற இடங்களிலும், பெண்கள் தீட்டாக இருக்கும் வேளைகளிலும், இன்னும் பொருத்தமற்ற இடங்களிலும் வைப்பதால் பெரும்தோசம் ஏற்படுகின்றது. அக்கோயிலின் தெய்வீகத்தைக் குறைக்கின்றது. தெரிந்து செய்கின்ற தோசத்திற்கு பரிகாரம் இல்லை என்பார்கள் தண்டனை அனுபவித்தே ஆக வேண்டும். எனவே ஆலய நிர்வாகத்தினர் குருமார் இதில் கூடிய அக்கறை கொள்ள வேண்டும். எமது படங்களை யாராவது காலால் மிதித்தால் தாங்க முடியவில்லை கோபம் வருகின்றது. ஆனால் இறைவனுடைய படத்தை எடுத்து அச்சடித்து கால்களில் மிதிபடவும் அசிங்கமான இடங்களிலும் போடலாமா என்பதை ஒவ்வொருவரும் ஆழமாக சிந்திக்கவேண்டும்.

மேலும் யாகம் செய்கின்ற போதும் நாம் மிக அவதானமாக இருக்க வேண்டும். அதாவது சுத்தமான பசு நெய் பயன்படுத்துவது

பிரதானமானது அத்துடன் சமித்து வகைகளை நாமே கைப்பட சேகரிக்க வேண்டும் - ஏனெனில் கடைகளில் சமித்துக்கட்டுகளில் வெள்ளெருக்குக்குப் பதிலாக காட்டெருக்கலையை வைப்பதும் அதே போல ஏனைய வாழ்வை மாற்றியமைப்பதும் நாம் கண்டுள்ளோம். இவ்வாறு யாகத் திரவியங்களில் தவறு ஏற்படும்போது கும்பத்திலே தெய்வம் ஆவாகனமாகாது – தரமற்ற நெய்யும் சேருமானால் தீய விளைவுகள் சூழும் மழை பொய்க்கும் வளம் குன்றும், உணவுப்பஞ்சம் ஏற்படும். தெய்வீகம் குறைவதால் இவை ஏற்படுகின்றன. எனவே யாகத்திரவியங்கள் சேகரிக்கும் போது மிகவும் அவதானத்துடன் ஆலய நிர்வாகத்தினர், உபயகாரர்கள், இருக்க வேண்டும் .

எனவே சைவப் பெருமக்கள் எல்லோரும் கூறப்பட்ட ஒவ்வொரு விடையங்களையும் ஆழமாக சிந்திக்க வேண்டும். இயன்றவரை சிவாச்சாரியார்கள், பூசகர்கள், ஆலய நிர்வாகத்தினர், அடியவர்கள் எல்லோரும் ஆலயத்தில் செய்யத்தகாத குற்றங்களை கழைய வேண்டும். எம்மையெல்லாம் ஆளுகின்ற பெரிய பரம்பொருள் இருக்கும் இடம் கோயில் என்பதை எப்பொழுதும் மனதில் கொள்ளவேண்டும். அப்போதுதான் கோயிலில் களவு நடக்காது. அற்புதங்கள் நடக்கும். தீராத நோய் தீரும். மங்களம் பொங்கும், மனநிம்மதியும் மகிழ்ச்சியும் நிறைவுறும் எல்லோரும் இன்புற்று வாழ்வர். இந்தவேளையில் இதுவரை காலமும் விட்ட தவறுகளுக்கும் என்ன பிராயச்சித்தம் என்று நீங்கள் கேட்கலாம். அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. சிவனுக்கும் அம்பாளிற்கும் கும்பம் வைத்து திருத்தொண்டர் புராணமான பெரியபுராணத்தை ஓதி முழுமையாக பூர்த்தி செய்து சர்வ லிங்கத்தலங்களையும் மனதில் நினைத்து சிவபூசை செய்து 63 தனியடியார்களையும் 9 தொகையடியார்களையும் மாணிக்ககவாசக சுவாமிகள், சேக்கிழார்சுவாமிகள், ஆகியோரையும் வழிபாடு செய்து பாவங்களையும் தோசங்களையும் நீக்க வேண்டும். என்று பிராத்தனை செய்ய வேண்டும். திருவைந்தெழுத்தை மனதில் வைத்து அடியார்களிற்கு அன்னதானம் செய்ய வேண்டும். இதனைச் செய்து வரும்போது அனுபவத்தால் உண்மைகளை உணர்வீர்கள். ஆகவேதான் அன்பர்களே தெய்வீகத்தை வளர்ப்போம். எமது ஆலயங்களை வளர்ப்போம்

- சுபம் -

**27.01.2014** **சி.கா. கமலநாதன்**

## கண்ணகி வழிபாட்டின் தோற்றமும், இன்றைய நிலையும்



*கலாநிதி*
**து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்** (J.P)
(இந்து சமய பிரதம குரு)

தாய்மை பல்வேறு அம்சங்களின் உறைவிடமாகும். இதில் தெய்வீகத்தைக் கண்ட முன்னோர் தமது அறிவு வளர்ச்சிக்கேற்ப இவ்வம்சங்களை உருவகப்படுத்தினர். இம்மகா சக்தியை இலட்சுமியாகவும், துர்க்கையாகவும், சரஸ்வதியாகவும் அவள் அள்ளிச் சொரியும் கருணைக்கேற்ப உருவம் கொடுத்து வழிபட்டனர். இவ்வகையில் திராவிட மக்களிடையே தாய்த் தெய்வங்களும் அவற்றின் வழிபாட்டு முறைகளும் மிகக் கூடுதலான இடத்தினை அம்மக்களிடையே பெற்றுக் கொண்டுள்ளன. மரபு வழியாகவே பெண்ணைத் தெய்வமாகவும் தெய்வத்தைப் பெண்ணாகவும் கொண்டு வணங்கும் முறை திராவிடரிடையே வேருன்றிப் பரவுவதற்கும் தாய்த் தெய்வ வழிபாட்டு முறையே காரணமாய் இருத்திருக்க வேண்டும்.

திராவிடப் பண்பாடும் ஆரியப் பண்பாடும் கலந்து உருவான இந்து சமயத்திலே தாய்த் தெய்வ வழிபாடு அல்லது சக்தி வழிபாடு சிறப்பிடம் பெறுகின்றது. சக்தியின் அம்சமாகவே ஏனைய பெண் தெய்வங்கள் யாவும் தோற்றம் பெறுகின்றன. கொற்றவை, மாரி, ஐயை போன்ற பெண் தெய்வங்கள் யாவும் சக்தியின் அவதாரமாகவே கற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. இந்நிலையிலே தான் கற்புக்கடம் பொற்புடைத் தெய்வமாம் கண்ணகிக்கும் வழிபாடு தோன்றியிருக்க வேண்டும்.

கண்ணகி வழிபாட்டின் தோற்றத்தினை நாம் அறிந்து கொள்ள மிக முக்கியானதும், மிகப் பழமை பொருந்தியதுமான ஆதார நூல் சிலப்பதிகாரமே. இளங்கோவடிகள் கண்ணகி வரலாற்றுக்காவிய வடிவம் கொடுப்பதற்கு முன்பே பண்டைக் காலம் மக்களிடையே இக் கண்ணகி வழிபாட்டு மரபுகள் வழங்கி வந்துள்ளன என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

இதனை அறிந்து கொள்வதற்கு நற்றிணைப் பாடல் என்னும் புறநானூற்றுப் பாடல்கள் சிலவும் துணை செய்கின்றன. நற்றிணைப் பாடல் கணவனாற் கைவிடப்பட்ட பெண்ணொருத்தி தமியளாய் வேங்கை மரம் ஒன்றின் கீழே ஒரு முலையிழந்த நிலையில் நின்ற செய்தியைப் பெற முடிகின்றது. புறநானூற்றுப் பாடல்கள் மூலம் கண்ணகி என்னும்

பெயருடைய பெண்ணொருத்தியை அவள் கணவன் பேகன் என்னும் வள்ளல் பிரிந்திருந்தாராகவும் அவர்களை கபிலர், பரணர், பெருங்குன்றனூர்க்கிழார், அரசிற்கிழார் முதலியோர் கூட்டி வைத்ததாகவும் அறிய முடிகின்றது. இவ்வாறு மரபு வழியாக இருந்து வந்த கண்ணகி பற்றிய கதைகளே சிலப்பதிகாரத்தைக் காவிய வடிவமாக எழுதி முடிப்பதற்கு இளங்கோவடிகளுக்கு உதவியிருக்க வேண்டும். எனவே இச் செய்திகளை கோவலன் கண்ணகியைப் பிரிந்திருந்த நிகழ்ச்சிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது அவற்றிடையே தொடர்பு இருக்கலாம் என எண்ண முடிகின்றது.

வழிபாட்டு நெறியில் ஆகம நெறிமுறை சாராத வழிபாடு முதன்மை பெற்று விளங்குகின்றது. தமிழகத்தில் சிலப்பதிகார காலத்தில் இருந்து கொற்றவை கண்ணகியாக வணங்கப்பட்டிருக்க வேண்டும். சிலப்பதிகாரத்தின் வழக்குரை காதையிலே கொற்றவை, காளி என்னும் தெய்வங்களோடு கண்ணகியின் தோற்றம் ஒப்பீடு செய்யப்பட்டிருப்பது இதற்குச் சான்றாக அமைகின்றது. எனவே ஈழத்தில் கிராமிய வழிபாட்டுத் தெய்வங்களுள் (நாட்டார் வழிபாட்டுத் தெய்வங்களுள்) ஒன்றாக கண்ணகி அம்மன் போற்றி வழிபடப்படுகிறாள். அதாவது இத்தெய்வம் வைதீக நெறி சாராத தெய்வமாகப் போற்றி வழிபடப்படுகின்றாள்.

இந்தியாவிலே தோன்றி வளர்ச்சி பெற்ற கண்ணகி அம்மன் வழிபாட்டு மரபானது ஈழத்து இந்து மக்களிடையே பரவி வளர்ச்சி பெற்றமை பற்றிய பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. மதுரையை எரித்த கண்ணகி ஐந்து தலைநாகமாக மாறித் தெற்கு நகர்ந்து முதலில் நயினாதீவிலே தங்கிப் பின்னர் வட்டுக்கோட்டைப் பாகங்களில் உள்ள கரடிப் பனை வழியாக சீரணி, அங்கணாமைக் கடவை, அளவெட்டி சுருவில் முதலிய இடங்களில் தங்கினாள் என்பது ஐதீகம். சேரன் செங்குட்டுவன் சேர நாட்டிற் கண்ணகிக்கு விழா எடுத்த போது கடல் சூழ் இலங்கைக்கு கஜவாகு வேந்தனும் சென்று சிறப்பித்தான் என சிலப்பதிகார உரையறு கட்டுரையும், வரந்தரு காதையும் கூறியுள்ளன. இது போலவே பாண்டியன் வெற்றி வேற்செழியனும் சோழன் பெருங்கிள்ளியும் கொக்குளங்கோசரும் மாளவகேந்தரும் கண்ணகி விழாவில் பங்குகொண்டு தத்தம் நாடுகளுக்கு கண்ணகியை எழுந்தருளுமாறு வேண்டி நின்றனர்.

இவ்வாறு தத்தம் நாடுகளுக்கு எழுந்தருளுமாறு வேண்டிய அரசர்களில் ஒருவனாகிய கஜவாகு வேந்தனே இவ்வழிபாடு ஈழத்திற் பரவி வேரூன்றக் காரணமாக இருந்தான். இவ்வழிபாட்டு மரபானது

வடபகுதியினூடாகவே வடகிழக்கு மாகாணங்களுக்குப் பரவியதாகக் கொள்ளப்படுகின்றது.

கண்ணகி வழிபாடானது ஈழத்தில் பெற்றிருந்த செல்வாக்கினை நோக்குவதும் இன்றியமையாதது. அந்தவகையிலே சேரன் செங்குட்டுவன் சேர நாட்டில் விழா எடுத்தபோது கடல் சூழ் இலங்கை கஜபாகு வேந்தனும் சென்று சிறப்பித்தான் என சிலப்பதிகாரத்தின் உரைபெறு காதையிலும் வரந்தரு காதையிலும் எடுத்துக் கூறப்படுகின்றது. தத்தம் நாடுகளுக்கு எழுந்தருளுமாறு வேண்டிய அரசர்களில் ஒருவனான கஜபாகு வேந்தனே ஈழத்தில் கண்ணகி வழிபாடு வேரூன்றக் காரணமாக விளங்கினான். கண்ணகி வழிபாடு ஈழத்திற்குக் கொண்டுவரப்பட்டதும் அது சிங்கள தமிழ் மக்களிடையே செழித்து வரத்தொடங்கியது. மேலும் தமிழ் மக்களிடையே கண்ணகி வழிபாடு எனவும் கண்ணகி அம்மன் வழிபாடு எனவும் வளர்ச்சி பெற்றுக் காணப்பட்டது. கண்ணகி வழிபாடானது சிங்கள மக்களிடையே பத்தினித் தெய்வ வழிபாடாக வளர்ச்சி பெற்றது. இதனாலேயே தமிழில் உள்ள கண்ணகியைத் தலைவியாகக் கொண்ட இலக்கியங்களைப் போல சிங்களத்திலும் பல பத்தினிக் காவியங்கள் தோற்றம் பெற்றன.

கஜவாகு வேந்தன் ஈழத்திற்குத் திரும்பிய போது சம்புத்துறை வழியாக வந்திருக்க வேண்டும். சம்புத்துறை வழியாக வந்த கஜவாகு வேந்தன் முதன்முதலாகக் கந்தரோடையிலுள்ள அங்கணாமைக் கடவையில் பத்தினிக் கோயில் அமைத்துத் தனது உருவச் சிலையும் கோயில் முன்றலில் நிறுவியிருக்கலாம் என்று முதலியார் சி.இராசநாயகம் குறிப்பிட்டுள்ளார். கந்தரோடைப் பாங்கரில் அமைந்துள்ள இக்கோயில்களைப் போலவே முல்லைத்தீவில் உள்ள வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயிலும் சிறப்பு வாய்ந்தது.

கஜவாகு மன்னன் நாடெங்கும் கண்ணகிக்குக் கோயில் அமைத்து வழிபாடு செய்ய வேண்டும் எனக் கட்டளைகளை இட்டதைத் தொடர்ந்து விரோதையன் சிங்கையாரியன் காலத்தில் யாழ்ப்பாணப் பகுதிகளிற் கண்ணகிக்கு ஆலயங்கள் தோன்றின என்று சி.கணேசையரும் வேலம்பிராயில் உள்ள கண்ணகி கோயில் அக்காலத்தில் முதலில் அமைக்கப்பட்டதென்றும், அதன் பின்பு கட்டப்பட்டவையே களையோட, அங்கணான் கடவை முதலிய இடங்களில் உள்ளவை என்று ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையும் கூறியுள்ளார்.

ஈழத்தின் வடக்கிலே யாழ்ப்பாணப் பகுதியிற் போல திருகோணமலை, வவுனியா முதலான பிராந்தியங்களிலும் கண்ணகிக்கு ஏராளமான கோயில்கள் அமைந்திருக்கின்றன. ஈழத்தின் ஏனைய பாகங்களை விட இன்று மட்டக்களப்புப் பகுதியிலே கண்ணகி அம்மனுக்கு கோயில்களும் வழிபாடுகளும் பெருவழக்காகவும் உன்னத நிலையிலும் உள்ளன.

ஈழத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பெற்ற கண்ணகியம்மன் கோயில்களாக புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோயில், மிருசுவிற் கோயிற்குளம் - கண்ணகை அம்மன் கோயில், எழுதுமட்டுவாள் விழுபளை கண்ணகை அம்மன் கோயில், கோப்பாய் வடக்குப் பாலனை கண்ணகை அம்மன் கோயில், துன்னாலை மிந்திரன் கண்ணகை அம்மன் கோயில், இமையானன் - துவாளி கண்ணகை அம்மன் கோயில், மட்டக்களப்பு காரைதீவு கண்ணகை அம்மன் கோயில், மயிலிட்டி வீரமாண்கன் தேவத்துறை கண்ணகை அம்மன் கோயில், பளை இரட்டைக்கேணி கண்ணகை அம்மன் கோயில், அச்செழு கண்ணகை அம்மன் கோயில், மண்டைதீவு சாம்பலோடை கண்ணகை அம்மன் கோயில், பளை முள்ளியான் முன்வற்றுக் கண்ணகை அம்மன் கோயில், புலோலி கிழக்கு மந்திகை கண்ணகை அம்மன் கோயில், கொடிகாமம் போக்கட்டி கண்ணகை அம்மன் கோயில், பூநகரி பொன்னாவெளி கண்ணகை அம்மன் கோயில், ஊரெழு மேற்கு அந்திரானை கண்ணகை அம்மன் கோயில், பளை வேம்பொடுகேணி நவனிவெளி கண்ணகை அம்மன் கோயில், சாவகச்சேரி மண்டுவில் கண்ணகை அம்மன் கோயில், ஊரெழு கண்ணகை அம்மன் கோயில், காரைநகர் களபூமி கண்ணகை அம்மன் கோயில், இடைக்காடு புவனேஸ்வரி கோயிற் கண்ணகை அம்மன் கோயில், நாகர் கோயில் கண்ணகை அம்மன் கோயில், கரைச்சி கல்வெட்டுத்திடல் ஆதி கண்ணகை அம்மன் கோயில், வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயில், மாதனை கண்ணகை அம்மன் கோயில், கச்சாய்க் கண்ணகை அம்மன் கோயில், தம்பிலுவில் கண்ணகை அம்மன் கோயில், சாவகச்சேரி நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் கோயில், வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்மன் கோயில் ஆகியன விளங்குகின்றன.

மேலும் ஈழத்திலே வந்தாறுமூலை கண்ணகை அம்மன் கோயில், ஈச்சந்தீவு கண்ணகை அம்மன் கோயில், கண்ணன்குடா கண்ணகை அம்மன் கோயில், எழுநகர் கண்ணகை அம்மன் கோயில், செட்டிப்பாளையம் கண்ணகை அம்மன் கோயில், கல்முனை கடற்கரைக் கண்ணகை அம்மன் கோயில், கோயிற் போறதீவு கண்ணகை அம்மன் கோயில், ஆரையம்பதி கண்ணகை அம்மன் கோயில், புதுக்குடியிருப்பு கண்ணகை அம்மன் கோயில், கோட்டைக் கல்லாறு கண்ணகை அம்மன்

கோயில், அமிர்தகழி கண்ணகை அம்மன் கோயில், மகிழடித்தீவு முதலைக்குடா முனைக்காடு கண்ணகை அம்மன் கோயில், சத்ருதுக் கொண்டான் கண்ணகை அம்மன் கோயில், கொக்கட்டிச் சோலை தாழக்குடா கண்ணகை அம்மன் கோயில், களுவன்கேணி அரசடி கண்ணகை அம்மன் கோயில், கற்குடா கண்ணகை அம்மன் கோயில், இலிங்கை – முகத்துவாரம் கண்ணகை அம்மன் கோயில், வீரமுனை கண்ணகை அம்மன் கோயில், தம்பன் கடனறு கண்ணகை அம்மன் கோயில், வாளைச்சேனை பேத்தாளை போகாவெளி கண்ணகை அம்மன் கோயில், அக்கரைப்பற்று பட்டிநகர் கண்ணகை அம்மன் கோயில், பளை முகமாலை அம்பளவளை கண்ணகை அம்மன் கோயில், வீமன்காமம் உடுமாவத்தை கண்ணகை அம்மன் கோயில், உவர்மலைக் கண்ணகை அம்மன் கோயில், சிலப்பதிகார காலத்திலிருந்து கொற்றவை, காளி போன்ற தெய்வங்களின் அம்சங்கள் கண்ணகியோடு சேர்க்கப்பட்டு கண்ணகி வழிபாடு தோன்றியிருக்கலாம்.

சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் எழுதப்பட்டதிலிருந்து கண்ணகி வழிபாடு தமிழகமெங்கும் புதிய விழாவாகக் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. மலையாள நாட்டில் உள்ள சிங்கலூர் அல்லது கொடுங்கலூர் என்னும் இடத்திலுள்ள பகவதி கோவிலே சேரன் செங்குட்டுவன் கட்டிய கண்ணகி கோவில் என்று கருதுவாரும் உளர். சேரர் தலைப் பட்டினமாகக் கருதப்படும் கொங்குநாட்டுக் கருவூரில் அமைந்திருக்கும் வஞ்சியம்மன் கோயில் வழிபாடும் வரலாறும் கண்ணகி வழிபாட்டினையே நினைவு கூருகின்றது. கோளத்தைச் சேர்ந்த கோமக் கோட்டிற்கு அருகிலுள்ள அங்காடிபுரம் தாடியம்மன் சிலையும் கண்ணகியம்மன் சின்னமாகவே விளங்குகின்றது. நாகபட்டினத்திற்குப் புறம்பே உள்ள ஒரு மரத்தின் அடியிலே பத்தினித் தேவிக்குப் புரியும் வணக்கம் பெரிதாக உள்ளமையும் சேர நாட்டு எல்லையாகிய நீலகிரியிலுள்ள தொழுவருள் கண்ணகி வழிபாடு உள்ளமையும் குறிப்பிடத்தக்கன. பாண்டி நாட்டரசன் கோட்டைக் கண்ணாத்தாள் கேரளத்துத் திருச் செங்குன்னூர்ப் பகவதி கோமுட்டிகள் வணங்கும் கன்னிகா பரமேஸ்வரி போன்ற தெய்வங்களைக் கண்ணகியாகக் கருதுவாரும் உளர்.

இந்தியாவில் சோழ நாட்டில் பிறந்த கண்ணகி பாண்டி நாட்டில் வாழ்ந்து, சேர நாட்டில் தெய்வமாகி ஏனைய நாடுகளில் தெய்வமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டு வணங்கப்படுகின்றாள். கண்ணகி ஓர் ஒழுக்கநெறித் தெய்வமாகக் கருதப்பட்டமையாலேயே பல மக்கள் மத்தியிலும் தேசிய முக்கியத்துவம் பெற முடிந்தது. இந்துக்கள் பெருமளவிற்கு கண்ணகியை சக்தி வழிபாட்டுடன் தொடர்புபடுத்தி வணங்கி வருகின்றனர்.

ஈழத்தில் கண்ணகி ஆலயங்கள் வடக்கிலிருந்து தெற்கு வரை பெருமளவிற்கு கரையோரங்களில் அமைந்துள்ளன. வடக்குக் கிழக்குப் பாகங்களில் சில ஆலயங்கள் சிறப்புப் பெற்றனவாகவும் விளங்குகின்றன. சிங்கள, தமிழ் மன்னர்கள் கண்ணகிக்கு ஆலயம் அமைத்து விழா எடுக்கின்றனர். இதனால் தான் தமிழ், சிங்கள மக்களிடையே கண்ணகி வழிபாடு பெருவழக்காக இருந்து வருகின்றது. தமிழ் மக்களிடையே கண்ணகி வழிபாடு எனவும், அம்மன் வழிபாடு எனவும் வளர்ச்சி பெற, சிங்கள மக்களிடையே "பத்தினித் தெய்யோ" என வளர்ச்சி பெற்றது. தமிழில் எவ்வாறு கண்ணகியைத் தலைவியாகக் கொண்டு இலக்கியங்கள் எழுந்தனவோ அதே போன்று சிங்களத்திலும் கண்ணகியைத் தலைவியாகக் கொண்டு பல இலக்கியங்கள் தோன்றலாயின. கண்ணகிக்கு கோயில்கள் அமைக்கப்பட்ட பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு வரை சில முக்கியமான இடங்களில் ஆலயங்கள் அமைக்கப்பட்ட விதம் பற்றி சில மரபுக் கதைகளும் உண்டு.

ஈழத்தில் கண்ணகி கோயில்கள், வழிபாட்டு மரபுகள் பற்றி அறிந்து கொள்வதற்குரிய மூலகங்களாக சிலப்பதிகாரம், சிலப்பதிகார கட்டுரை, வரந்தருகாதை, சிங்கள இலக்கியங்களான கயபாகதாவ, இராஜவலிய, கோகிலந்தேச என்னும் சிங்கள வரலாற்று நூல்கள், பொற்புருவந்த காவியம், ஊர் சுற்றுக் காவியம் அல்லது உடுக்குச் சிந்துப் பாடல், புராதன யாழ்ப்பாணம், கண்ணகி வழக்குரை, (வழக்குரை பழி வாங்கிய காதை கோவலனார் காதை) மட்டக்களப்பு மான்மியம், கண்ணகி அம்மன் கோவில்களும் இவற்றின் மீது எழுந்த தல இலக்கியங்கள் மற்றும் நாடு கட்டுப் பரவணிக் கல்வெட்டு ஆகியன விளங்குகின்றன. குடத்தனை கஞ்சன் தூர கண்ணகை அம்மன் கோயில், புலோலி தெற்கு மந்திகைக் கண்ணகை அம்மன் கோயில், முல்லைத்தீவு கண்ணகை அம்மன் கோயில், ஓமந்தை வண்ணான்குளம் கண்ணகை அம்மன் கோயில்.

யாழ்ப்பாணத்தின் மந்திகையிற் கோயில் கொண்டுள்ள கண்ணகி அம்மனைச் சார்ந்ததாக மந்திகைக் கண்ணகை அம்மன் அந்தாதி பாடப்பட்டுள்ளது. அத்துடன் அக்கோயிலில் வருடம் தோறும் வைகாசிப் பூரணையிற் பாடப்பட்டு வரும் கோவலனார் கதையும் அச்சிடப்பட்டுள்ளது. மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஊஞ்சலும் எச்சரிக்கை, பராக்கு என்பனவும், நவாலிக் களையோடை கண்ணகை அம்மனுக்கு உயிர் வருகத் தகவலும் அம்பாள் பெயரில் ஊஞ்சலும் பாடப்பட்டுள்ளது. இவை யாவும் கண்ணகி கோயிலின் தலச் சிறப்பு, கற்பின் பெருமை, புகழ் என்பவற்றையே விளங்கி நிற்கின்றன.

இவ்வாறாக ஈழத்தின் ஏனைய பகுதிகளை விட இன்று மட்டக்களப்புப் புகுதியில் தான் கண்ணகி வழிபாடு பெருவழக்காகவும் உன்னத நிலையிலும் உள்ளது. எனவே தான் அப்பகுதிகளில் கண்ணகியைப் போற்றும் இலக்கியங்கள் அதிகமாகத் தோன்றியுள்ளன. கண்ணகி வழிபாடு சார்ந்த இலக்கியமாக இன்னும் பல மட்டக்களப்புப் பகுதிகளில் படிக்கப்பட்டு வருகின்றன. அவையாவன பட்டிமேட்டுக் கண்ணகை அம்மன் காவியம், தம்பிலுவிற் கண்ணகை அம்மன் கோயில் என்பனவும் கண்ணகி அம்மன் தோத்திரம், விருத்தம், பிரார்த்தனை, அகவல், ஊஞ்சல் ஊர்சுற்றுக் காவியம், கொம்பு விளையாட்டுப் பாடல்கள் முதலியன யாவும் இவ்வகையைச் சார்ந்தவையாகும்.

கண்ணகை அம்மன் பொங்கல் வைகாசி மாதத்தில் நடைபெற்றது. பொங்கலுக்குச் சில தினங்களுக்கு முன் கோயில் திறந்து கண்ணகை அம்மன் கதை படிப்பர். அன்று மக்கள் தங்கள் குடும்பங்களோடு கோயிலுக்கு வந்து புதுப்பானையில் பொங்கல் பொங்குவர். காவடிகளும் பாற்செம்புகளும் தொகையாக நடக்கும். கண்ணோயுற்றோர் அது மாறுவதற்காக நேர்த்திக்கடன் பண்ணி வெள்ளியால் கண் மடல் செய்து கொடுப்பர். இக்கோயில்களிலும் பறைமேளம் அடிக்கப்படும். இம்முறை மட்டக்களப்புப் பகுதியில் மிகச் சிறப்பாக நடைபெறும். அங்கு பூசை நாட்களிற் கதை படித்து பொங்கிப் பின் குளிர்த்தியும் போடுவர்.

பொதுவாக நோக்குவோமாயின் ஈழத்தில் கண்ணகி வழிபாடு தோற்றம் பெற்று அழியாத ஒரு வழிபாடாக நிலைத்து விட்டாலும் இவ்வழிபாட்டினை நாவலரும் அவரது சகாக்களும் ஆதரிக்கவில்லை. எனவே தான் கண்ணகி அம்மன் கோயில்கள் நாகபூசணி, நாகேஸ்வரி, ராஜராஜேஸ்வரி அம்மன் கோயில்களாகவும் மாற்றப்பட்டு வழிபாடு இடம்பெற்றதாக அறிய முடிகின்றது. எனினும் கண்ணகி அம்மன் கோயில் பல இன்னும் மங்காப் புகழுடன் திகழ்கின்றமை குறிப்பிடலாம்.

இன்றைய காலத்தில் பக்திநெறி வழிபாட்டுடன், ஆகம வழிபாடுகளும், சேர்ந்து ஆதிபராசக்தியின் அம்சமாக கண்ணகையம்பாளைத் தியானித்து வழிபாடுகள் ஆகம வழிபாடுகள் ஆகம ரீதியாகவும், கும்பாபிஷேக பிரார்த்தனைகள், உற்சவங்கள் நிகழ்வு செய்யப்படுகின்றது. மிருசுவில் (கொட்டிகை) கோயிற்குளம் பகுதியிலும் ஸ்ரீ சக்கர நாராயணரின் வடிவாகிய கண்ணகை அம்பாளைப் போற்றித் துதித்து ஆன்மீக அருட்பலம் பெறுவோம்.

*தேசமான்ய பண்டிதர்*
**கலாநிதி -து.கு -ஜெகதீஸ்வரக் குருக்கள்** J.P)
(அறங்காவலர் மீனாட்சியம்மன் திருக்கோயில்
மதுரயம்பதி - ஈவினை
*புன்னாலைக்கட்டுவன்.*

# அஷ்டலட்சுமிகளின் உண்மைப் பொருள் – தத்துவம்

தென்னிந்திய மரபில் அனைத்து பெரிய தெய்வங்களும் எண் பேர் உருவம் கொண்டு அன்பர்களுக்கு அருள்பாலிப்பதாகப் பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன இந்த எட்டு உருவங்களையும் அஷ்ட மூர்த்தங்கள் என்றழைக்கின்றனர்

சிவபெருமான் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன் ஆன்மா என்ற எட்டுவடிவம் கொண்டு அருள் பாலிப்தாக சித்தாந்த நூல்கள் கூறுகின்றன மகாவிஷ்ணு எட்டு வடிவம் கொண்டு அருள்பாலிப்பதை வைணவ பூஜாபத்தி நூல்கள் குறிப்பிடுகின்றன.

முருகன், ஜயந்தன் அக்கினிசிகன், கிருந்திகன், புத்ரன், பூதபதி, சேனானி, குகன் ஹேமசூலன் விசாலாட்சன் என்ற எண்வடிவங்களையும் விநாயகர் விசாலாட்சி விசுபரூபர், அட்சயர் மதவிப்பிரமர், உன்மத்தர், லளிதர், பீமர், தீசஷணம் ஷடரர் என்ற எட்டு வடிவங்களையும் கொண்டு அருள்பாலிப்பதாக பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன.

இது போன்றே மகாலட்சுமியும் எட்டு வடிவங்களைத் தாங்கி அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றார். இந்த வடிவங்கள் முறையே தனலட்சுமி, தான்யலட்சமி, தைர்யலட்சமி, விஜயலட்சுமி, வீரலட்சுமி, சந்தானலட்சுமி, வித்யாலட்சுமி, கஜலட்சுமி என்று அழைக்கப்படுகின்றனர். இந்த அஷ்டலட்சுமிகளின் வடிவங்கள் ஒரு சேர அமைத்து வழிபடும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகின்றது.

திருமகள் குபேரனோடு தொடர்புடைய எட்டு கருவூலங்களுக்கு தலைமைத் தெய்வமாக விளங்குகின்றார் என மார்க்கண்டேய புராணம் கூறுகின்றது. இந்த எட்டு கருவூலங்களையும் எட்டு திருவுருவங்களுடன் அவர் காக்கின்றார். இந்த எட்டு திருவுருவங்களே அஷ்டலட்சுமிகள் என்று போற்றப்படுகின்றன.

எவர், செல்வம், ஞானம், உணவு, மனவுறுதி, புகழ், வீரம், நல்ல புதல்வர்கள், விரும்பியதை விரைவாக முடிக்கும் ஆற்றல் ஆகிய எட்டையும் பெற்றிருக்கின்றாரோ அவரே மிகுந்த மகிழ்ச்சியுடன் குறைவிலாமல் வாழ்பவராவர். இந்த எட்டே அஷ்ட ஐஸ்வர்யம் என்று போற்றப்படுகின்றது. இவற்றை அன்பர்களுக்கு அருள்வதற்காகத் திருமகள் எண்வடிவம் கொண்டு அருள் புரிகிறார். இந்த எட்டு திருவுருவங்களையும் சேர்த்து அஷ்டலட்சுமிகள் எனப்போற்றுகின்றோம்.

பூரண கும்பங்களில் இந்த எட்டு வடிவங்களையும் அமைத்துள்ளனர் இக்குடங்கள் அஷ்டலட்சுமி கடம் என்றழைக்கப்படும்.

சிவாலயங்களிலுள்ள அம்பிகை சந்நிதியின் மண்டபத்தூண்களில் அஷ்டலட்சுமிகளின் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். திருவண்ணாமலை உண்ணாமுலை நாயகி சந்நிதி, இராமேசுவரம் இராமநாதசுவாமி கோயில் மற்றும் செட்டிநாட்டிலுள்ள அனேக ஆலயங்களில் உள்ள தூண்களில் அஷ்டலட்சுமி வடிவங்கள் சிறப்புடன் அமைக்கப்பட்டுள்ளன.

சிவபெருமான் வீதிகளில் பவனி வரும் போது அஷ்டலட்சுமிகள் வெண்கவரி வீசிவருகின்றனர் என்று சிவமகாபுராணம் கூறுகிறது. சிவாலயத்தேர்களின் நான்குவாயிலிலும் வாயிலுக்கு இருவர் வீதம் அஷ்டலட்சுமிகள் கவரி வீசும் கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளனர்.

பொருளியல் நூலான அர்த்த சாஸ்திரத்தில் சாணக்கியர் பாக்யலட்சுமி, தான்யலட்சுமி, காருண்யலட்சுமி, ஸத்யலட்சுமி, கீர்த்திலட்சுமி, சௌம்யலட்சுமி, சாம்ராஜ்யலட்சுமி எனும்எட்டு லட்சுமிகளின் பெயர்களைக் குறித்துஇவர்கள் எண்மரும் அன்பர்களிடம் நீங்காது நிலை பெற்றிருக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

திருமகள் அஷ்டலட்சுமி வடிவில் திருவாரூர் ஸ்ரீ வாஞ்சியம் வைகல் திருக்கோழம்பம், திருநின்றியூர், மாயூரம், திருமருகல், திருப்புகலூர் ஆகிய எட்டு தலங்களில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டார். இவை அட்டலட்சுமி தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த எட்டு தலங்களிலும் சிவனையும் பரிவாரத்தில் விளங்கும் திருமகளையும் வழிபடுபவர்களுக்கு அஷ்டலட்சுமியின் பூரணமான அருள் கிடைக்கும் என கூறுகின்றனர்.

### *தனலட்சுமி*

உலகில் தேவையான பொருட்களை வாங்கவும் விற்கவும் உபயோகப்படுவது பணமாகவும் ஆதியில் அது பொற்காசுகளாகவும் பொற்கட்டிகளாகவும் புழங்கியது பொற்காசுகளுக்கு தனம் என்பது பெயராயிற்று. நாளடைவில் பொற்கட்டிகளுக்குப் பதில் அதை ஆபரணங்களாகவும் காசுகளாகவும் செய்து வைத்தனர். இவற்றை மகாலட்சுமியாகப் போற்றி வழிபட்டனர். அந்நிலையில் அவர் தனலட்சுமி என அழைக்கப்படுகின்றார். அவர் இக்கோலத்தில் தாமரை மீது அமர்ந்து

மேற்கரங்களில் தாமரை மலர்களை ஏந்தியுள்ளார். கீழ் வலது கரத்தால் அபயமுத்திரையைக்காட்டி இடதுகரத்தால் மடிமீதுவைத்துள்ள பணப்பெட்டியை வைத்தவாறு காட்சி அளிக்கிறார். தனலட்சுமியின் வடிவத்தை பொற்காசுகளில் அச்சிடும் வழக்கம் நெடுங்காலமாக உள்ளது.

பணம் காசு நிறைந்தவர்களை தனவந்தர்கள் என்று அழைக்கின்றனர் (இதற்கு தனத்தை வந்திப்பவர்கள் அதாவது பூசிப்பவர்கள் என்பது பொருள்) தனலட்சுமியை சுவர்ண லட்சுமி எனவும் அழைப்பர்.

ஆதியில் வழமைக்குத் தெய்வமாக இருந்த லட்சுமி பின்னாளில் வியாபாரத்திற்கும் வாணிபத்திற்கும் உரிய தெய்வமானார். இரண்டிலும் நாணயப்புழக்கம் இருப்பதால் வணிகர்கள் தனலட்சுமியை போற்றினார்கள். இவர்கள் இவரை வாணிஜா, வாணிஜயஸ்ரீ என்று அழைத்தனர். ஆதியில் கிடைத்த தனலட்சுமியின் உருவங்களில் அவருடன் பணப்பெட்டகம், காசுகள் நிறைந்த கிண்ணம் ஆகியன இடம்பெற்றன.

## *தான்யலட்சுமி*

வாழ்க்கை நன்கு நடைபெற செல்வம் வேண்டியிருப்பதைப் போலவே உயிர்கள் வாழ்வதற்கு நீரும் உணவும் அவசியமாகிறது. உணவு சமைப்பதற்கு ஆதாரமாக இருப்பவை தானியங்களாகும். எனவே தானியங்களையும் மகாலட்சுமியாகவே போற்றுகிறோம். இந்நிலையில் அவர் தான்யலட்சுமி என அழைக்கப்படுகின்றார். வீடுகளில் தங்கத்தைப்போலவே தானியமும் பெருகியிருக்க வேண்டும் அறுவடைக் காலங்களில் தான்யலட்சுமியை இல்லத்திற்கு வரவேற்கும் வகையில் தானியக்கதிர்களை வீட்டுவாசலில் கட்டி வைக்கின்றனர். கலையழகுடன் கூம்பு போலவும் கூடு போலவும் கதிர்களைப்பின்னி தொங்கவிடுகின்றனர். தானியங்கள் சேகரித்து வைத்துள்ள இடத்தை லட்சுமி வாசம் என்றழைக்கின்றனர்.

இந்த திருவுருவத்தில் அவர் மேற்கரங்களில் தாமரை மலர்களையும் முன்கரங்களில் அபயவரத முத்திரைகளையும் நெற்கதிர், கரும்பு ஆகியவற்றையும் தாங்கி காட்சியளிக்கின்றார்.

இவர் ஆறு பருவங்களிலும் தானியங்கள் விளைவித்து கொடுப்பதை உணர்த்தும் வகையில் ஆறுகரங்களுடன் திகழ்கிறார் என்பர். தானியங்கள் வளர்வதற்கு ஈரமும் உரமும் அவசியம் அந்த இரண்டுமாக அவர் இருக்கிறார். இதையொட்டி ஸ்ரீசூக்தத்தில் ஆர்த்ரா (ஈரத்தன்மை

உடையவர்) கர்ஷிணி (ஈரமாக உள்ள பசுஞ்சாணியில் உறைபவர்) என்று அழைக்கப்படுகிறார். பயிர்களுக்கு ஊட்டத்தைத் தந்து வளத்தைப் பெருக்குவதால் புஷ்டி வர்த்திகா என்றும் குறிக்கப்படுகிறார்.ஆதியில் அவர் வேளாண்மை செய்யும் வேளாளர்களின் கடவுளாக இருந்தார். வேளாளர்களைக் காப்பவர் என்றும் ஸ்ரீசூக்தம் கூறுகிறது. இவர் பயிர்த் தொழிலின் அதிபதியாவார். இவர் தாவரங்களின் வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கின்றார். ஸ்ரீசூக்தம் எனும் நூல் லட்சுமியை நெல்லுக்கும் தானியங்களுக்கும் அதிபதியாக இருக்கின்றார் என்பதால் தாண்டூளி, தான்யராஜினி என்று குறிக்கிறது நெற்கதிர் கட்டுகளுக்கு தாண்டூளி என்பது பெயர்.

## *தைர்யலட்சுமி*

மனிதன் உண்பதற்காகவும் பொருளைத் தேடவும் தானியங்களை விளைவிக்கின்றான். விளைவிப்பதும் அதைக் காப்பதும் எளிதல்ல விளையும் பயிரை நோய் விலங்குகள் பறவைகள் முதலியவற்றிடமிருந்து பாதுகாக்க வேண்டும். விளைந்த பின் அவற்றை பகைவர்கள் கொள்ளையிட்டுக் கொண்டு போய்விடாமல் காக்க வேண்டும். ஆகவே பயிர்களைப் பாதுகாக்க வீரமும் மன உறுதியும் படைத்திருக்க வேண்டும். மன உறுதி அற்றவரால் செல்வத்தை தேடவும் காக்கவும் அனுபவிக்கவும் முடியாது.

மன உறுதியே தைர்யம் என்று அழைக்கப்படுகின்றது. உறுதியுள்ளவர் மனதில் மகாலட்சுமி தைர்யலட்சுமி என்ற பெயரில் வீற்றிருக்கிறார். மன உறுதிபடைத்தவன் தனக்கென ஏவலர், காவலர் உடனாளர் முதலியவர்களுடன் சுகமாக வாழ்கிறான். அவனுள்ளத்தில் வீற்றிருக்கும் தைரியலட்சுமியை சாம்ராஜ்யலட்சுமி என்றும் அழைப்பர். அவர் சிம்மாசனத்தில் அமர்ந்து செங்கோலேந்தியவாறு காட்சியளிக்கிறார். மேற்கரங்களில் தாமரை மலர்களைத் தாங்கியுள்ளார்.

தைர்யமுள்ளவரே மிகப் பெரிய சாம்ராஜ்யங்களைத் தோற்றுவிக்கிறார். எல்லா லட்சுமிகளிலும் தைர்யலட்சுமியே உயர்ந்தவர். ஒருவருக்கு எந்தலட்சுமியின் அருள் இருந்தாலும் தைர்யலட்சுமியின் அருள் இல்லாவிட்டால் அவருக்கு மற்றவர்களின் அருளால் பயனில்லை. எனவே தைர்யலட்சுமியை ராஜ்யஸ்ரீ என அழைக்கின்றனர். இவரை நீண்டபட்டாடை கொண்டவராக சித்தரிக்கின்றனர்.

## *வீரலட்சுமி*

மகாலட்சுமி வீரவனிதையாக கோலாசுரனிடம் போரிட்டு அவனை வீழ்த்தும் காட்சியை இங்கே காணலாம். வீரலட்சுமி சிம்மத்தின் மீது வில், வாள், அம்பு, கேடயம் ஏந்திக் காட்சியளிக்கிறார். இவரை வெற்றித்திருமகள் என்றழைக்கின்றனர்.

தைர்யம் என்பது மனதின் உறுதிப்பாடு அந்த உறுதியினால் கலங்காத மனமும் அளவிலாத வலிமையும் உண்டாகின்றன. அந்த ஆற்றலே வீரமாக வெளிப்படுகின்றன வீரமுள்ளவர்களின் மனதில் மகாலட்சுமி வீரலட்சுமியாக விளங்குகின்றார். வீரமுள்ளவனே தனது நாட்டை காக்கிறான். அவனுடைய வாளுக்கும் தோளுக்கும் அஞ்சியே பகைவர்கள் அடங்கி ஒழுங்காக நடந்து கொள்கின்றனர். பகைவர் இல்லாமையால் நாட்டில் அன்பும் சமாதானமும் தழைக்கின்றது. வீரமுள்ளவனே உயிர்களுக்கு காவலாக விளங்குகின்றான்.

மாவீரர்களின் தோளிலும் மார்பிலும் அவர்களுடைய வாளிலும் மகாலட்சுமி வீரத்திருமகளாக வீற்றிருக்கிறார் என புராணங்களும் தோத்திர நூல்களும் புகழ்கின்றன. சோழமன்னர்கள் தங்களது புகழை நெடும் பாடலாக ஆலயச்சுவர்களில் கல்வெட்டுக்களாகப் பொறித்து வைத்துள்ளனர். இவை மெய்க்கீர்த்திகள் என்றழைக்கப்படுகின்றன. இவற்றில் இவர் வீரமாது, ஜெயமகள், வெற்றிமகள் எனப்பலவாறு அழைக்கப்படுகின்றார்.

வீரத்தால் விளைவது வெற்றியாகும் வெற்றியை நல்கும் வீரலட்சுமியை வெற்றித்திருமகள் ஜெயலட்சுமி என்றழைக்கின்றோம். துர்க்கம் என்பதற்கு கோட்டை என்பது பொருளாகும். உயிர்களுக்கு கோட்டை போல் காவலாக இருப்பதால் அவர் துர்க்காலட்சுமி என்றும் அழைக்கப்படுகின்றார். வட இந்திய மாமன்னர்களாகிய சந்திரகுப்தர் குமாரதேவிஆகியோர் வெளியிட்ட நாணயங்களில் வீரலட்சுமி சிங்கவாகனத்தில் விளங்குவதைக் காண்கின்றோம்.

## சந்தானலட்சுமி

ஒருவன் வீரம் விளைந்து அதிகாரம் செலுத்தித் தன்னைச் சார்ந்தவர்களுடன் தான் சுகமாக வாழ்ந்திருந்தால் மட்டும் போதாது அவனுடைய வம்சத்தையும் மாடு, மனை, கன்று காலிகளையும் விருத்திசெய்யவேண்டும். உலகத்தினை விருத்தி செய்யும் மகாலட்சுமி சந்தானலட்சுமி என்று அழைக்கப்படுகின்றார்.

சந்தானம் என்பதற்கு தொடர்புபடுத்தல் என்பது பொருளாகும். உயிர்களைச் செல்வச் செழிப்புடன் தொடர்பு கொள்ளவைத்து இன்பம் அடையச்செய்வதால் மகாலட்சுமி சந்தானலட்சுமி எனப்படுகின்றார்.

சந்தானலட்சுமி காமன், சாமன் என்னும் இரண்டு குழந்தைகளுடன் காட்சியளிக்கின்றார். காமன் உயிர்களிடத்தில் ஆசையையும் வேட்கையையும் தோற்றுவிக்கின்றான். சாமன் அந்த ஆசையை நிறைவேற்றிக்கொள்ளத் துணைசெய்கிறான். திருப்பாவையில் ஆண்டாள் காமனையும்சாமனையும் தொழுது தன்னை கண்ணனுடன் கூட்டி வைக்க வேண்டுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இரண்டு குழந்தைகளை மடியில் வைத்திருக்கும் கோலத்தில் சந்தானலட்சுமியை அமைத்து வழிபடுகின்றனர். இவரை வணங்குவதால் வம்ச விருத்தி உண்டாகும் என்பது பெரியோர் வாக்கு சிலர் இவருடன் நிற்கும் ஹரீதி எனும் துணைப்பெண் தெய்வம் குழந்தையை ஏந்தியிருப்பதாகக் குறித்துள்ளனர்.

வடமதுரையில் கிடைத்துள்ள குஷாணர் காலத்தில் கற்சிலைகளில் தாமரை மலர் ஏந்தியிருக்கும் லட்சுமியுடன் பழம் ஏந்திய மணிபத்ரர் குழந்தையை வைத்துக் கொண்டுள்ள ஹரீதி எனும் சேடிப் பெண் குபேரன் ஆகியோர் ஓரேபீடத்தில் வடிக்கப்பட்டுள்ளனர். ஸ்ரீசூக்தத்தில் சிக்லீதர் என்பவர் திருமகனின் மகனாகக் கூறப்பட்டுள்ளனர். அவருடன் தன் வீட்டில் லட்சுமியுடன் வசிக்கவேண்டும் என்றும் தண்ணீருடன் உணவுப் பொருட்களையும் நிறைவாகத் தரவேண்டும் என்றும் வேண்டப்படுகிறது. தமிழில் உள்ள அஷ்டலட்சுமி துதியில் சிக்லீதருக்கும் வணக்கம் சொல்லப்பட்டுள்ளது.

## விஜயலட்சுமி

விஜயம் என்பதற்கு நாலாதிசைகளிலும் பயணம் செய்வது என்பது பொருள். வீரப் போரிட்டு வெற்றியைப்பெறவும் பகைவர்களை அடக்கி வைக்கவும் வீரர்கள் திக்விஜயம் புரிகிறார்கள். ஒருவன் திசையெட்டும் சென்று வீரம் விளைவிப்பதால் அவனுடைய புகழ் பரவுகிறது. புகழ் ஒன்றே மனிதனின் மரணத்திற்குப் பின்னும் நிலை பெற்றிருக்கிறது. உண்மையில் அதுவே நிலையானது. வீரனின் வெற்றி விஜயத்திற்கு முன்பாக லட்சுமி தனது சேனையுடன் செல்கிறார். அந்த வீரனின் புகழை திசையெங்கும் நிலைபெறச் செய்கிறார்.

போர்வீரர்கள் மட்டுமன்றி ஆத்மாவை உணர்ந்த ஞானவீரர்களும் பல இடங்களுக்கு சென்று தனது கொள்கைகளை நிலைநாட்டுகின்றனர். அந்த திக்விஜயத்தால் அவர்களுடைய புகழ் உலகில் பரவி நிலை பெற்றிருக்கிறது.

எண்திசை மதிக்கவரும் புகழை உயிர்களுக்கு அளிக்கும் மகாலட்சுமி கீர்த்திலட்சுமி, விஜயலட்சுமி என்றழைக்கப்படுகின்றார். தமிழில் புகழ் மங்கை, இசைமங்கை எனப்பலவாறு குறிக்கின்றனர். இவர் குதிரை மீது அமர்ந்து பயணம் செய்கின்றார். இவருக்குமுன்னும் பின்னுமாக பெண்கள் வெற்றிச் சின்னங்களை ஏந்தியவாறு விருதுகளைக் கூறிக்கொண்டும் இசைக்கருவிகளை முழங்கிக் கொண்டும் செல்கின்றனர். சோழர்காலக் கல்வெட்டுகளில் இவர் விஜயமங்கை, புகழ்மங்கை திசையனைத்தும் இசைபரப்பும் திருமாது என்று பலவாறு குறிக்கப்பட்டுள்ளார்.

புகழ் மங்கையான லட்சுமி குதிரையில் பவனி வருவதால் அஸ்வாரூடா, பரிமேல் அழகிய பாவை என்று இலக்கியங்களில் போற்றப்படுகிறார். பொன்மயமான குதிரை இவருடனேயே பிறந்ததாகும். விஜயலட்சுமி தேரில் பவனி வருவதாகவும் கூறுகின்றனர். பெரிய ரதங்கள் மகாலட்சுமியின் திருவுருவங்களாகவே போற்றப்படுகின்றன.

## *வித்யாலட்சுமி*

செல்வத்தைச் சேர்ப்பது அதைக் கட்டிக் காப்பது அதை நல்வழியில் செலவிடுவது யாவற்றிற்கும் அடிப்படையாக இருப்பது அறிவு எனும் ஞானமாகும். இந்த அடிப்படை அறிவாக விளங்குபவர் ஞானலட்சுமி, வித்யாலட்சுமி என்று அழைக்கப்படுகிறார். இவர் ஏடும் எழுத்தாணியும் கொண்டவர் உயிர்களுக்கு அறிவை வழங்கி அவை இன்பத்தில் திளைத்திருக்க அருள் புரிபவர் இவரை ஞானத்திருமகள் என போற்றுகின்றனர்.

வைணவ மரபில் திருமால் முதலில் எல்லாக் கலைகளையும் திருமகளுக்கே உபதேசித்தார். அவர் வழியாகவே ஞான பரம்பரை தொடர்ந்து வருகிறது இதன்படி அவரே முதல் ஞான குருவாத் திகழ்வதைக் காணலாம். இவர் ஞானஸ்ரீ, வித்யாஸ்ரீ என்றும் போற்றப்படுகிறார்.

வித்தைகளின் முடிவு பிரமத்தில் லயித்திருப்பதே என்பதால் வித்யாலட்சுமி பிரம்மஸ்ரீ எனப்பட்டார். யோகிகளிடையே அவர் பிரம்மஸ்ரீயாக விளங்குகிறார். கல்வியை விரும்புபவர்கள் தசமியன்று பிரம்மஸ்ரீயை வெண்தாமரை மலர்களைக் கொண்டு அர்சிக்க வேண்டுமென்று பரமசம்ஹிதா எனும் நூல் கூறுகிறது.

உத்திரமேரூர் சுந்தரவரதராஜர் ஆலயத்திலுள்ள சிற்பத்தில் லட்சுமி பிரம்ஸ்ரீயாக அமைக்கப்பட்டுள்ளார். இதில் மேலே இரண்டு யானைகள் நீராட்ட அட்சமாலை, கமண்டலம், புத்தகம் ஆகியவற்றை ஏந்தி பிரம்மஸ்ரீயாக வித்யாலட்சுமி தாமரை மலரில் அமைந்துள்ளார்.

## கஜலட்சுமி

திருமகளின் எட்டாவது வடிவம் கஜலட்சுமி ஆகும் எட்டு திசைகளுக்கு உரிய யானைகள் நீராட்டின. அவர் தாமரை மலரில் வீற்றிருக்கிறார் விஷ்ணு புராணம் இவர் கடலிலிருந்து வெளிப்பட்டதும் திசையானைகள் எண்திசையில் இருந்தும் பொற்குடங்களில் தூயநீரை ஏந்தி வந்து நீராட்டின என்று கூறுகின்றன. யானைகள் நீராட்ட நடுவில் வீற்றிருப்பதால் இவரை கஜலட்சுமி என்று அழைக்கின்றனர். நடைமுறையில் இரண்டு யானைகள் நீராட்டுவது போல் அமைத்துள்ளனர்.

இவர் விரும்பியதை விரும்பியவாறு அளிப்பதால் காம்யசஷி (காம்யம் விரும்புதல்) என்று அழைக்கப்படுகின்றார். இவரை விளக்கில் நிலைப்படுத்தி வணங்கும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகிறது. விளக்கில் திருவாசிக்கு (பிரபைக்கு) கஜல(ட்)ஷ்மி வடிவத்தை அமைக்கின்றனர். இந்த விளக்கிற்கு காமாட்சி விளக்கு நடுவே க என்பது பெயர். விரும்பியதை அளிக்கும் தேவியாக இருப்பதால் வீட்டின் நிலைப் படிகளில் இவருடைய திருவுருவத்தை அமைக்கின்றனர். இப்படி அமைப்பதன் மூலம் வீட்டின் உரிமையாளர்கள் விரும்பியதை விரும்பியவாறு நிறைவாக அளித்து வீட்டில் அமைதியை நிலவச் செய்கிறார். இவரைச் சாந்தலட்சுமி, தயாலட்சுமி, சுதந்திரலட்சுமி என்று பலவாறு போற்றுகின்றனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சங்க இலக்கியங்களில் கஜலட்சுமியைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

கஜலட்சுமியை மிகப் பழங்காலத்திலிருந்தே போற்றி வழிபட்டு வந்துள்ளனர். கி.மு 1ம் நூற்றாண்டைச் சேர்ந்த (மராட்டிய மாநில பிதல்கோரா் குகைக் கோயிலில்) இவருடைய சிற்பம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீசூக்தம் அவர் யானைகளின் பிளிறலால் மகிழ்வதாகக் கூறுகிறது. பழங்காசுகளில் அவர் கஜலட்சுமியாக பொறிக்கப்பட்டுள்ளார். நடைமுறையில் மேற்கரங்களில் தாமரை மலர்களையும் கீழ்க்கரங்களில் அபயவரத முத்திரைகளையும் தாங்கி இருபுறமும் யானைகள் நீராட்டத் தாமரை மலரில் வீற்றிருக்கும் லட்சுமியை கஜலட்சுமி என அழைப்போம்.

**க.கயிலைவாசன்** B.A(Hons)
*மிருசுவிலூர் இளஞ்சைவப்புலவர்*
**அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**தொல்லியல் திணைக்களம்**
**யாழ்ப்பாணம்.**

# தென்மராட்சியின் மரபுரிமை சின்னமாகத் திகழும் மிருசுவில் கொட்டிகை அம்மன் ஆலயம்




**பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்**

*தலைவர்*

*வரலாற்றுத்துறை*

*யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்*



தென்மராட்சியில் ஆகம மரபு சாராத, ஆகமமரபு சார்ந்த ஆலயங்கள் பலவற்றைக் கொண்டுள்ள கிராமங்களுள் வரணி, கச்சாய், மிருசுவில், எழுதுமட்டுவாள் என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. யாழ்ப்பாணத்தில் மறக்கப்பட்டு வரும் பாரம்பரிய மரபுரிமைகள் பல தொடர்ந்தும் பாதுகாக்கப்படும் கிராமங்களாக இவை காணப்படுகின்றன. ஒல்லாந்தரது ஆட்சியின் பிற்பகுதியில் இந்துமதம் மறுமலர்ச்சியடைந்த போது பல புதிய ஆலயங்கள் இக்கிராமங்களில் தோற்றம்பெற்றன. ஆறுமுகநாவலர் ஏற்படுத்திய சமய விழிப்புணர்வால் குடாநாட்டில் ஆகமமரபு சார்ந்த பல ஆலயங்கள் தோன்றிய போது அதன் செல்வாக்கு தென்மராட்சியிலும் ஏற்பட்டது. அதேவேளை ஆகமமரபு சாராத புராதன ஆலயங்கள் பலவற்றிற்குப் புத்துயிர் அளித்த பிராந்தியமாகவும் தென்மராட்சி காணப்படுகிறது. இதற்கு உதாரணமாக மிருசுவில் கொட்டிகை அம்மன் ஆலயத்தைக் குறிப்பிடலாம்.

*தென்மராட்சியின் வரலாற்றுப் பின்னணி*

வடஇலங்கையில் தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு கொண்ட பிரதேசங்களில் தென்மராட்சியும் ஒன்றாகும். 90 சதுர மைல் பரப்புக் கொண்ட இப்பிராந்தியத்திற்குள் புராதன வரலாறு கொண்ட பல கிராமங்கள் காணப்படுகின்றன. 1980 களில் யழ்ப்பாணத்தின் பூர்வீக குடியிருப்புக்கள் பற்றி ஆய்வுகள் மேற்கொண்ட கலாநிதி

இரகுபதி தென்மராட்சியில் நாவற்குழி, கச்சாய், வரணி, மந்துவில், மிருசுவில், எழுதுமட்டுவாள் போன்ற இடங்களில் கிறிஸ்தவ சகாப்த காலத்தில் இருந்து மக்கள் வாழ்ந்து வருவதை உறுதிப்படுத்தும் தொல்லியல் ஆதாரங்களை வெளிக்கொணர்ந்தார். 1994-95 காலப்பகுதியில் தென்மராட்சியில் தொல்லியல் ஆய்வை மேற்கொண்ட இக்கட்டுரை ஆசிரியர் இப்பிராந்தியத்தில் கிறிஸ்தவ சகாப்தத்தில் இருந்து புழக்கத்தில் இருந்த பல்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த உள்நாட்டு, வெளிநாட்டு நாணயங்கள் பலவற்றைக் கண்டுபிடித்தார். அவற்றுள் உரோம மற்றும் தென்னிந்திய, இந்திய நாணயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவ்வாதாரங்கள் பண்டைய காலத்தில் தென்மராட்சி மக்கள் பிறநாடுகளுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தமைக்குச் சான்றாகும்.

தமிழகத்தில் பல்லவராயன் பேட்டை, திருவாலங்காடு ஆகிய இடங்களில் கிடைத்த கி.பி.12 ஆம் நூற்றாண்டுக்குரிய சோழக்கல்வெட்டுகள் வடஇலங்கைமீது படையெடுத்த சோழர் மட்டிவாழ் என்ற இடத்தில் நிலைகொண்டிருந்த படைவீரர்களையும், யானைகளையும் சிறைப்பிடித்து தமிழ் நாடு கொண்டு சென்றதாகக் கூறுகின்றன. இக்கல் வெட்டுக்களில் வரும் மட்டிவாழ் என்ற இடத்தை அறிஞர்களில் சிலர் தற்போது தென்மராட்சியில் உள்ள மட்டுவில் கிராமம் எனவும், வேறுசிலர் எழுதுமட்வாழ் எனவும் கூறுகின்றனர். இவ்விடம் எதுவாக இருப்பினும் இவ்விரு இடங்களும் தென்மராட்சி பிரதேசத்தில் அமைந்திருப்பது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவ்வாதாரம் சோழர் ஆட்சியில் தென்மராட்சிப் பிரதேசம் வரலாற்றில் சிறப்பு பெற்றிருந்தமைக்குச் சான்றாகும். 14 ஆம் நூற்றாண்டில் எழுந்த நம்பொத்த என்ற சிங்கள இலக்கியம் வடஇலங்கையை தமிழ்ப்பட்டினம் எனக் கூறும் போது தென்மராட்சிக்கு அண்மையில் உள்ள நாகர் கோவில் என்ற இடத்தையும் சிறப்பித்துக் கூறுகிறது. 15ஆம் நூற்றாண்டில் எழுந்த கோகிலசந்தேசஸ என்ற சிங்கள

மொழியிலமைந்த குயில்விடு தூதுப்பிரபந்தம் யாழ்ப்பாண இராச்சியத்திற்கு உட்பட்டிருந்த தென்மராட்சியில் உள்ள சாவகச்சேரியை சாவககோட்டை எனக் கூறுறகிறது. இதேபோல் 16 ஆம் நூற்றாண்டெழுந்த திரிசிங்கள கயிடம் ஸஹவித்தி என்றொரு இன்னொரு சிங்கள இலக்கியம் இவ்விடத்தை சவகிரி எனக் கூறுகிறது. 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசு தோன்ற முன்னர் வடஇலங்கையில் சாவகன் ஆட்சி இருந்ததை பாளி சிங்கள இலக்கியங்கள் கூறுகின்றன. அக்காலத்தில் தென்மராட்சி சாவகன் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததையே மேற்கூறப்பட்ட இடப்பெயர்கள் உறுதி செய்கின்றன.

13ஆம் நூற்றாண்டுக்கும் 17 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாண இராசதானியத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பிராந்தியங்களில் தென்மராட்சியே மிகப்பெரிய நிர்வாகப் பிரிவாகும். இக்காலப்பகுதியில் தமிழகத்திலிருந்து ஏற்பட்ட மக்கள் புலப்பெயர்வில் பல குடியேற்றங்கள் தென்மராட்சியில் ஏற்பட்டதை வையாபாடல் சுட்டிக்காட்டுகிறது. மேலும் இக்காலத்தில் யாழ்ப்பாணத்திற்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலான அரசியல், வாணிபத் தொடர்பில் தென்மராட்சிப் பிரதேசம் முக்கிய கேந்திரமாகத் திகழ்ந்ததற்கும் ஆதாரங்கள் காணப்படுகின்றன. அத்துடன் பெருநிலப்பரப்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடைப்பட்ட வணிக உறவில் வன்னியில் இருந்து வரும் பொதிசுமக்கும் வண்டில்களுக்கு வரி அறவிடும் கடவைகள் (ஆயம்) பல தென்மரட்சியில் இருந்துள்ளன. யாழ்ப்பாண அரசு காலத்தில் தமிழ் மொழி, இந்துமதம், தமிழ் இலக்கியம், சோதிடம், சுதேச மருத்துவம் என்பன நன்கு வளர்ச்சி பெற்ற காலமாகும். இக்காலத்தில் தென்மராட்சி யாழ்ப்பாண இராசதானியின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருந்ததினால் அக்காலப் பண்பாடு அதிகம்

வளர்ச்சியடைந்த பிராந்தியங்களுக்குள் தென்மராட்சிக்கு தனித்துவமான இடம் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அவற்றை அடையாளப்படுத்தும் முக்கிய பண்பாட்டு அம்சங்களில் ஒன்றாக தென்மராட்சியில் கிராமங்கள் தோறும் காணப்படும் ஆலயங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் தென்மராட்சியின் பாரம்பரியம் மிக்க மரபுரிமை சின்னமாக அடையாளப்படுத்தக் கூடிய ஆலயமாக கொட்டிகை அம்மன் ஆலயம் காணப்படுகின்றது.

வடஇலங்கையில் குறிப்பாக தென்மராட்சியில் உள்ள இந்து ஆலயங்களை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம் 1) ஆகம மரபு சாராத கிராமிய ஆலயங்கள் அல்லது நாட்டுப்புற ஆலயங்கள் 2) ஆகம மரபிற்கு உட்பட்ட ஆலயங்கள் 3) கிராமிய ஆலயங்களாக இருந்து ஆகம மரபிற்கு உட்பட்ட ஆலயங்கள். அவற்றுள் மிருசுவில் கொட்டிகை அம்மன் ஆலயம் கிராமிய ஆலய மரபில் இருந்து ஆகம மரபிற்கு மாறிய ஆலயமாகும். ஆயினும் இவ்வாலயத்திற்குரிய தனித்துவமான சிறப்பு தற்போதைய ஆலயம் ஆகம மரபில் கட்டப்பட்டாலும் அதன் நீண்ட பாரம்பரிய வரலாறு அவ்வாலய வரலாற்றோடு இணைந்திருப்பதன் காரணமாக ஆகம மரபு சாராத பல அம்சங்களும் அவ்வாலய வழிபாட்டின் கிரிகை முறை. சடங்குகள், வழிபடப்படும் சமய நம்பிக்கைகளில் கலந்து காணப்படுகின்றன. இதுவே இவ்வாலயத்தின் தனிச்சிறப்பாகும்.

*கொட்டிகை அம்மன் ஆலயம் - ஒரு வரலாற்று நோக்கு*



இவ்வாலயம் தொன்மையான வரலாறு கொண்டது. இதன் தொடக்க காலம் கண்ணகை அம்மன் ஆலயம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. தமிழகத்தில் கிபி6ஆம் நூற்றாண்டில் பத்தி இயக்கம் எழுச்சி பெற முன்னர்

தமிழகத்திலும், இலங்கையிலும் கிராமிய ஆலயங்களே இருந்துள்ளன. இவ்வாலயங்களில் வைக்கப்பட்ட தெய்வ உருவங்கள் திராவிடத் தெய்வங்கள் அல்லது நாட்டுப்புறத் தெய்வங்கள் என அழைக்கப்பட்டன. இத் தெய்வங்கள் மக்கள் குடியிருப்புக்கள் நிறைந்த இடங்களில் வீடுகளில், மரநிழலின் கீழ், நீர் நிலைகளை அண்டி அழியும் பொருள்களால் அமைக்கப்பட்ட ஆலயங்களில் வைத்து வழிபடப்பட்டன. தமிழரின் தனித்துவமான பண்பாட்டு அம்சங்களை அடையாளப்படுத்தும் பழந்தமிழ் இலக்கியங்கள் தமிழரின் தனித்துவமான நாட்டுப்புறத் தெய்வங்களாக அண்ணமார், நாகதம்பிரான், வீமன், வைரவர், கண்ணகி, துர்க்கை, காளி முதலான தெய்வங்களைக் கூறுகின்றன. சமகாலத்தில் இவ்வகையான தெய்வங்களே இலங்கைத் தமிழரிடம் செல்வாக்குப் பெற்றிருந்ததைப் பாளி இலக்கியங்களும், பிராமிக் கல்வெட்டுக்களும் மறைமுகமாகக் கூறுகின்றன.இவ் ஆகம மரபு சாராத கிராமிய வழிபாட்டு ஆலயங்கள் பலவற்றைக் கொண்டுள்ள பிராந்தியமாக தென்மராட்சி குறிப்பாக மிருசுவில் வட்டாரம் காணப்படுகிறது. அவற்றுள் கண்ணகி வழிபாட்டு ஆலயத்திற்கு தனித்துவமான வரலாறு காணப்படுகிறது.

வடஇலங்கையில் உள்ள பாரம்பரிய வழிபாட்டுத் தெய்வங்களில் கண்ணகி வழிபாட்டுக்குரிய ஆலயங்களே எண்ணிக்கையில் அதிகமாகும். இவ்வழிபாட்டின் தோற்றம் பற்றி ஆராய்ந்தோர் இவ்வழிபாட்டை கி.பி. 2ஆம் நூற்றாண்டில் கஜபாகு மன்னன் தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு அறிமுகப்படுத்தினான் என்பது மரபு. இதனால் வடஇலங்கையில் உள்ள கண்ணகி ஆலயங்கள் பலவற்றின் வரலாற்றை கஜபாகு அல்லது சிலப்பதிகார காலத்துடன் தொடர்புபடுத்திக் கூறும் மரபு இன்று காணப்படுகிறது. ஆனால் இவற்றை உறுதிப்படுத்தப் பொருத்தமான ஆதாரங்கள் எல்லா ஆலயங்களுக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் கொட்டிகை அம்மன் ஆலயத்திற்கு முன்னோடியாக இருந்த கண்ணகி


ஆலயத்திற்கு நீண்ட வரலாறு உண்டு எனக் கூறுவதற்குச் சில காரணங்கள் உண்டு.

இலங்கைக்கு கண்ணகி வழிபாடு அறிமுகமான வரலாறு பற்றிய கதையில் இலங்கையில் இருந்து தமிழகம் சென்ற கஜபாகு மன்னனிடம் செங்குட்டுவன் சந்தன மரத்தால் செய்த கண்ணகி சிலையையும் ஒரு காற்சிலம்பையும் சந்தன மரப்பேழையில் வைத்து கஜபாகுவிடம் கையளித்தான் என்றும் கஜபாகு மன்னன் விக்கிரகத்துடன் இலங்கைக்குத் திரும்பும் போது தன்னுடன் பன்னிரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பல்குடி மக்களையும் அழைத்து வந்தான் எனவும், இம்மன்னன் சிலையுடன் மாதகலுக்கு அருகேயுள்ள சம்புகோளத் துறைமுகத்தில் வந்திறங்கி. இங்கிருந்து யானை மேல் கண்ணகி சிலையை வைத்து பல யானைகள் பின்னே வர ஊர்வலமாய் பல இடங்களுக்கு எடுத்துச் சென்றான். ஊர்வலம் நின்ற இடமெல்லாம் கண்ணகி வழிபாடு தோன்றியது எனவும் கூறப்படுகிறது. கஜபாகு மன்னனால் யாழ்ப்பாணத்தில் 1வது கண்ணகி கோயில் ஸ்தாபிக்கப்பட்ட இடம் அங்கணாகடவை எனப்படும். அங்கணா என்பது அம்மனைக் குறிக்கும். ஒல்லாந்தர் காலத்தில் இக் கோயிலும் சிலையும் யானையால் சிதைக்கப்பட்டுள்ளது. இராசநாயகம் முதலியார் இச்சிலைகளின் காலும் அதன் தலையும் இந்நூற்றாண்டின் இருபதுகளில் இப்பகுதியில் மேலாய்வு செய்த போல் பீரிஸினால் இனங்காணப்பட்டன எனவும் இவ்எச்சங்கள் பின்னர் இப்பகுதி நூதனசாலையில் வைக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு அங்கணா கடவையில் வந்திறங்கி வற்றாப்பளை செல்லும் வழியில் கண்ணகி தரிசனம் பெற்ற இடங்களில் ஒன்றாக மிருசுவில் கொட்டிகை அம்மன் ஆலயம் அமைந்த இடமும் ஒன்று என்ற ஐதீகம் காணப்படுகிறது. இந்த ஐதீகத்துடன் தொடர்புடையதாக கொட்டிகை என்ற பெயர் தோன்றிய வரலாறு பற்றி இரண்டு ஐதீகங்கள் காணப்படுகின்றன. அவ்வைதீகக் கதைகள் எந்தளவுக்கு

உண்மையென்பதை உறுதி செய்ய முடியாவிட்டாலும் அக்கதைகள் இவ்வாலயத்திற்கு தொன்மையான வரலாறு இருப்பதைக் காட்டுகிறது.

தற்போதைய ஆலயம் 17 ஆம் நூற்றாண்டில் சிறு கோவிலாக அமைக்கப்பட்டதை வரலாறு கூறுகின்றன. 1814ல் இக்கோவிலுக்கு திருப்பணி நடந்ததாக ஆலயத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக் கூறுகிறது. அங்கிருக்கும் பழமையான தேரில் உள்ள சாசனம் 1817ல் செய்து முடிக்கப்பட்ட செய்தியைக் கூறுகிறது. இவ்வாதாரங்கள் தற்போதைய அம்மன் ஆலயத்தை ஆகம மரபிற்கு மாற்றிய காலம் 17-19 ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்டதென்பதை உறுதி செய்வதால் இங்கிருந்த கண்ணகி ஆலயத்தின் தோற்றம் இக்காலத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதென்பது உறுதியாகத் தெரிகிறது.

இலங்கையில் அழியாப் பொருட்களைப் பயன்படுத்தி ஆகமமரபில் ஆலயங்கள் அமைக்கும் மரபு கி.பி.7ஆம் நூற்றாண்டின் பின்னரே தோற்றம் பெறத் தொடங்கின. ஆவ்வாறு தோன்றி வளர்ந்த ஆலயங்கள் 16ஆம் நூற்றாணடிலிருந்து போத்துக்கேயரும், ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தில் கடைப்பிடிக்கப்பட்ட கலையழிவுக் கொள்கையால் இடித்தழிக்கப்பட்டன. போத்துக்கேய ஆசிரியரான குவேறோ சுவாமிகள் இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த 500க்கு மேற்பட்ட ஆலயங்கள் இடித்தழிக்கப்பட்டதாக தனது நூலில் கூறியுள்ளார்.



அக்கலையழிவுக் கொள்கையால் தென்மராட்சியில் இருந்த ஆலயங்களும் இடித்தழிக்கப்பட்டன. அதில் கொட்டிகை கண்ணகி ஆலயமும் அடங்கியிருக்கலாம். ஐரோப்பியர் ஆட்சிக்கு முன்னர் ஆகமமரபு சார்ந்த, ஆகம மரபு சாராத ஆலயங்களாக இருந்தவை 19, 20 ஆம் நூற்றாண்டில் மாற்றமடையத் தொடங்கின. அதாவது ஆகம மரபு சாராத பல ஆலயங்கள் ஆகம மரபு சார்ந்த ஆலயங்களாக மாறின. இம்மாற்றத்திற்கு தென்னிலங்கையில் அநாகரிக தருமபாலர் பௌத்த சிங்கள தேசியவாதத்தை முன்னிலைப்படுத்தி ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்ட போது வடஇலங்கையில் தமிழ் சைவத்தை முன்னிலைப் படுத்தி ஆங்கிலேயரை எதிர்த்த ஆறுமுகநாவலர் ஆகம மரபு சாராத ஆலயங்கள் ஆகம மரபிற்கு மாறவேண்டும் எனவும் போரிட்டார். இதன் விளைவால் யாழ்ப்பாணத்தில் சிறப்பாக தென்மராட்சில் இருந்த ஆகம மரபு சாராத பல ஆலயங்கள் ஆகம மரபிற்கு மாற்றப்பட்டன. அதன் காரணமாகவே பாரம்பரியமான வரலாற்றுப் பெருமையுடன் விளங்கிய கண்ணகி ஆலயம் கொட்டிகை அம்மன் ஆலயமாக மாறுவதற்கு காரணமாகும்.



தற்போதைய அம்மன் ஆலயம் ஆகம மரபில் கருங்கல், சுண்ணக்கல் கொண்டு கட்டப்பட்டுள்ளது. ஆகம மரபிற்கு உட்பட்ட வகையில் கர்ப்பக்கிருகம், அதன்மேல் விமானம், அந்தராளம், முன்மண்டபம், மகாமண்டபம், கொடித்தம்பம், பரிவாரக் கோவில்கள், எமது பாரம்பரிய சமய நம்பிக்கைகளைப் பிரதிலிக்கும் புடைப்புச் சிற்பங்களுடன் கூடிய தேரையும் கொண்டுள்ளது. ஆயினும் இவ்வாலய அம்மன், சிவன், விநாயகர் தெய்வங்களுடன் இவ்விடத்திலிருந்த எமது தனித்துவமான பண்பாட்டு அடையாளமான கண்ணகிக்கு தனிக்கோயில் அமைத்து பாரம்பரிய சமய

சடங்குகளை, சமயச் சின்னங்களை தொடர்ந்தும் பேணிக் கொள்வதுடன், பிராமணர் அல்லாதோர் இன்று இவ்வாலயத்தில் பூசை செய்து வருவது இவ்வாலயத்தின் பழமையையும், பெருமையையும் இக்கிராம மக்கள் மறக்கவில்லை என்பதை அடையாளப்படுத்தி நிற்கின்றன.



இந்நிலையில் இவ்வாலயத்தின் தொன்மையையும், அதன் வரலாற்றுப் பெருமையையும் பறைசாற்றி வெளிவரும் மலரில் தற்போதைய ஆலயம் காலம் தோறும் படிப்படியாக வளர்ச்சியடைய தம்மை அர்ப்பணித்த திருவாளர்களான ஐயம்பிள்ளை கயிலாயர், சைவப்பெரியார் கயிலாயர் ஐயம்பிள்ளை,ஞானமுத்து இளையதம்பி, தம்பிப்பிள்ளை ஐயம்பிள்ளை, அம்பலவாணர் செல்லத்துரை, ஆகியோரை நினைவுபடுத்திக் கொள்வது எமது கடமையாகும் அம்பலவாணர் குமாரசாமி அவர்களின் பணி தற்போதும் இடம்பெற்றுக் கொண்டிருப்பதை காணலாம்.

*அம்பிகை துணை*

# வாழ்த்துமடல்

1814ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆலயத்திற்கு சின்னப்பு விதானையார் என்று அன்பாக ஊர் மக்கள் எல்லோராலும் அழைக்கப்பட்ட அமரர் (திரு. கயிலாயர் ஐயம்பிள்ளை விதானையார் -மிருசுவில்) அவர்கள் அறங்காவலராக இருந்த காலத்தில் அவர்களால் 1939ம் ஆண்டு ஆவணிமாதம் மூலஸ்தானம் 2ம் மண்டபம் வயிரவர் கோயில் முதலியன பொழிந்த வைரக்கற்களால் கட்டப்பட்டு சிறப்பாக மகாகும்பாபிஷேகமும் நடைபெற்றது பின்பு இடையிடையே சிறு சிறு திருப்பணிகள் நடைபெற்றாலும் தற்பொழுது நடைபெற்ற திருப்பணியே மிகவும் பெரிய திருப்பணி இத்திருப்பணியை ஆரம்பித்து நிறைவு செய்வதற்கு உறுதுணையாகவும் உந்துசக்தியாகவும் இருந்த பெருந்தகை சென்ற வருடம் பங்குனி மாதத்தில் நடை பெற்ற மகாசங்காபிஷேக விழாவில் ஆலய அறங்காவலரிடம் "தம்பி காசு இல்லையென்று யோசிக்காதே நீ திருப்பணி வேலையைத்தொடங்கு அம்பாள் அருளும் பணமும் வந்து சேரும்" என்ற அருள் வாக்கை அன்று கூறியவர் எங்கள் மகோற்சவ குருவும் துன்னாலை இந்திர அம்பாள் தேவஸ்தான அறங்காவலரும் பிரதம குருவும் ஆகிய சக்தி உபாசகதீரர் சிவ ஸ்ரீ இந்திரராச குருக்கள் அவர்கள் அவரின் பொன்னான அருள் வாக்கின்படி கடந்த வருடம் 2013 ஆனி மாதம் திருப்பணிகளை ஆரம்பித்தோம் குறிப்பாக கண்ணகை அம்பாளுக்கு தனி ஆலயமும் இந்தியா அவினாசிலட்சுமி கலைக்கூடத்தில் எங்கள் ஆலயத்துக்கென்று செதுக்கி நேரடியாக இங்கு தருவிக்கப்பட்ட நவக்கிரகங்கள் புதிதாகக் கட்டிய நவக்கிரககோயிலில் பிரதிஸ்டை செய்தும் தனியாக அமைத்த கோயிலில் சண்டேஸ்வரரும் பிரதிஸ்டை செய்யப்பட்டது இவைகளை எல்லாம் தான் பிரதம சிவாச்சாரியாரக இருந்து ஏனைய சிவாச்சாரியார்களுடன் சேர்ந்து இன்று தை மாதம் 27ம் திகதி (09. 02. 2014) சிறப்பாக மகா கும்பாபிஷேகம் நடாத்தி வைத்துள்ளார் இவரின் சிறந்த சேவையை மதித்து பாராட்டி இவரின் இருபாதங்களையும் வணங்கி எங்கள் ஊர்மக்களும் ஆலய நிர்வாகிகளும் சேர்ந்து "பிரதிஸ்ட சிரோன்மணி" என்ற பட்டத்தை வழங்கி கௌரவிக்கிறோம்.

இந்த அரிய வாழ்த்து மடலை இங்கு எழுந்தருளியிருக்கும் நல்லை ஆதீனம் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களின் திருக்கரங்களால் அறிஞர்களும் பெரியோர்களும் பெருந்தொகையான அடியார்களும் குழுமி இருக்கும் இவ்விழாவில் குருக்கள் அவர்களுக்கு வழங்குகின்றோம்

- சுபம் -

*அ.குமாரசாமி*
*அறங்காவலர்/ தலைவர்*

*க.கணபதிப்பிள்ளை*
*காரியதரிசி*

அம்பிகை துணை

# வாழ்த்துமடல்

சுமார் (200) வருடங்களுக்கு முந்திய எங்கள் மேற்படி ஆலயத்தின் மகாமண்டபமும் தரிசன மண்டபமும் (3ம்,4ம் மண்டபங்கள்) மிகவும் பழமை வாய்ந்தவை இவற்றை இடித்து புதிதாக அழகிய கட்டிடக்கலையுடன் இரு மண்டபங்களும் அமைத்து வர்ணம் பூசியும் மேலும் உள்வீதியில் பல சிற்பங்களுடன் கூடிய ஒரு அழகான கண்ணகைஅம்மன் கோயில், நாகதம்பிரான் கோயில், யாகசாலை, வசந்த மண்டபம் ஆகியவற்றை மிக அழகாக கட்டி ஆலயத்துக்கு வர்ணம் பூசி இன்னும் பாரிய வேலைகளை குறித்த நேரத்தில் ஆனி மாதம் 2013ல் தொடங்கி 31.10.2013ல் குறிப்பிட்ட காலத்தில் முடித்துதந்த இளம் கட்டிடசிற்பி (27வயது) ஐயனார் கோயிலடி அராலி கிழக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு றமேஸ்குமார் றகு என்பவருக்கு அவருடைய கட்டிடத்திறமையை உணர்ந்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற குறிக்கோளுடன் வாழும் இவருக்கு இவ்வூர் மக்களும் தேவஸ்தான நிர்வாகிகளும் சேர்ந்து *"ஆஸ்தான கட்டிட கலைமாமணி"* என்ற பட்டத்தினை இன்று (09-02-2014) நடைபெறும் இவ்வாலய மகாகும்பாபிஷேகத்தில் ஆலய மண்டபத்தில் பெருந்திரளான மக்களும் அறிஞர்களும் பெரியோர்களும் சூழ்ந்த இவ்விழாவில் அவரை கௌரவித்து இந்த பட்டம் அளித்து வாழ்த்துமடலை நல்லை ஆதீனம் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களின் திருக்கரங்களால் வழங்கப்படுகின்றது

- சுபம் -

*அ.குமாரசாமி*
*அறங்காவலர்/ தலைவர்*

*க.கணபதிப்பிள்ளை*
*காரியதரிசி*

## மிருசுவில் (கொட்டிகை)கோவிற்குளம் அம்பாள் தேவஸ்தான
## மகா கும்பாபிஷேகம் 09-02-2014

மேற்படி ஆலயத்தில் கும்பாபிஷேக தினத்தன்று பிரதிஸ்டை செய்ய இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட நவக்கிரகங்களும் சண்டேஸ் வரியும் 02.02.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் வழமையாக அம்பாள் உலாவரும் பாதைகளில் ஊர் உலா வந்து மிருசுவில் தெற்கிலும் வடக்கிலும் உள்ள சைவ ஆலயங்களுக்கும் சென்று திரும்பவும் ஆலயம் வந்து சேரும்

### முக்கிய குறிப்பு

09.02.2014 ஞாயிற்றுக்கிழமை மாகா கும்பாபிஷேகமும் அதைத் தொடர்ந்து நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளும் முடிவுற்றதும் நேயம் சமூக நிலையத்தின் சார்பில் அங்கு நடனம் பயிலும் மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

~ நன்றி -

*இங்ஙனம்*

**ஆலய நிர்வாகத்தினரும்**

**விழா உபயகாரர்களும்**

உ

*சிவமயம்*

# மிருசுவில் (கொட்டிகை) கோவிற்குளம் அம்பாள் தேவஸ்தான மகாகும்பாபிஷேக நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றதும் நடைபெறும் நிகழ்வுகள்

*சிறப்பு நிகழ்ச்சிகள் - 09.02.2014*

*காலை 9.30 -தேவாரம்.*

*வரவேற்புரை - ஆலய அறங்காவலர் திரு.அ.குமாரசாமி (J.P)*

*ஆசியுரைகள்*

1. நல்லை ஆதீன குரு முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
2. வேதாகம சிவசுரபி பண்டிதர் கலாநிதி து.க ஜெகதீஸ்வரக்குருக்கள்(துரீ) (நல்லை ஆதீன சிவாச்சாரியார்)
3. எங்கள் தேவஸ்தான மகோற்சவ குருவும் மகாகும்பாபிஷேக பிரதம சிவாச்சாரியார் சக்தி உபாசகதீரர் சிவ ஸ்ரீ சி.இந்திரராசகுருக்கள்.

## கௌரவிப்பு நிகழ்ச்சி

1. மகாகும்பாபிஷேக பிரதம சிவாச்சாரியார்
2. ஆலய நித்திய பூசை குரு சிவ ஸ்ரீ வை.வேலாயுதம் ஐயா அவர்கள்
3. ஆலய புனருத்தாரண கட்டட கலைஞர் அராலியூர் திரு.ரமேஸ்குமார் ரகு
4. கும்பாபிஷேக மலர் ஆசிரியர் இளஞ் சைவப்புலவர், அபிவிருத்தி உத்தியோகத்தர் (தொல்லியல் திணைக்களம்) திரு க.கயிலைவாசன் (B.A.Hons)

## சிறப்பு சொற்பொழிவு

- அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தலைவர் சித்தாந்த பண்டிதர் திரு.மு.திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள் - பொருள் "அம்பிகையின் அருள்"
- நிறைவுரையும் நன்றியுரையும் திரு.க.கயிலைவாசன் (B.A.Hons)
- நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுற்றதும் அன்னதானம் நடைபெறும்.உபயம் திரு.தம்பையா பாலேந்திரன் கொட்டிகை, மிருசுவில்.

*இங்ஙனம்*

**மிருசுவில் ஆலய நிர்வாகியும் அடியார்களும்**

*18.01.2014*



## மிருசுவில் (கொட்டிகை) கோவிற்குளம் அம்பாள் தேவஸ்தான மகா கும்பாபிஷேக (09-02-2014) நிறைவையொட்டி நடைபெறும் மண்டலாபிசேக உபயகாரர் விபரங்கள்

1.09.02.2014 மகா கும்பாபிஷேகம்

2.10.02.2014 திங்கள் திரு. பாலசுப்பிரமணியம் குடும்பம்
திரு. க.இராசரத்தினம் குடும்பம் (மிருசுவில் வடக்கு)

3.11.02.2014 செவ்வாய் திரு. கு.கதிர்காமநேசன் குடும்பம்
(மிருசுவில் வடக்கு)

4.12.02.2014 புதன் திரு.கு.நடராசா குடும்பம் (மிருசுவில் வடக்கு)

5.13.02.2014 வியாழன் திரு. த.முருகானந்தன் குடும்பம் (கொட்டிகை)

6.14.02.2014 வெள்ளி திருமதி.கந்தசாமி மீனாட்சி குடும்பம்
(மிருசுவில் வடக்கு)

7.15.02.2014 சனி அமரர் ஆறுமுகம் குடும்பம் (கொட்டிகை)

8.16.02.2014 ஞாயிறு திரு.தி.கமலநாதன் குடும்பம் (மிருசுவில் வடக்கு)

9.17.02.2014 திங்கள் திருமதி கந்தசாமி பொன்னம்மா குடும்பம்
(மிருசுவில் வடக்கு)

10.18.02.2014 செவ்வாய் திரு.சி.பொ.பாலசிங்கம் குடும்பம் (கொட்டிகை)

11.19.02.2014 புதன் திரு.சி.சிவதீபன் குடும்பம் (மிருசுவில் வடக்கு)

12.20.02.2014 வியாழன் திரு.க.பகீரதன் குடும்பம் (நாவலடி)

13.21.02.2014 வெள்ளி திரு.செல்வராசா குடும்பமும்
திரு.நாகன் யோகநாதன் குடும்பம் (மிருசுவில் வடக்கு)

14.22.02.2014 சனி திரு. தட்சணாமூர்த்தி பூமகள் குடும்பம் (கனடா)

15.23.02.2014 ஞாயிறு திரு.வி. ஏகாம்பரம் குடும்பம் (மிருசுவில் வடக்கு)

16.24.02.2014 திங்கள் திரு.க.கந்தர் குடும்பம் (மிருசுவில் வடக்கு)

17.25.02.2014 செவ்வாய் திரு.சு.மயூரன் குடும்பம் (மிருசுவில் வடக்கு)

18.26.02.2014 புதன் திரு.வே.சிவராசா குடும்பம் (கொட்டிகை)

19.27.02.2014 வியாழன் திரு.தி.சற்குணராசா குடும்பம் (ஆயத்தடி)

20.28.02.2014 வெள்ளி திரு.ச.யோகேஸ்வரநாதன் குடும்பம் (மிருசுவில் வடக்கு)

21.01.03.2014 சனி அமரர் திரு.வேலுப்பிள்ளை சின்னையா குடும்பம் (மிருசுவில் வடக்கு)

22.02.03.2014 ஞாயிறு அமரர் திரு.வேலுப்பிள்ளை செல்லையா குடும்பம் (மிருசுவில் வடக்கு)

23.03.03.2014 திங்கள் வேலுப்பிள்ளை சிறீரஞ்சன் குடும்பம் (கொட்டிகை)

24.04.03.2014 செவ்வாய் மகா சங்காபிஷேகம் அமரர் தம்பையா குடும்பம் (கொட்டிகை)

தினமும் அபிஷேகம்காலை 9.30மணிக்கு ஆரம்பமாகும். அடியார்கள் அபிஷேகத்திற்கு உரிய பால் தயிர் புஸ்பங்கள் இளநீர் முதலியன பொருட்களுடன் காலையில் நேரத்திற்கு வந்து கிரிகைகளில் கலந்து அம்பாள் திருவருள் பெற்றுச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறோம்

**ஆலய நிர்வாகிகள்**

மிருசுவில்.

*அம்பிகை துணை*

## மிருசுவில் (கொட்டிகை) கோவிற்குளம் அம்பாள் தேவஸ்தான பன்னிருமாத மாலைப் பூசை உபயகாரர்கள் விபரம்

| மாதங்கள் | உபயகாரரின் பெயர்கள் |
|---|---|
| தை மாதம் | திரு.சுப்பிரமணியம் பார்த்தீபன் குடும்பம்<br>மிருசுவில் வடக்கு, மிருசுவில் |
| மாசி மாதம் | திரு.கந்தையா நடராசா குடும்பம்<br>மிருசுவில் வடக்கு, மிருசுவில் |
| பங்குனி மாதம் | திரு.தர்மகுலசிங்கம் குடும்பம்<br>கொட்டிகை மிருசுவில் |
| சித்திரை மாதம் | திருமதி கோ.இராஜேஸ்வரி(ராசு) குடும்பம்<br>கொட்டிகை, மிருசுவில் |
| வைகாசி மாதம் | திரு T.கமலநாதன் குடும்பம்<br>மிருசுவில் வடக்கு, மிருசுவில் |
| ஆனி மாதம் | திருS.K.T.விஷயானந்தன் குடும்பம் |
| ஆடி மாதம் | திரு து. சண்முகம் (துரை) குடும்பம்<br>அம்மன்கோயில் வீதி, மிருசுவில் |
| ஆவணி மாதம் | திரு செ. குமாரசாமி (குமார்) குடும்பம்<br>குருக்கள் மாவடி, மிருசுவில் |
| புரட்டாதி மாதம் | திரு.செ. தர்மலிங்கம் குடும்பம்<br>கொட்டிகை, மிருசுவில் |
| ஐப்பசி மாதம் | திரு .செ. சிவநேசன் (சிவம்) குடும்பம்<br>மிருசுவில் வடக்கு, மிருசுவில் |
| கார்த்திகை மாதம் | திரு.செ. சிவபாலன் (சிவா) குடும்பம்<br>ஆயத்தடி, மிருசுவில் |
| மார்கழி மாதம் | திரு.சி.கணேசலிங்கம் (துரை) குடும்பம்<br>மிருசுவில் வடக்கு, மிருசுவில்<br>திரு.S.கந்தசாமி குடும்பம்<br>மிருசுவில் தெற்கு, மிருசுவில் |

## மிருசுவில் (கொட்டிகை) கோவிற்குளம் அம்பாள் தேவஸ்தான வரலாற்றில் பதிவாகிய நிகழ்வுகளில் சில

1. மூலஸ்தானம் - வைரக்கல்லு

மகா கும்பாபிஷேகம் - 30.08.1939

சின்னப்புவிதானையார் நிர்வாக காலம்

2. விநாயகர் பிரதிஸ்டை - 27.03.2003

குருக்கள் பிரம்ம ஸ்ரீ க.ச.சோமஸ்கந்தக் குருக்கள்-மட்டுவில்

செல்லத்துரை விதானையார் நிர்வாக காலம்

3. முருகன் பிரதிஸ்டை - 19.06.2003

குருக்கள் து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்

4. அன்னபூரணி அன்னதான மண்டபம்

திரு.S.நாகதேவன் - மிருசுவில் வடக்கு J/335 கிராமசேவகர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது - 08.06.2010

5. மகாகும்பாபிஷேகம்

நவக்கிரக பிரதிஸ்டை மற்றும் கண்ணகி கோவில், சண்டேஸ்வரர் பிரதிஸ்டை - 09.02.2014 குருக்கள் சக்தி உபாசகதீரர் சிவஸ்ரீ சிதம்பரப்பிள்ளை இந்திரராசக்குருக்கள் - துன்னாலை இந்திரன் அம்பாள் ஆலய பிரதம குருவும் தர்மகர்த்தாவும்

மிருசுவில் கொட்டிகை கோவிற்குளம் அம்பாள் தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் (09.02.2014) திருப்பணி மற்றும் மகாகும்பாபிஷேக நன்கொடை விபரம் (10.02.2014)

| இலக்கம் | நன்கொடையாளர்கள் | ரூபா |
|---|---|---|
| 1 | திரு. அ. குமாரசாமி குடும்பம் | 1,975,000 |
| 2 | திரு. செல்வநாயகம் துய்யந்தன் குடும்பம் | 911,360 |
| 3 | திரு. வை. சிவஅருட்செல்வன் குடும்பம் (லண்டன்) | 650,000 |
| 4 | திரு க. கணபதிப்பிள்ளை குடும்பம் | 650,000 |
| 5 | திரு. அ. பாலசுப்பிரமணியம் குடும்பம் (கொழும்பு) | 400,000 |
| 6 | திருமதி. தட்சணாமூர்த்தி பூமகள் குடும்பம் (கனடா) | 310,200 |
| 7 | அமரர். வே. செல்லையா குடும்பம் | 270,000 |
| 8 | அமரர். தம்பையா குடும்பம் | 202,000 |
| 9 | திரு. முருகானந்தன் சுதாகரன் (சுவிஸ்) | 200,000 |
| 10 | அமரர் வே.சின்னையா குடும்பம் | 151,100 |
| 11 | திரு. க. சுப்பிரமணியம் (வடக்கு மிருசுவில்) | 150,000 |
| 12 | திரு. ஆறுமுகம் பத்மநாதன் (கனடா) | 100,035 |
| 13 | அமரர் ஐ.மு தம்பு குடும்பம் | 100,000 |
| 14 | திருமதி கந்தசாமி பொன்னம்மா | 100,000 |
| 15 | திரு. ஏ. ஏகாம்பரம் | 100,000 |
| 16 | திரு. அ. நமசிவாயம் குடும்பம் | 100,000 |
| 17 | திரு. மு. இராசரத்தினம் குடும்பம் (கொழும்பு) | 100,000 |
| 18 | அமரர் சிவஞானம் குடும்பம் | 96,000 |
| 19 | திரு. க. கந்தர் (வடக்கு, மிருசுவில்) | 75,000 |
| 20 | திரு. சுப்பிரமணியம் குடும்பம் (அரசடி) | 65,000 |
| 21 | திரு. குமாரசாமி கதிர்காமநேசன் | 50,000 |
| 22 | திரு. கு. நடராஜா | 50,000 |
| 23 | திருமதி. அருட்பிரகாசம் யோகேஸ்வரி (கொழும்பு) | 50,000 |
| 24 | திரு. மு. யோகலிங்கம் (சுவிஸ்) | 50,000 |
| 25 | திரு நாகன் யோநாதன் | 50,000 |
| 26 | திரு. செல்லத்துரை சிவநேசன் | 50,000 |
| 27 | திரு. தி. கமலநாதன் குடும்பம் | 50,000 |
| 28 | திரு. க. மோகனதாசன் குடும்பம் (லண்டன்) | 50,000 |
| 29 | திரு. சி. பொ. பாலசிங்கம் | 44,000 |
| 30 | திரு. வல்லிபுரம் தனபாலசிங்கம் | 30,000 |
| 31 | திரு. கு.பிரகாஸ் (அவுஸ்ரேலியா) | 25,000 |
| 32 | திரு. எஸ். பிள்ளையினார் குடும்பம் | 25,000 |
| 33 | திரு. ப. பரணீதரன் குடும்பம் | 25,000 |
| 34 | திரு. க. கந்தசாமி | 20,000 |
| 35 | திரு. ஏ. வேலாயுதம் ஐயா குடும்பம் | 20,000 |
| 36 | திரு. கந்தையா கணேசலிங்கம் விடத்தற்பளை | 20,000 |
| 37 | திரு. முருகேசு தவநாதன (ராஜன) | 15,000 |
| 38 | திரு. செல்வநாயகம் அனுய்யந்தன் | 15,000 |
| 39 | திரு. சி. சிவரூபன் | 10,000 |
| 40 | திரு. தம்பு ஜெயானந்தன் | 10,000 |
| 41 | திரு. யோகநாதன் சசிகரன் | 10,000 |
| 42 | திரு. சந்திரசேகரராசா | 10,000 |
| 43 | திரு. ஏ. சிவானந்தம் வரணி | 10,000 |
| 44 | திரு. செல்லத்துரை நடேசு | 10,000 |
| 45 | திரு. க. திலகரத்தினம் | 5,000 |
| 46 | திருமதி. ருஞ்சரம் | 2,000 |
| 47 | திருமதி.அமிர்தலிங்கம் பத்மினிதேவி | 2,000 |
| 48 | திருமதி. வே.சரஸ்வதி (அரசடி) | 2,000 |
| 49 | திரு. அனந்தநேசன் (அளவெட்டி) | 2,000 |
| 50 | திரு. ஏ.மு.தம்பு (அல்லாரை) | 2,000 |
| 51 | திருமதி. சு.நாகம்மா | 1,500 |
| 52 | திரு. செல்லையா குடும்பம் நாவற்காடு | 1,000 |
| 53 | திரு. கணபதிப்பிள்ளை ஜெயம் மருதங்குளம் | 1,000 |
| 54 | திரு. ஐயாத்துரை (மன்னன்குறிச்சி) | 500 |
| 55 | திரு. சரவணமுத்து மருதங்குளம் | 500 |

| மிருசுவில் கொட்டிகை கோவிற்குளம் அம்பாள் தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் (09.02.2014) திருப்பணி மற்றும் மகாகும்பாபிஷேக செலவு விபரம் (10.02.2014) | | |
|---|---|---|
| இலக்கம் | விபரம் | ரூபா |
| 1 | அர்த்த மண்டப மகாமண்டப கட்டிடச் செலவுகள் | 1,995,300 |
| 2 | கண்ணகை அம்மன் கட்டிட செலவு | 650,000 |
| 3 | நவக்கிரக சிலைகள் உட்பட கட்டிடச் செலவு | 550,000 |
| 4 | யாகமண்டபம் முற்றிலும் புதிதாக இடித்துக் கட்டிய செலவு | 316,810 |
| 5 | சுற்றுமதில் கட்டடச் செலவு 2 இரும்புக் கதவுகளுட்பட | 294,550 |
| 6 | சண்டேஸ்வரர் சிலை உட்பட கட்டிடச் செலவு | 270,000 |
| 7 | நாகதம்பிரான் கட்டிட செலவு | 180,000 |
| 8 | வர்ணம் பூசுதல் செலவுகள் | 400,000 |
| 9 | பிரதான மண்டபம் கூரை திருத்த வேலைகள் | 365,180 |
| 10 | மின்சார ஒழுங்குச் செலவுகள் | 227,000 |
| 11 | மண்டபம் அச்சு வேலை (மடப்பள்ளி,களஞ்சியம் உட்பட) | 150,000 |
| 12 | வசந்தமண்டப புனருத்தாரண செலவு | 80,000 |
| 13 | கட்டிட சிறு திருத்த வேலைகள் செலவு | 120,000 |
| 14 | குருக்கள்மார் பூ'கர் தொண்டர்மார்களுக்குரிய தட்சணை | 385,000 |
| 15 | மகாகும்பாபிகே திரவியங்கள் மருந்து சாத்திச் செலவுகள் | 195,000 |
| 16 | மகாகும்பாபிகேத்திற்கு வேண்டிய உடுபுடவை (குருக்கள் வேட்டிசால்வை உட்பட செலவு | 195,000 |
| 17 | யாக குண்டம், யாகம் கட்டியது,கலசம் மற்றும் சுவாமி வைத்த மொத்த செலவு | 150,000 |
| 18 | நானாவித பொதுச் செலவு | 144,923 |
| 19 | கலசம், யந்திரத்தகடு ஆகியன | 120,000 |
| 20 | புதியபொம்மைகள் | 112,000 |
| 21 | பாலஸ்தான செலவுகள் | 75,000 |
| 22 | மேளம் வாத்திய செலவு | 75,000 |
| 23 | ஒலிபெருக்கி வசதிகள் | 60,000 |
| 24 | குருக்கள்மார் பூ'கர் தொண்டர்மார்களுக்குரிய ஆகார வசதிகள் | 39,500 |
| 25 | மகாகும்பாபிகேத்திற்குரிய பழவகைகள் | 35,000 |
| 26 | கோவில் திருப்பணி ஆச்சாரி தட்சணை | 30,000 |
| 27 | 5 புதிய வாங்குகள் | 29,000 |
| 28 | சுற்று வட்ட சுத்தகரிப்பு BAPCO இயந்திர மூலம் | 25,000 |
| 29 | இயந்திர பூசை செலவுகள் (ஆரம்ப பூர்த்தி செலவு | 25,000 |
| 30 | கும்பாபிகே நைவேத்தியங்கள் | 25,000 |
| 31 | பூமாலை வாங்கிய செலவு | 20,000 |
| 32 | வெள்ளை கட்டிய செலவு | 15,500 |
| 33 | திரைக் சீலைச் செலவு | 13,000 |
| 34 | தாமரைப்பூக்கள் கொழும்பிலிருந்து வருவித்த செலவு | 6,000 |

# நன்றியுரை

மகா கும்பாபிஷேக கிரியைகள் தொடங்கிய நாள் 05.02.2014 தொடக்கம் மண்டலாபிஷேகம் இறுதி நாள் 04.03.2014 வரையும் ஓமத்திற்கு தேவையான சகல சமித்துகளும் பல சிரமங்களுக்கு மத்தியில் கொடுத்துதவிய ஆலயத்தொண்டர்கள் திரு .க. ரவி திரு. செ. குமாரசாமி திரு. சு. கயிலநாதன் திரு. க. ரவிராஜ் ஆகியோர்களுக்கும்

சிரமதான பணிகளில் பங்கேற்ற சகல அடியார்களுக்கும் வாகன உதவி வழங்கிய திரு.சு. பாஸ்கரன் திரு. த. பாலேந்திரன் திரு. ந. மகேந்திரன் முதலானோருக்கும்

ஆலயத்தையும் சுற்றுப்புறங்களையும் கூட்டி துப்பரவு செய்த பெண் தொண்டர்களுக்கும் மிருசுவில் வடக்கு தெற்கு மாதர்சங்க தொண்டர்களுக்கும் குறிப்பாக தினமும் ஆலயத்தைப்பெருக்கும் ஆலயத் தொண்டர்கள் அனைவருக்கும்

அன்னதான மடத்திற்கும் பொறுப்பாக இருந்து சகல வேலைகளையும் சிறப்பாக செய்து முடித்த திரு. வேலாயுதம் ராசன் திரு. சுப்பிரமணியம் நிரஞ்சன் அவர்களுக்கும்

களஞ்சியப்பொறுப்பாளராக இருந்த து. சண்முகம் செ. குமாரசாமி ஆகியோருக்கும் உற்சவகாலம் முழுவதும் பூமாலை அலங்காரம் செய்த ஜெ. ஜெகநாதன் அவர்களுக்கும்

ஒலி ஒளி வழங்கிய கெற்பேலி மேற்கு மிருசுவில் திரு. கு. கணேசலிங்கம் மற்றும் மங்கள வாத்தியம் வழங்கிய கைதடி திரு. பவளம் குளுவினர் ஆகியோருக்கும்

உற்சவ நாட்கள் முழுவதும் பல வழிகளிலும் தன்னலம் கருதாது அளப்பரிய சேவைகள் செய்த ஆலய நித்திய குரு சிவ ஸ்ரீ .வை. வேலாயுதம் ஐயா அவர்கட்கும் மற்றும் இவரோடு இணைந்து ஆலய பூசைகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்த திரு .சு. குகன் ஐயா (குருக்கள் மாவடிப்பிள்ளையார் தேவஸ்தான நித்திய குரு) அவர்களிற்கும்

கட்டடத்திருப்பணிகள் மகா கும்பாபிஷேகம் முதலியவற்றுக்கு நிதி உதவியும் பல்வேறு வழிகளிலும் பலவித உதவிகளும் வழங்கிய அனைவருக்கும் மற்றும் தற்பொழுது ஆலய நிர்வாகத்தை கவனித்துக்கொண்டிருக்கும் திரு .நமசிவாயம் கமலேந்திரன் (சந்திரா) அவர்களுக்கும்

கும்பாபிஷேக நிகழ்வுகளை புகைப்படம் எடுத்த திரு. பிரபாகரன் - இளவாலை மற்றும் இந்நிகழ்வுகளை வீடியோ எடுத்த கிருபா- அல்லாரை அவர்களிற்கும் மற்றும் அனைவருக்கும் அம்பாள் அருள் கிடைக்க வேண்டி பிரார்த்திப்பதுடன் மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்

~ நன்றி ~

**மலர்க்குழுவினர்**



மிருசுவில் கோவிற்குளம்

அருள்மிகு (கொட்டிகை) அம்பாள் சித்திரத்தேர்